26 வது ஆண்டில்
கனடாவின் முத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
உங்கள் வாகன, வீட்டு (for your Home & Auto) காப்புறுதிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும்

துரித பணமாற்றுச் சேவையில் முன்னோடிகள்
மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி 26 | பாலம் 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2016

# மீண்டும் தமிழக முதல்வரானார் ஜெயலலிதா

தமிழக முதல்வராக 6வது முறையாக அதிமுக பொதுச்செயலாளர் ஜெயலலிதா 2016 மே 23இல் பதவியேற்றார். அவருக்கு



பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்புறுதி மொழியையும் ஆளுநர் ரோசய்யா செய்து வைத்தார். ஜெயலலிதா ஆண்டவன் பெயரில் உறுதி மொழி எடுத்துக் கொண்டார்.

முதலாவது சட்டசபை அமைந்த காலத்திலிருந்து காங்கிரஸ் கட்சியின் காமராஜர் 2 முறையும், எம்.ஜி.ஆர் 3 முறையும் திமுக தலைவர் கருணாநிதி 5 முறையும் முதல்வர்களாக இருந்துள்ளனர். 6 வது முறையாக பதவியேற்ற முதல் முதல்வர் என்ற பெருமையை ஜெயலலிதா பெற்றுள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவைத் தொடர்ந்து 28 அமைச்சர்கள் 2016 மே 23இல் பதவியேற்றனர். 4 அமைச்சர்கள் 2016 மே 25 இல் பதவியேற்றனர். இதன் மூலம் ஜெயலலிதாவின் அமைச்சரவையில் 32 அமைச்சர்கள் இடம்பெறுகின்றனர். 15வது சட்டசபைக்கு நடந்த தேர்தலில் 134 தொகுதிகளில் வெற்றி பெற்று அறுதிப் பெரும்பான்மையுடன் அதிமுக ஆட்சி அமைக்கிறது. முதல்வர் ஜெயலலிதாவுடன், 28 பேர் அமைச்சர்களாகப் பதவியேற்ற விழா சென்னை பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் நடைபெற்றது. ஜெயலலிதாவைத் தொடர்ந்து அமைச்சர்கள் பதவியேற்றனர். முதலில் 14 அமைச்சர்கள் பதவியேற்றனர். அடுத்ததாக 14 அமைச்சர்கள் மொத்தமாக பதவி பிரமாணம் எடுத்துக்கொண்டனர். பின்னர் ஆளுநருடன் புதிய அமைச்சரவை குழு புகைப்படம் எடுத்துக் கொண்டது.

தமிழ்நாட்டின் 15ஆவது சட்டசபைக்கான தேர்தல் 2016 மே 16இல் நடந்தது. அதை தொடர்ந்து வாக்குகள் 2016 மே 19 இல் எண்ணப்பட்டன. தமிழ் நாட்டின் சட்டசபைக்கு 234 தொகுதிகள் உள்ளன. அவற்றில் 2 தொகுதிகள் வாக்குப்பதிவு

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
LEXUS
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

கனேடிய
இலங்கை
இந்திய
சர்வதேச
விளையாட்டு
செய்திகளை
உடனுக்குடன்
வாசிக்க
tamilvanakkam.com

MORTGAGE
For all your Mortgage
We Deal with all banks
Any situations
NESAN 416-908-5656
SUBRA Financial Solutions Inc.
1585 Markham Rd, Unit #407A,
Toronto, M1B 2W1

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
416-712-2006
5-Years Fixed at 2.49%
Lock your mortgage while interest rates are low!

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-65
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847
kulasingam33@yahoo.ca


Homes, Condos, Business, Land, Farms, Rural Homes...!
Scarborough/Kingston Rd
$599000.00
4 yrs 2100 sft, 4 bm 3 wsrm semi detach
Warden n St clair
3 bm/ 3 wsrm minutes to subway
Sheppard Ave E & Hwy404
412,888/-
Newer Monarch Condo rented 1800/- investment, South/West Corner Suite With Unobstructed City View. Excellent Layout 876 Sq. Ft.+ 55 Sq. Balcony, Hardwood; Fairview Mall & Subway; Minutes To Hwy 404&401. Concierge, Large Exercise Room, Indoor Swimming Pool, Guest Room, Steam Room, Bbq Deck Fr Entertaining, Designer Decorated Special Occasion/ Party Room With Server Y, Bar Area, Seating Lounge , Flat Scream Tv , Billiard Table
Markham /castlemore
3 bm 4 wsrm 2900 sqft $1149k
Kawartha Lakes ontario
611.84 Acre
611+ Acres In 3 Separate Par-
Eglinton/mccowan
3 bm/ 3 wsrm minutes to subway
Near Simcoe lake
3260 Sqf Ft Apb On A 50 Foot Lot.
4 bm 4 wm new home
0.5% Listing commission
Pat Pushpakanthan
Real Estate Broker
Hall of Famer
Our MLS listing include:
Free Professional Photography
Free Professional virtual tour
Free custom website of your home
Free Home Staging
Free Feature Sheets
Free UTube Video
Free Online Marketing
, Open house and more..
416-894-1187
PAT WILL BEAT ANY DEAL*!!
To buy Home, New Condos, commercial, Farms, Lands..
Call Me For Free service!
Century 21
AFFILIATE REALTY INC
OFF: 416-290 1200
poomi2025@gmail.com
Profit From 15 years of Real estate Success
*From , valid only upto june 15/16, *Not intended to solicit existing buyers and sellers, under contract
Eglinton/ Midland
$519k
Newer Roof Shingles ***
Hardwood Floor 3 bm/ 2wsrm
County Road 47 Rd Ramara on
$155 k 99 acres
On Paved Road Near Brechin And Lake Simcoe ,Vacant Land
Kingston Rd/ West Of Midland
Store With Apt/ Restaurant
Great Opportunity For Invest-ment Property Or Own To Operate Your Restaurant


STOUFFVILLE
UNISEX BEAUTY SALON & SPA
LADIES, GENTS, KIDS SKIN&HAIR CARE
ANY STYLE HAIR CARE FOR EVERYONE
Basic Cut: $13
Layer Cut: $18
Step Cut: $18
U Cut: $15
V Cut: $15
Hair Oil Massage: W $15, $ 18
Hair Ironing: $20
Hai Colouring: $25
(Black Root Touch up)
Ful Hair Colour: $35 Black
Fashion Colour: $35 & up
Highlighting: $40 & up
Straightening: $130 & up
(Permanent)
Hair Wash: $10 & up
(with conditioner & Blow Dry)
Facial: $ 25, $ 35, $45
(with conditioner & Blow Dry)
Ear Piercing $20 & up
Paraffin Treatment $10 & up
Detox $25 & up
Any style hair cut for women, men & kids
$8, $10, $13, $17, $20, $23
Tel : 905 554 2425
Pirabha: 647 867 5696
18 Ringwood Dr, UNIT 12 Whitchurch-Stouffville, ON L4A 8C1


Friends
MATRIMONY
திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...
சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்
5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
அல்லது தொலைபேசி, தபால், email லூடாக பதிவு செய்யலாம்
info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here
அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m
Sri Lanka
Ph: 94-112-363663
No-11- 2/1, 33rd lane,
Wellawatta,
Canada
info: 647-709-1536
GTA Square
5215 Finch Ave. E. Unit 257

# மீண்டும்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

2016 யூன் 13ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது. மிகுதி 232 தொகுதிகளுக்குமான தேர்தல் முடிவுகளின்படி ஜெயலலிதா தலைமையிலான அதிமுக 134 தொகுதிகளையும் கருணாநிதி தலைமையிலான திமுக, காங்கிரஸ் கூட்டணி மொத்தமாக 98 தொகுதிகளையும் கைப்பற்றின. பெரும்பான்மை அரசை அமைக்க 118 தொகுதிகள் தேவை.

தமிழக முதல்வராக ஜெயலலிதா பதவியேற்றவுடனேயே தனது தேர்தல் பிரசாரங்களில் கொடுத்த வாக்குறுதிகளில் ஐந்தை நிறைவேற்றும் உத்தரவுகளில் கையெழுத்திட்டார்.

இம்முறை தேர்தல் பிரசார காலத்தில் ‘மதுவிலக்கு’ ஒரு முக்கிய விடயமாக பேசப்பட்டது. திமுக உட்பட பல கட்சிகள் தாங்கள் பதவிக்கு வந்தால் உடனடியாகவே மதுவிலக்கை அமல்படுத்துவோம் என்றனர். ஆனால் ஜெயலலிதாவோ மதுவிலக்கை பூரணமாக அமல்படுத்துவது முடியாத காரியம். ஆனால் தான் பதவிக்கு வந்தால் மதுவிலக்கை படிப்படியாக அமல்படுத்துவதாக உறுதியளித்திருந்தார். அவ்வாறே அவரும் முதல்வராக பதவியேற்றவுடன் அரச மது விற்பனை நிலையங்கள் (TASMAC) 500ஐ மூடிவிட உத்தரவிட்டார். மீதமுள்ள அரச மது விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கும் நேரத்தையும் 2 மணித்தியாலங்கள் குறைக்கவும் உத்தரவிட்டார். தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட ஏழாயிரம் அரச மது விற்பனை நிலையங்கள் உள்ளன.



அடுத்த தேர்தல் வாக்குறுதியாக மின்சாரக் கட்டணத்தில் சலுகை அளிப்பதாக கூறியிருந்தார். அதேபோல் அவர் முதல்வராக பதவியேற்றவுடன் வீடுகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு முதல் 100 Unit வரை கட்டணம் அறவிடப்படமாட்டாது என உத்தரவிட்டுள்ளார். இத்திட்டம் 2016 யூன் மாதத்தில் இருந்து அமலாக்கப்பட உள்ளது.

இதைவிட மற்றைய தேர்தல் வாக்குறுதிகளான தாலிக்கு 8 கிராம் தங்கம் இலவசமாக வழங்கும் திட்டத்தை அமல்படுத்தும் உத்தரவிலும், விவசாயிகளின் ரூ5,780 கோடி மதிப்பிலான பயிர் கடன்களை தள்ளுபடி செய்யும் உத்தரவிலும் கையெழுத்திட்டார்.

ஆட்சிக்கு வந்த முதல்நாளே தான் அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் முதல் ஐந்தையும் நிறைவேற்றி சாதனை புரிந்துள்ள தமிழக முதல்வர் ஜெயலலிதாவை எதிர்கட்சிகளை சேர்ந்த பல தலைவர்கள் வாழ்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்காலிக சபாநாயகராக பதவி ஏற்ற செம்மலை புதிய சட்டசபை உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார். அவரே ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் சட்டசபைக்குள் வந்த திமுக தலைவர் கருணாநிதிக்கும் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். கருணாநிதி 15வது சட்டசபையில் 13ஆவது முறையாக பதவியேற்றார். சட்டசபையில் சாய்ந்து இருக்கும் வசதியோடு கூடிய மாற்றுத் திறனாளிகளிற்கான இருக்கை இல்லை என்பதால் கடந்த ஐந்து ஆண்டுகளும் சட்டசபைக்குள் கருணாநிதி வரவில்லை. தற்போது சாய்ந்திருக்கும் வசதி உள்ள மாற்றுத்திறனாளிகளிற்கான இருக்கை அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் கருணாநிதி சட்டசபைக்குள் வந்து சத்தியப் பிரமாணம் செய்தார். சட்டசபையில் திமுக பிரதான எதிர்க்கட்சியாக உள்ளது. சட்ட சபையில் திமுக கட்சியின் தலைவராகவும், எதிர்க்கட்சிதலைவராகவும் மு.க. ஸ்டாலின் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ்நாட்டில் இந்த 15ஆவது சட்டசபை கம்யூனிஸ்ட் கட்சிகளை சேர்ந்த ஒரு உறுப்பினரும் இல்லாத முதல் சட்டசபையாக அமைகிறது. கடந்த சட்டசபையில் இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகளை சேர்ந்த 19 உறுப்பினர் இருந்தனர். இதற்கு முன்னர் 1991 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்ட சட்டசபையிலேயே மிகக்குறைந்த உறுப்பினர்களாக இருவர் இருந்தனர்.

இம்முறை தேர்தலில் 74% ஆன வாக்காளர்கள் தங்கள் வாக்கை பதிவு செய்திருந்தனர். இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின்படி எந்த ஒரு வேட்பாளருக்கும் வாக்களிக்க விரும்பாத வாக்காளர் ‘நோட்டா’ (NOTA) எனப்படும் அனைத்து வேட்பாளருக்கும் எதிரான வாக்கு அளிக்கும் (None of the above) இடத்தில் அழுத்துவதன் மூலம் தமது வாக்கை அளிக்கலாம். இம்முறை நடைபெற்ற தமிழ்நாட்டின் சட்டமன்ற தேர்தலில் 1.31% ஆன மக்கள் (561,244 பேர்) இந்த NOTA இற்கு தமது வாக்கை அளித்திருந்தனர். இது பல கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையை விட அதிகம் ஆகும்.

30 தொகுதிகளை கொண்ட புதுச்சேரி சட்டமன்றத்திற்கும் 2016 மே 16 இல் தேர்தல் நடந்தது. அங்கு காங்கிரஸ் 15 இடங்களிலும் திமுக 2 இடங்களிலும் வெற்றி பெற்று காங்கிரஸ் திமுக கூட்டணி அரசு அமைக்கிறது. அதிமுக 4 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றுள்ளது. இங்கு 84.11% ஆன வாக்காளர்கள் வாக்கை பதிவு செய்திருந்தனர். இங்கும் NOTA இற்கு 1.7% ஆன மக்கள் வாக்களித்திருந்தனர்.



# சிங்கள மக்கள் மத்தியில் குற்ற உணர்ச்சியை தூண்ட வேண்டும்

## நிலாந்தனுடன் நேர்காணல்



கடந்த இதழ் தொடர்ச்சி

கேள்வி - தமிழர் தரப்பு தங்களுக்கான தீர்வாக சமஷ்டியை முன்வைத்து வருகின்ற நிலையில், தென்னிலங்கையில் சமஷ்டி என்றால் பிரிவினை என்று பிரச்சாரப்படுத்தப்படுகின்றது. சாதாரண சிங்கள மக்களின் சந்தேகங்களையும் அச்சத்தையும் போக்கும் வகையில் கலந்துரையாடல்களை தமிழர் தரப்பு மேற்கொள்ளலாம் அல்லவா?

நிலாந்தன் - இது கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்று. சமஷ்டிக்கு மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் இது அவசியமானது. எப்போதுமே எங்கள் அயலவர்களாக இருக்கப் போகின்றவர்கள் சிங்கள மக்கள் தான். இதன்மூலம் தீர்வை நோக்கியும் நகரலாம், நல்லிணக்கத்தை நோக்கியும் நகரலாம். தமிழர்கள் மத்தியிலிருக்கும் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், கருத்துருவாக்கிகள் சிங்கள மக்கள் மத்தியில் குற்ற உணர்ச்சியைத் தூண்ட வேண்டும்.

ஆயுதப் போராட்டம் நடக்கின்ற வேளையில் அதனைப் பற்றி சிந்திப்பது கடினம். ஏனெனில், இரண்டு இனங்களும் யுத்த களத்திலிருந்தன. இப்போது, தமிழர்கள் ஒரு தோற்கடிக்கப்பட்ட தரப்பாகவும் சிங்களவர்கள் வெற்றி பெற்ற தரப்பாகவும் அவர்கள் உணர்வதை இதன் மூலம் இல்லாமல் செய்யலாம். அவர்களின் குற்ற உணர்ச்சியை எவ்வாறு தூண்டுவது என்று பார்த்தால், உதாரணத்திற்கு, இசைப்பிரியாவின் படத்தை அங்குள்ள மக்களிடம் எடுத்துச் செல்லலாம். இதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்று அவர்களிடம் கேட்கலாம். உங்களுடைய பிள்ளையைப் போன்றவள் தானே இந்தப் பெண்ணும்..? உங்கள் பிள்ளைகள் காலையில் வெளியே செல்லும்போது, உங்களின் கால்களில் விழுந்து வணங்கிவிட்டுச் செல்கின்றார்கள். இந்தப் பிள்ளையும் உங்களது மகளைப் போல, சகோதரியைப் போல ஒருவர்தான். இவருக்கு நடந்தது சரியா..? நீங்கள் இதனை ஏற்றுக்கொள்வீர்களா? என்று கேட்க வேண்டும். இவ்வாறு தொடங்கினாலேயே சிங்களவர்களின் குற்ற உணர்ச்சி தூண்டப்படும். இசைப்பிரியாவின் உருவம் ஒரு பண்பாட்டின் உருவம்- பண்பாட்டின் முகம் அது. அவ்வாறு அதனைக் கொண்டு செல்லும்போது, குற்ற உணர்வு சிங்கள மக்கள் மத்தியில் கட்டாயம் தூண்டப்படும்.

இவ்வாறானதொரு பரிசோதனை முயற்சியை எங்கள் தமிழ் தரப்பிலிருந்து யாருமே செய்ய முயலவில்லை. இப்பவும் நாங்கள் வெட்டிவிடுவதைப் பற்றி சிந்திக்கின்றோம் வெட்டிவிட்டாலும் கூட அவர்கள்தாம் எங்கள் அயலவர்கள். சிங்கள மக்களுக்கு தமிழ் மக்கள் தொடர்பில் அச்சமிருக்கின்றது என்றால்- அது எங்கிருந்து வருகின்றது என்றால் - இந்தியாவுடன் தமிழரை இணைத்துப் பார்ப்பதால்தான் இந்த அச்சம் வருகின்றதென்று அரசியல் அறிஞர்கள் சொல்கின்றார்கள். அரசியல் விவகாரத்தில் கூட தமிழ் மக்களை தோற்கடிக்க வேண்டும் என்று கருதும் தரப்புத்தான் சிங்கள மக்கள் மத்தியில் இந்த அச்சத்தை தூண்டுகின்றது. தமிழ் மக்களும் சிங்கள மக்களும் சமமானவர்கள் - சகஜீவிகள் என்ற அடிப்படையில், தங்களுக்கிடையில் ஒரு நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் நம்புவார்கள் என்றால், தமிழ் மக்களை தோல்வி கண்ட தரப்பாக வைத்திருக்க அவர்கள் விரும்ப மாட்டார்கள். சிங்கள மக்களின் குற்ற உணர்வை தூண்டாத வரைக்கும் சிங்கள பௌத்த கருத்தியல்வாதத்தை தோற்கடிக்க முடியாது.

கேள்வி- ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பின்னர், தேசிய கலந்துரையாடல் அமைச்சு என ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. மனோ கணேசன் தலைமையில் இந்த அமைச்சு உள்ளது. இதனைப் பயன்படுத்தியே மேற்சொன்ன கலந்துரையாடலை ஆரம்பிக்கலாம்.

**தொடர்ச்சி 06ஆம் பக்கம்...**




# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல் பிரச்சினையா?

நல்ல ரேட்ல மோட்கேஜ்,
லைன் ஒப் கிரெடிட்,
ரீபைனான்ஸ்,
2வது, 3வது மோட்கேஜ்,
பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்,
அனைத்து கடன்களையும் ஒன்றாக்க



MORTGAGE IN ANY SITUATION

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

"மோட்கேஜ் கிளினிக்"

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011




**வோக் இன் - 9.00 am- 5.00 pm**

உங்கள் மாதாந்த மோட்கேஜ் கொடுப்பனவுடன் Credit Card, Car Loan, Personal Loan, Line of Credit மற்றும் ஏனைய அதிகளவு வட்டி செலுத்தும் கடன்களை ஒன்று படுத்தி எவ்வாறு உங்களது மாதாந்த கடன் சுமையை குறைப்பது???

5 Yrs Fixed Rate : 2.49 %
5 Yrs Variable : CALL US
*OAC

எமது முகவரி

**1504 Markham Rd,**
**Toronto, ON, M1B 2V9**
**(Markham & HWY 401)**



MORTGAGE ALLIANCE
Lic # 10530
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4
Toll Free : 1-877-366-3487

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428

**Cell : 416-624-4843**

# கனடாவின் # 1 மோட்கேஜ் நிறுவனம்

# சிங்கள மக்கள்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆனால், அவ்வாறு இணைந்து செயற்படுவது பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் சிந்திக்கவில்லை. அதனை அவர்கள் விரும்பவில்லை என்ற விமர்சனமும் உள்ளது. ஏனிந்த மனோபாவம்?

நிலாந்தன் - நான் நினைக்கவில்லை கூட்டமைப்பின் உயர்மட்டத்தில் இவ்வாறான மனோபாவம் இருக்கிறதென்று. வட மாகாண சபையில் அவ்வாறு விமர்சனங்கள் இருக்கலாம். வடக்கின் முதலமைச்சர் சில வேளைகளில் உறைப்பான கருத்துக்களை வெளியிட்டு வந்தாலும், அவரும் ஒரு தெற்கு மைய அரசியல்வாதிதான். அவருடைய வேர் முழுவதும் தென்னிலங்கையில்தானிருக்கின்றது. அவர் சில சமயங்களில் உரத்துப் பேசுகிறார் என்பதற்காக அவரை யாரும் பிரிவினைக்கு ஆதரவானவராக கருத முடியாது. இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூடிக் கதைத்து சில முடிவுகளை எடுக்க வேண்டும். கடந்த ஏழு வருடங்களாக தமிழ் மக்களின் அரசியலை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வது குறித்து சரியான கலந்துரையாடல்கள் நடத்தப்படவில்லை. நாம் இன்னும் இறந்த காலத்தை பிரேத பரிசோதனைக்குட்படுத்த விரும்பவில்லை. அவ்வாறு செய்யாவிட்டால் நாம் எதிர்காலத்தை திட்டமிட முடியாது.

- விகிர்தன் -

கேள்வி- ஆயுதப் போரை விடுதலைப் புலிகள் நடத்திக்கொண்டிருந்த காலகட்டத்தில் கூட, இடையிடையே வருகின்ற சமாதான இடைவெளிகளின் போது தென்னிலங்கை மக்களோடு கலந்துரையாடுகின்ற - சிங்கள கலைஞர்களுடன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து நடத்திய காரியங்கள் எல்லாம் நடைபெற்றிருக்



கின்றது. 'தமிழ், சிங்கள கலைக்கூடல்' கொழும்பில் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் 'மானுடத்தின் கூடல்' என்ற மாநாடு நடைபெற்றது. தமிழ் அறிஞர்கள், கலைஞர்களுடன் தென்னிலங்கை சிங்கள அறிஞர்களும், கலைஞர்களும் கலந்து கொண்டனர். இவற்றையும் விட, சிங்கள மக்களுக்கு தெளிவூட்டும் வகையில் 'தேதுன்ன' என்ற சிங்கள பத்திரிகை ஒன்றையும் விடுதலைப் புலிகள் பிரசுரித்தார்கள். அவற்றில் சிறு அளவைக் கூட இப்போது செய்ய முடியாமலிருப்பதற்கு காரணம் என்ன?

நிலாந்தன்- முன்னர் அவற்றை விடுதலைப்புலிகள் செய்யும்போது யாரும் சந்தேகிக்கவில்லை. அவர்கள் போராடுகின்றார்கள், யுத்த களத்தில் உயிர்களை துறக்கின்றார்கள் என்கின்ற போது அவர்கள் எதைச் செய்தாலும் அதனை ஒரு இராஜதந்திரமாகவே பார்க்கும் நிலை இருந்தது. இப்போதிருக்கின்ற தமிழ் அரசியல்வாதி யாரேனும் ஒருவர் இவ்வாறான விடயங்களை செய்தால், அவர் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் போய்விட்டார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படும். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் ஏன் வருகிறது? இன்றுள்ள தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முழுப் பொறுப்பேற்று, அர்ப்பணிப்புடன் செயற்படுவார்கள் என்றால், இவ்வாறான குற்றச்சாட்டு எழாது. அவர்கள் தமிழ் மக்களை பொறுப்பேற்காத வரையில், அவர்களை சந்தேகமாக பார்க்கும் நிலைதானிருக்கும். புலிகள் பிரேமதாசாவுடன் கை குலுக்கும் போதோ அவர்களுடன் சேர்ந்து விருந்துண்ணும் போதோ, யாரும் அதனை கேள்வி கேட்கவில்லை. இங்குள்ள அரசியல்வாதி ஒருவர் தென்னிலங்கை அரசியல்வாதியுடன் சேர்ந்து தேனீர் அருந்தினாலும் அது இங்கு பிரச்சினையாகப் பேசப்படும்.

கேள்வி- இதனை பொதுமக்கள் செய்யவில்லை. எங்கள் மத்தியிலிருக்கும் அரசியல்வாதிகள் தானே ஒருவருக்கொருவர் சேறு பூசும் வேலைகளை செய்கின்றார்கள்..?

நிலாந்தன்- ஆம், அரசியல்வாதிகளும் செய்கின்றார்கள். ஊடகங்களும் செய்கின்றன. இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் என்பன அதிகரித்துள்ள நிலையில் இப்போது யாரும் எதனையும் எழுதலாம் என்ற நிலை தேன்றியுள்ளது. அச்சு ஊடகங்கள் மட்டுமிருந்த காலகட்டம் வேறு. இப்போது யாரும் எதனையும் எழுதலாம். அதன் விளைவுகள் குறித்தெல்லாம் அவர்கள் கவலைப்படுவதில்லை. அரசியலில் தெளிவற்றவர்கள், ஆழமற்றவர்கள் எல்லோருமே கதைக்கின்றார்கள் - கருத்துக் கூறுகின்றார்கள். அவ்வாறு வரும்போது பொறுப்பற்ற கருத்துக்கள் மக்கள் மத்தியில் விதைக்கப்படும் நிலை ஏற்படுகின்றது. இன்று வளர்ந்து வரும் நவீன ஊடக தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதனை எமது வளர்ச்சிக்கானதாக மாற்றும் நிலை இனிமேல்தான் ஏற்பட வேண்டும்.

கேள்வி - புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களில் இன்று மூன்றாவது தலைமுறையினர் வந்துவிட்டார்கள் அவ்வாறு வந்திருக்கும் புலம்பெயர்ந்தோரின் மூன்றாம் தலைமுறை தமிழ் அடையாளத்தை விட்டு விலகும் நிலை உள்ளதா?

நிலாந்தன்- ஒரு தேசமாக சிந்திக்கும் போது, தாயகத்திலுள்ள தமிழ் மக்களினதும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களினதும் நிலைமைகள் வித்தியாசப்படுகின்றன. இனம், மொழி, நிலம், பண்பாடு போன்றவற்றை கட்டுறுதியாக வளர்த்தெடுக்க சிந்திப்பது இங்குள்ள தமிழருக்கு சாத்தியமாகும். புலம்பெயர்ந்தோருக்கு இது சாத்தியமாகாது. அங்கு அவர்களுக்கு நிலமில்லை. அத்துடன், அங்கு அவர்கள் வெவ்வேறு நாடுகளில் சிதறுண்டிருக்கின்றார்கள். அடுத்தது, மொழி பற்றிய உணர்வு முதலாம் தலைமுறையிடம் தான் அதிகமிருக்கின்றது. விட்டுப் பிரிந்த தாயகம் பற்றிய பிரிவேக்கமும் அதிகம் அந்த முதலாம் தலைமுறையிடத்திலேயே உள்ளது. இந்த பிரிவேக்கம் இருக்கும் வரையும் முதலாம் தலைமுறை ஒரு தேசமாக சிந்திக்கும். தாயகத்தில் போர், இடப்பெயர்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில் இந்த பிரிவேக்கம் அதிகமாக வேலை செய்தது. எனவே, முதலாம் தலைமுறையை இந்த பிரிவேக்கம்தான் கட்டுறுதியாக சிந்திக்கவும், உறவுகளின் இணைப்பை பலப்படுத்தவும் காரணமாக இருந்திருக்கின்றது. போர் முடிவுற்று இப்போது தாயகத்திற்கு வந்து போகும் நிலைமை ஏற்பட்டுள்ள நிலையில் அந்த பிரிவேக்கத்தின் கூர்மை குறைந்திருக்கலாம். அதையும் விட, அவர்கள் ஈருடகத் தன்மையுடன் இருக்கின்றார்கள். தாயகத்தின் பிரிவேக்கத்திற்கும், புலம்பெயர்ந்து வாழும் தளத்தில் தங்களது இரண்டாம் மூன்றாம் தலைமுறையின் கல்வி தொடர்பாகவும், அவர்களது எதிர்காலம் தொடர்பாகவும் அதிகம் சிந்தித்து செயலாற்றும் போது அவர்கள் இரண்டு நிலைகளில் கிழிபடும் நிலை உள்ளது. ஆனால், இந்த முதலாம் தலைமுறையினர்தான் தாயகத்திற்கு உணர்ச்சிகரமான- உணர்வுபூர்வமான பங்காளர்களாக இருந்திருக்கின்றார்கள். இவர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஒரு தேசமாக சிந்திக்கின்றார்கள். ஆனால், இரண்டாம், மூன்றாம் தலைமுறையிடம் மொழியும் இல்லை. நிலமும் இல்லை என்ற நிலைதான் உள்ளது. அதுவும், மூன்றாம் தலைமுறையிடம் மொழி துண்டாக இல்லை. முதலாம் தலைமுறை அதன் உணர்வுகளை இரண்டாம், மூன்றாம் தலைமுறைக்கு எவ்வாறு கடத்தப் போகின்றது என்பதுதான் சிந்தனைக்குரியது. தமிழ் ஒன்றுகூடல்கள், பண்பாட்டு விழாக்கள் போன்றவற்றை நடத்துவதன் மூலம் இரண்டாம், மூன்றாம் தலைமுறைகளுக்கு ஓர் உணர்வுநிலையை ஏற்படுத்த முனையலாம். இதனை சரியான திட்டமிடல்கள் மூலம் முதலாம் தலைமுறை செயற்படுத்த வேண்டும்.

நூல் வெளியீட்டு விழா
மட்டக்களப்பு நாவற்குடா
இளையதம்பி தங்கராசா அவர்களால் எழுதப்பெற்ற
இருபெரும் பாகங்களைக் கொண்ட முழுநீள நாவல்
"நான் என் அம்மாவின் பிள்ளை"
காலம் : 2016. ஆனி மாதம் 12 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : பிற்பகல் 5 மணி
இடம் : St. James Cardinal McGuigan Catholic High School (Keele & Finch)
1440 Finch Avenue West


தலைமை தாங்குபவர் :
பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள்
பிரதம விருந்தினர் :
முனைவர் மு. இளங்கோவன் அவர்கள்
புதுச்சேரி (இந்தியா) பட்டமேற்படிப்பு மையம்
ஆதரவு வழங்குவோர் :
பாடும் மீன்கள் – கனடா
மட்/சிவானந்த வித்தியாலய பழைய மாணவர் சங்கம் – கனடா
சுவாமி விபுலானந்த கலைமன்றம் – கனடா
கிழக்கு ஒளி இணையம் – கனடா
ChiDAES – கனடா
தொலைபேசி : 416 630 6449
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் !


யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உப ஜனாதிபதியை வேட்பாளரை கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜூலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோக பூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து 20, 2017 வரை)

எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப் பார்த்து வருகிறோம்.

இதுவரை 2016ஆம் ஆண்டில் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருப்பவர்கள் இருவர். அவர்கள் Hillary Clinton உம் Bernie Sanders உம் ஆவர். குடியரசுக் கட்சியின் சார்பில் மேலும் இருவர் விலகியபின்னர் ஒருவரே நாடு தழுவிய வேட்பாளராக இருக்கிறார். அவர் Donald Trump ஆவர்.

## ஜனநாயகக்கட்சி

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாள ராக வர ஜனநாயகக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 4,765 பிரதிநிதிகளில் குறைந்தது 2,383 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 மே 31 வரை நடைபெற்ற 47 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Hillary Clinton 1,769 பிரதிநிதிகளையும் Bernie Sanders 1,497 பிரதிநிதிகளையும் பெற்றுள்ளார்கள். ஜனநாயகக்கட்சிக்கான அடுத்த தேர்தல் ஜூன் 04இல் வேஜின் தீவுகளில் நடைபெற உள்ளன. ஜனநாயகக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 25இல் Philadelphia, Pennsylvania இல் நடைபெற உள்ளது.

கட்சிமாநாட்டில் பங்குபற்றும் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித்தலைவர்கள் உட்பட சிலருக்கு தாம் விரும்பும் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக் கும் உரிமை உண்டு. அவர்களில் பலர் ஏற்கனவே தாங்கள் யாரை ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்ய தமது வாக்குகளை அளிப்போம் எனக் கூறிவிட்டனர். இவ்வாறு கூறியவர் களுடைய வாக்குகளையும் சேர்த்துப் பார்த்தால் Hillary Clinton இற்கு இதுவரை 2,309 பிரதிநிதிகளின் ஆதரவும் Bernie Sanders இற்கு இதுவரை 1,539 பிரதிநிதிகளின் ஆதரவும் கிடைத்துள்ளன.



இதுவரை 47 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களின் தேர்தல் முடிவடைந்து விட்டன. மீதமுள்ள 9 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட 917 பிரதிநிதிகள் இருக்கின்ற னர். இவர்களில் 74 பிரதிநிதிகளின் ஆதரவை (08%) பெற்றாலே Hillary Clinton ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சியின் மாநாட்டிற்கு முன்னரே ஊடகங்களால் உறுதிப்படுத்தப் பட்டு விடுவார்.

Bernie Sanders ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வர இன்னமும் தெரிவு செய்யப்படவுள்ள 917 பிரதிநிதி களில் 844 பிரதிநிதிகளின் ஆதரவை (92%) பெற வேண்டும். இது நடைமுறைக்கு சாத்தியமற்றது, ஆனால் கணித முறையில் நடைபெறமுடியும். இதனால் Benie Sanders தொடர்ந்தும் தீவிரமாக Hillary Clinton இற்கு எதிராக மீதமுள்ள 9 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் பிரசாரம் செய்து வருகிறார். இது பொது தேர்தல் பிரசார காலத்தில் Hillary இற்கும் ஜனநாயகக் கட்சிக்கும் மிகவும் பாதகமாக அமையப்போகிறது என பல அரசியல் ஆய்வாளர்கள் எழுதுகிறார்கள்.

## குடியரசுக்கட்சி

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாள ராக வர குடியரசுக்கட்சிக்கு 56 மாநிலங் கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 மே 31 வரை நடைபெற்ற 51 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Donald Trump 1,239 பிரதிநிதி களை பெற்றுள்ளார்கள். குடியரசுக்கட்சிக் கான இறுதித்தேர்தல் ஜூன் 07இல் கலிபோர்ணியா மாநிலம் உட்பட மீதமுள்ள 5 மாநிலங்கள் மற்றும் பிரதேசங் களில் நடைபெற உள்ளது. குடியரசுக்கட்சி யின் தேசிய மாநாடு 2016 யூலை 18இல் Cleveland, Ohioஇல் நடைபெற உள்ளது.

குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாள ராக தெரிவுசெய்யப்பட தேவையான 1,237 பிரதிநிதிகளில் ஏற்கனவே Donald Trump 1,239 பிரதிநிதிகளின் ஆதரவை பெற்று விட்டார். இதனால் Donald Trump குடியர சுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போது ஊடகங்களால் உறுதிப்படுத்தப் பட்டு விட்டார். இதுவரை 51 மாநிலங்களி னதும் மற்றும் பிரதேசங்களிலும் தேர்தல் முடிவடைந்து விட்டன. மீதமுள்ள 5 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட 352 பிரதிநிதிகள் இருக்கிறனர். இவர்களில் பலரது ஆதரவு Donald Trump க்கு கிடைப்பது நிச்சயம். இதனால் குடியரசுக் கட்சியின் தேசிய மாநாட்டில் Donald Trump குடியரசுக்கட்சியின் ஜனாதி பதி வேட்பாளராக தெரிவு செய்யப்படுவது தவிர்க்க முடியாதது ஒன்றாகிவிட்டது.


## பொதுதேர்தல் பிரச்சாரம்

அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தலின் ஆரம்பகாலத்தில் குடியரசுக் கட்சியினரி டையே மிகுந்த முரண்பாடு இருந்தது. பலர் Donald Trump குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வருவதை எதிர்த்தார்கள். பல குடியரசுக்கட்சி உறுப்பி னர்களும், தலைவர்களும் Donald Trump இற்கு எதிராக வெளிப்படையாகவே பிரசாரம் செய்தார்கள். ஆனால் தற்போது Donald Trump குடியரசுக்கட்சியின் ஜனாதி பதி வேட்பாளர் ஆவது தவிர்க்க முடியாத போது குடியரசுக்கட்சியினர் எல்லோருமே Donald Trump ஐ ஆதரிக்க தொடங்கி விட்டனர். அல்லது அவரை எதிர்ப்பதை முற்றுமுழுதாக நிறுத்திவிட்டனர்.

இப்பொழுது குடியரசுக்கட்சியினரின் நோக்கம் Donald Trump இற்கு ஆதரவு வழங்கி அவரை ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தோற்கடிக்கப் பண்ணி அமெரிக்க ஜனாதிபதி ஆக்குவதே யாகும். குடியரசுக்கட்சியினர் அமெரிக்கா வை அடுத்த எட்டு வருடங்களுக்க மீண்டும் ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி ஆட்சி செய்வதை எப்பாடுபட்டாவது தடுப்பதற்கு ஒன்றுபட்டு விட்டனர்.

ஆனால் ஜனநாயகக்கட்சியின் நிலைமை யோ தலைகீழாக மாறிவிட்டது. அமெரிக்க ஜனாதிபதிக்கான தேர்தலின் ஆரம்ப காலத்தில் ஜனநாயகக்கட்சியினரிடையே மிகுந்த ஒற்றுமை இருந்தது. Hillary Clinton ஐ எதிர்த்து ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக கேட்பதற்கே தகுதியான ஆட்கள் குறைவாக இருந்தார்கள். Hillary Clinton தான் ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் என வெகுவிரைவில் தெரிவாகி விடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக சுயேட்சையாளராக எந்த கட்சியும் சாராமல் அமெரிக்க காங்கிரஸில் உறுப்பி னராக இருந்த Bernie Sanders கடந்த வருடம் ஜனநாயகக்கட்சியில் சேர்ந்து அதன் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் போட்டி யிட முன்வந்தார். அவர் தற்போது ஜனநாயகக்கட்சியின் இளையோரிடம் செல்வாக்கு பெற்று Hillary Clinton இற்கு பலத்த எதிர்பாளராக உருவாகியுள்ளார். இதனால் ஆரம்பகாலததில் ஒன்றாக இருந்த ஜனநாயகக்கட்சி தற்போது இரண்டு பட்டு நிற்கிறது. இது ஒரு தற்காலிக பிரிவு, யூலை 25 இல் ஜனநாயகக்கட்சி மாநாட்டில் ஜனநாயகக்கட்சியின் வேட்பாளராக Hillary Clinton தெரிவு செய்யப்பட்டவுடன் எல்லா ஜனநாயகக்கட்சியினரும் ஒன்றுபட்டு விடுவார்கள். ஆனால் இவர்கள் இறுதி நேரத்தில் இவ்வாறு பிரிவுபட்டு விவாதித்து கொண்டு இருப்பது தற்போது ஒற்றுமையாக இருக்கும் குடியரசுக்கட்சிக்கும் அதன் ஜனாதிபதி வேட்பாளரான Donald Trump இற்கு மேலும் ஆதரவை திரட்டுவதற்கும் அவருக்கு Hillary Clinton இற்கு எதிராக பிரசாரம் செய்வதற்கு உதவுவதாகவும் அமைகிறது.



சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com




- ஆதித்தன் -

# முரண்பாடுகளால் மக்கள் நலத் திட்டங்கள் பாதிக்கப்படக் கூடாது

'நல்லாட்சி' அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே பதவியேற்றதும் வடக்கின் நிர்வாகத்தில் ஆளுநரின் தலையீடுகள் தணியும் என்று எதிர்ப்பார்த்த போதிலும், மீண்டும் பழைய சிக்கல் தொடர்வதாகவே தெரிகின்றது. சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் அவரது தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றை வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும், வட மாகாணசபை உறுப்பினர்களில் பலரும் புறக்கணித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த கூட்டத்திற்கு ஆளுநர் தலைமை தாங்காமல் விலகியுள்ளார். அக்கலந்துரையாடலுக்கு வருகை தந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனே பின்னர் தலைமை தாங்கியுள்ளார். இந்த சம்பவமானது வடக்கின் புதிய ஆளுநருடன் வடக்கு முதலமைச்சர் கொண்டுள்ள முரண்பாட்டை முதல் தடவையாக, பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கின்றது. கடந்த, மஹிந்த ராஜபக்ஸவின் ஆட்சியின் போது வடக்கின் ஆளுநராக இருந்த ஜி.ஏ.சந்திரசிறி வடக்கின் நிர்வாகத்தில் அதிகளவு தலையீடுகளை மேற்கொண்டு, வட மாகாணசபை நிர்வாகத்தை குழப்பும் வேலைகளை செய்தார். இதனை முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டுமல்லாது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூறி, குற்றம் சாட்டினர். அவர் அவ்வாறே தலையீடுகளை மேற்கொண்டு வந்தார் என்பதும் உண்மையே. வட மாகாணசபையின் நிர்வாகத்தில் தலையிட்டது மட்டுமன்றி, மாகாணசபையின் பல்வேறு முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுபவராகவும் இருந்தார்.

வட மாகாணசபை முதலமைச்சர் நிதியம் ஒன்றை அமைப்பதற்கு முயற்சி செய்த போது அதனையும் குழப்பியடித்தார். அவரை மாற்ற வேண்டும் என பல தடவை அப்போது ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஸவிடம் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களாலும், வடக்கின் முதலமைச்சராலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. அவர் ஒரு இராணுவத் தளபதியாக போர்க் காலங்களில் வடக்கில் பணியாற்றியவர் என்பதால் ஒரு சிவில் அதிகாரியை ஆளுநராக நியமிக்க வேண்டும் எனவும் கோரப்பட்டது. அவரது பதவிக் காலம் ஒரு கட்டத்தில் முடிவடைந்த பின்னரும் அவரே தொடர்ந்து வடக்கின் ஆளுநராக பணியாற்ற மஹிந்த ராஜபக்ஸவினால் அனுமதிக்கப்பட்டார். ஆளுநர் மட்டுமன்றி, வடக்கின் செயலாளராக பணியாற்றிய பெண்மணியும் வட மாகாணசபை நிர்வாகத்தால் முரண்படுகின்றவராக விமர்சிக்கப்பட்டார்.



மஹிந்த ஆட்சி தோற்கடிக்கப்பட்டு, மைத்திரி - ரணில் தலைமையிலான புதிய அரசாங்கம் உருவானதும் வடக்கின் இந்த பிரச்சினைக்கு உடடியாகவே தீர்வு வழங்கப்பட்டது. ஆளுநர் சந்திரசிறியும், செயலாளரான பெண்மணியும் மாற்றப்பட்டனர். புதியவர்கள் நியமிக்கப்பட்டனர். சிவில் அதிகாரியாக விருந்த எம்.எம்.ஐ.எஸ் பளிஹக்கார வடக்கின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பின்னர், அவர் பதவி விலகுவதாக ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியதையடுத்து அப்பதவிக்கு ரெஜினோல்ட் குரே நியமிக்கப்பட்டார். கடந்த ஏப்ரல் மாதம் பதவியேற்றதும் அவரது கடமைகளை பொறுப்பேற்க யாழ்ப்பாணம் வந்தபோது, வட மாகாண முதலமைச்சரால் மகிழ்ச்சியான முறையில் வரவேற்பளிக்கப்பட்டார். ரெஜினோல்ட் குரே நல்ல மனிதர் எனவும் அவருடன் இணைந்து செயற்படுவதில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாதெனவும் வடக்கின் முதலமைச்சர் தெரிவித்தார். இந்த நிலையில், மூன்று மாதங்களிலேயே அவருடனும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

சில தினங்களுக்கு முன்னர், யாழ்ப்பாண நகர அபிவிருத்தி திட்டம் தொடர்பான கூட்டம் ஒன்றை நடத்துவதற்கு யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாகாணசபை உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கும் ஆளுநரால் அழைப்பு விடுக்கப்பட்டது. யாழ். மாவட்டத்தை சேர்ந்த மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதற்காக கொழும்பிலிருந்து யாழப்பாணம் வந்து கலந்து கொண்டனர். வட மாகாணசபையிடம் கலந்தாலோசிக்காமல் இவ்வாறான தொரு கூட்டத்தை நடத்தியது தவறு எனக் கூறி, வடக்கின் முதலமைச்சரும், மாகாண சபை உறுப்பினர்கள் பலரும் அதனைப் புறக்கணித்தனர்.

எம்.ஏ.சுமந்திரன், மாவை சேனாதிராஜா, சரவணபவன் ஆகிய யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்களும், வட மாகாணசபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், மாகாணசபை உறுப்பினர்களான ஆனோல்ட், சுகிர்தன், அஸ்மின், பரஞ்சோதி, சிவயோகன், சயந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஆனாலும், வட மாகாணசபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் அதனை புறக்கணித்தனர். குறிப்பாக, வட மாகாணசபையின் 38 உறுப்பினர்களில் 07 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டனர். 55 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் ஆரம்பிக்கப்படவுள்ள யாழ். நகர அபிவிருத்தி திட்டம் தொடர்பான கலந்துரையாடல் என்பதால் இது முக்கியமானது என்பதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. எனினும், முறையான கலந்துரையாடலையோ, அனுமதியினையோ வட மாகாணசபையிடம் பெற்றுக்கொள்ளாமல் இந்தக் கூட்டத்தை நடத்தியதாக கூறியே இப் புறக்கணிப்பு இடம்பெற்றுள்ளது.

வடக்கின் ஆளுநர் ரெஜினோல்ட் குரே தான்தோன்றித்தனமாக நடந்து கொள்வதாகவும், மத்திய அரசின் வழிகாட்டலில், நேரடியாக அவர் வடக்கின் நிர்வாகத்தை நடத்த முற்படுவதன் மூலம் வடமாகாண சபையின் அதிகாரங்களை புறக்கணிக்கின்றார் எனவும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். வடக்கின் அபிவிருத்தி என்றாலும் சரி, மக்களுக்கு நன்மை பயக்கும் எந்த விடயமாக இருந்தாலும் சரி அவற்றை வட மாகாணசபையுடன் கலந்தாலோசிக்காமல், தன்னிச்சையாக மேற்கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதில் நாம் அவதானிக்க வேண்டிய விடயங்கள் உள்ளன. அதாவது, முன்னைய மஹிந்த அரசாங்கம் திட்டமிட்டே வடக்கின் நிர்வாகத்தில் ஆளுநரின் தலையீடுகளை மேற்கொள்ள வழி வகுத்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கில் அதிகூடிய நாடாளுமன்ற பிரதிநிதிகளை கொண்டிருந்த போதும் அவர்களை புறக்கணித்தும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் வட மாகாணசபை இருப்பதை புறக்கணித்தும் செயற்பாடுகளை அந்த அரசாங்கம் மேற்கொண்டது. இதனால் பாரிய முரண்பாடுகள் ஏற்பட்டன. தற்போதும் அவ்வாறான திட்டத்துடன் வடக்கில் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்று கேட்டால் அவ்வாறுதான் என உடனடியாக கூறிவிட முடியாது.

சரியான நிர்வாக வழிமுறைகளை கடைப்பிடிக்காமல் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளே இன்றைய முரண்பாடுகளுக்கு காரணமாகும், இதற்கு மற்றுமொரு உதாரணமாக யாழ்ப்பாணத்தில் அமைக்கத் திட்டமிடப்பட்ட பொருத்து வீட்டுத் திட்டத்தை குறிப்பிடலாம். 21ஆயிரம் ரூபா செலவில் கட்டப்படும் இந்த பொருத்து வீடுகளை அமைப்பது தொடர்பில் வட மாகாணசபையிடம் கலந்தாலோசனை செய்யப்படவில்லை. அந்த பொருத்து வீடுகள் வடக்கிற்கு பொருத்தமானதல்ல என்பதை இன்று மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களே ஒப்புக் கொள்கின்றனர். இந்த விடயம் தொடர்பில் வட மாகாண சபையிடமும், வடக்கின் பிரதிநிதிகளாகவுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களிடமும் முறையாக கலந்தாலோசனை செய்திருக்க வேண்டும். இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், அவ்வாறான நடைமுறையை பின்பற்றாத காரணத்தினால் இன்று இந்தப் பொருத்து வீடுகள் தொடர்பில் பாரிய சர்ச்சைகள் நிலவுகின்றன.

இதேபோன்றுதான் வடக்கின் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும், வடக்கின் நிர்வாக மையமாகத் திகழும் வட மாகாணசபையிடம் ஆலோசனைகளைப் பெற வேண்டும். வட மாகாணசபை உறுப்பினர்கள் வடக்கின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்களுடன் இணைந்து வடக்கின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதே பொருத்தமானதும் முறையானதுமாகும். இந்த நடைமுறையை ஒழுங்காக கடைப்பிடித்து வந்தால் முரண்பாடுகளை முழுவதுமாக தவிர்த்துக் கொள்ள முடியும்.

கடந்த மஹிந்த அரசாங்கத்தினால், வடக்கின் பிரதிநிதிகள் புறக்கணிக்கப்பட்டு, செயற்பாடுகள் தான்தோன்றித்தனமாக மத்தியிலிருந்து செயற்படுத்தப்பட்டன. ஆனால், இன்றைய இந்த நிலையை திட்டமிட்ட ஒன்றாக அவசரப்பட்டு கூறி முரண்பாடுகளை அதிகரிக்க இடமளிக்கக் கூடாது. ஏனெனில், வடக்கின் அபிவிருத்தி என்பது அத்தியாவசியமானதும், அவசரமானதுமாகும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான பணித் திட்டங்களை தள்ளி வைக்க முடியாது. மத்திய அரசாங்கத்தின் உதவிகளை விடவும், வெளிநாட்டு நிதியுதவிகளுடனான பணிகள் அதிகளவில் வடக்கில் மேற்கொள்ளும்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...

விளம்பரம் VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



4 Bedrooms, 4 W Room
Upgraded Kitchen Cabinets, Backsplash, Granite Counter Top & Centre Island



4 Bedrooms, 3 W Room
Master Bdrm Has An Amazing 4Pc Ensuite & Walk-In Closet



4+1 Bedrooms, 4 W Room
Professionally Finished Basement With Huge Bedroom



3 Bedrooms, 3 W Room
California Shutters, Oak Staircase, Fire Place



3 Bedrooms, 3 W Room
Dining & Family Room With Gas Fireplace




4+2 Bedrooms, 4 W Room
Large Dining Rm W/ Decorative Columns For Entertaining



4 Bedrooms, 3 W Room
Large Detached Fully Bricked Double Car Garage



3 Bedrooms, 3 W Room
Upgraded Oak Staircase With Iron Picket Rails



3+1 Bedrooms, 2 W Room
Professionally Landscaped Including Stamped Concrete



3 Bedrooms, 3 W Room
Bright And Sun-Filled Home Open Concept Kitchen



3+2 Bedrooms, 2 W Room
Potential Basement Apartment Lots Of Parking



3 Bedrooms, 3 W Room
Open Concept Main Flr & Fam Rm W/ W/O To Yard




3 Bedrooms, 3 W Room
Large Master Bedroom With Sumptuous Ensuite Bath



3 Bedrooms, 4 W Room
Beautiful Hardwood On Main Floor Walk-Out To Balcony



3 Bedrooms, 2 W Room
2 Year New " Sierra" Built Royal Wynd Home



Sell your home faster and more money

RE/MAX Platinum Club Award

**ELAGUPPILLAI SRINATHAN (MIKE) B.SC**

Sales Representative

**Direct 416 – 276-1225**

Email: esrinathan@trebnet.com

Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Tel: 905-470-9800
Fax: 905-470-7770

# Your Home Sold In 30 Days or We buy it

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold, Your home advertised in full color prints ads every week until it is sold, Our team of specialists for the same price as hiring a single agent

# வெற்றிக் கனியைப் பறித்த ஜெயலலிதா

## தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல்

கருத்துக் கணிப்பு முடிவுகள், லட்சோப லட்சம் திமுக தொண்டர்களின் நம்பிக்கை எல்லாவற்றையும் தவிடுபொடியாக்கி, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் சரித்திரம் படைத்திருக்கிறார் அஇஅதிமுக பொதுச் செயலாளர் ஜெ. ஜெயலலிதா. இந்தியா குடியரசான பின்னர் நடைபெற்ற 1952 தேர்தல் தொடங்கி இந்த ஆண்டு நடைபெற்ற தேர்தல் வரைக்கும் கேரளா மாநிலத்தில் அட்சரம் பிசகாமல் ஒவ்வொரு தேர்தலிலும் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு வந்திருக்கிறது. காங்கிரஸும் கம்யூனிஸ்டுகளும் மாறிமாறி கேரளத்தை ஆண்டு வந்திருக்கிறார்கள். 1984க்குப் பிறகு, தமிழகத்திலும் இதுபோல் கடந்த 32 ஆண்டுகளாக ஆட்சி மாற்றம் ஏற்பட்டு வந்தது. இனிமேல் இப்படித்தான் என்று உறுதியான நம்பிக்கை ஏற்பட்டு வந்த நிலையில், இந்த வரலாற்றுக்கு இப்போது முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார், ஜெயலலிதா. இதன்மூலம் காமராஜர், எம்.ஜி.ஆர் தவிர வேறு எந்தத் தலைவரும் அடுத்தடுத்த சட்டசபைத் தேர்தல்களில் தொடர்ந்து வென்று ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டதில்லை என்ற வரலாற்றையும் மாற்றி எழுதியிருக்கிறார்.

சத்தமில்லாமல் இன்னொரு சரித்திரத்தையும் படைத்திருக்கிறார், ஜெயலலிதா. 1962ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழக சட்டமன்றத் தேர்தலில் தனித்து நின்று ஆட்சியைக் கைப்பற்றிய காமராஜருக்குப் பிறகு, எம்.ஜி.ஆர். உட்பட தேர்தலில்



தனித்து நிற்கும் தைரியம் எந்தத் தலைவருக்கும் இருந்ததில்லை. இந்நிலையில் இந்தச் சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளிலும் இரட்டை இலைச் சின்னத்தில் தனித்து நின்றார், ஜெயலலிதா. இப்போது வென்றிருப்பதன் மூலம் காமராஜரின் அந்தத் தனிப்பெரும் சாதனையையும் முறியடித்திருக்கிறார். இந்த சட்டசபைத் தேர்தலை மட்டுமல்ல 2014 மக்களவைத் தேர்தலிலும் தனித்து நின்று 39க்கு 37 இடங்களில் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### எப்படி கிடைத்தது இந்த வெற்றி?

### அம்மா சக்ஸஸ் பார்முலா

ஒரு கட்சியின் ஐந்து வருடங்கள் ஆட்சி முடிவில், அக்கட்சியினர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகளும் அராஜக குற்றச்சாட்டுகளும் பூதாகரமாகி, தேர்தலில் ஆட்சி மாற்றம் நிகழ்வதுதான் கடந்த 32 வருடங்கள் தமிழக தேர்தல் வரலாறு. அதன்படி இப்போது திமுகதான் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றிருக்க வேண்டும். தலைவர், தளபதி மற்றும் கட்சிக்காரர்கள் உட்பட திமுகவினர் அனைவரும் 'நாளை நமதே' என்ற அந்த நம்பிக்கை களிப்பில்தான் இருந்தார்கள். ஆனால், அவர்களது இந்த நம்பிக்கைக்கு வேட்டு வைக்கும் வேலையை, 2011இல் ஆட்சி பொறுப்பேற்றதுமே ஜெயலலிதா தொடங்கி விட்டார் என்பதை அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

1998 மக்களவைத் தேர்தலில் முதன் முதலாக பாஜக, பாமக, மதிமுக என சிறிய கட்சிகளை எல்லாம் கூட்டணியில் சேர்த்து தேர்தலைச் சந்தித்தது 2014 மக்களவைத் தேர்தலில் தனித்து போட்டியிட்டது என கூட்டணி முடிவுகளில் புதிய உத்திகளைப் புகுத்தி, அதில் வெற்றியும் பெற்றுள்ள ஜெயலலிதா, அதுபோல் ஒரு புதிய உத்தியுடன் 2016 சட்டசபைத் தேர்தலைச் சந்திப்பது என்கிற முடிவை 2011இல் ஆட்சிப் பொறுப்பேற்றதுமே எடுத்துவிட்டார்.

தமிழ்நாட்டில் ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி ஆகிய நான்கு வகையான உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல், 2011 அக்டோபர் 17 மற்றும் 19 தேதிகளில் நடைபெற்றது. அப்போது தமிழகத்தில் அதிமுக பதவியேற்று ஐந்து மாதங்கள்தான் ஆகியிருந்தது. இந்நிலையில் அதிமுகவின் சொந்த பலத்தை தெரிந்துகொள்ள விரும்பிய ஜெயலலிதா, 2011 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் இருந்த தேமுதிக மற்றும் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளையும் கழட்டிவிட்டார். அவரது இந்த பரிசோதனை முயற்சிக்கு நல்ல பலன் இருந்தது. அனைத்துக் கட்சிகளும் தனித்தனியாக நின்ற அந்தத் தேர்தலில் ஒவ்வொரு கட்சிகளின் வாக்கு வங்கியும் என்ன என்பது தெளிவானது. தமிழக கட்சிகளில் அதிமுகவே தனிப் பெரும் கட்சி என்பதும் உறுதியானது. இதன்மூலம் கட்சிகளின் தனித்துப் போட்டி அதிமுகவின் வெற்றியை உறுதியாக்கும் என்பதை உணர்ந்த ஜெயலலிதா அதனையே தன் சக்ஸஸ் பார்முலாவாக வைத்துக்கொண்டார். அடுத்து மக்களவை தேர்தலில் அந்த உத்தியையே மீண்டும் பயன்படுத்தினார். "தனித்து நின்று வெற்றி பெறும் தில் இருக்கிறதா?" என அவர் விரித்த வலையில் திமுகவும் விழுந்தது. இன்னொரு பக்கம் பாஜக, தேமுதிக, பாமக, மதிமுக கட்சிகள் இணைந்த தேசிய ஜனநாயக கூட்டணி உருவாக பலமுனைப் போட்டி ஏற்பட்டது. அந்தத் தேர்தலில் இந்தியா முழுக்க வீசிய மோடி அலையையும் மீறி தமிழகத்தில் போட்டியிட்ட 39 இடங்களில் 37இல் அதிமுக வெற்றி பெற்றது. மக்களவையில் மூன்றாவது பெரிய கட்சி என்ற அந்தஸ்து அதிமுகவுக்குக் கிடைத்தது.

**- சிவதாணு -**

"மக்களவைத் தேர்தலில் உருவான தேசிய ஜனநாயகக் கூட்டணி 2016 சட்டசபைத் தேர்தலிலும் தொடரும்" என தமிழக பாஜக தலைவர்கள் தொடர்ந்து பேட்டிகள் தட்ட, உற்சாகமானார் ஜெயலலிதா. தேசிய ஜனநாயகக் கூட்டணி தொடர்ந்தால் நிச்சயம் திமுக தலைமையில் பெரிய கூட்டணி உருவாக வாய்ப்பில்லை என்னும் நம்பிக்கையில்தான், "கண்ணுக்கெட்டிய தொலைவு வரை எதிரிகளே இல்லை" என்று உற்சாகமாக பேட்டியளித்தார். ஆனால், அவரது உற்சாகம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை.

### தண்ணீர் காட்டிய விஜயகாந்த்

பாஜகவின் சொதப்பல்களால் மதிமுக, பாமக, தேமுதிக என ஒவ்வொரு கட்சியாக தேசிய ஜனநாயக கூட்டணியில் இருந்து வெளியேற, இன்னொரு பக்கம் பெருமழை பெருவெள்ளம் சென்னை, கடலூர், தூத்துக்குடி பகுதிகளில் ஆட்சிக்கு எதிராக பெரும் எதிர்ப்பலையை உருவாக்கியது. இந்நிலையில் தனது உத்தியை மாற்ற தீர்மானித்த ஜெயலலிதா, "கூட்டணி என்பது எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லை. சூழ்நிலைக்கு தக்கவாறு முடிவெடுக்கப்படும்" என அதிமுக பொதுக்குழுவில் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஐந்தாண்டுகள் இறுதியில் உருவாகும் ஆளுங்கட்சி எதிர்ப்பு அலை இந்த முறையும் இருக்கிறது என்பதை பழ. கருப்பையாவின் திடீர் ஆவேசமும், அவர் பேசிய கூட்டங்களில் எல்லாம் அவருக்குக்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...

MOHAN
mhc
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு • வாகன விபத்து • மன அழுத்தம் • விளையாட்டுக் காயங்கள் • தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் 464

ரொறொன்ரோ பெரும்பாகத்தில் புதிய அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் 2016 இன் முதல் 3 மாதங்களில், 32% இனால் கடந்த வருடத்தின் குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட வியாபாரத்தை விட அதிகமாக ஏற்பட்டுள்ளது. இக்குறிப்பிட்ட கால எல்லைக்குள் விற்கப்படாமல் இருந்த அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை 16% இனால் குறைந்துள்ளது.

மேலும் Urbanation இன் அறிக்கைகளின் பிரகாரம் புதிதாக நிர்மாணமாகும் அடுக்கு மாடி மனைகளின் விலையும் சதுரஅடிக்கு 3% இனால் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பால் புதிய விலை சதுரஅடிக்கு $582 ஆகக் காணப்படுகின்றது. அத்துடன் ஏற்கனவே மக்கள் வாழும் (Resale) மனைகளின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் Resale அடுக்குமனைகளின் சதுர அடி விலை $467 ஆக அதிகரித்துள்ளது.

இந்த அதிகரிப்புக்கு பலகாரணங்கள் முன்வைக்கப்படுகின்றபோதும் நிலத்துடன் அமைந்துள்ள வீடுகளில் ஏற்பட்ட விலை அதிகரிப்பை, ஈடு செய்ய முடியாதவர்களே அடுக்குமாடி மனைகளை வாங்க வேண்டிய நிலைக்கு மாற வேண்டியுள்ளதாக கூறப்படுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் ரொறொன்ரோவின் மத்தியை தவிர, வெளியிடங்களிலும் அதிகமான அடுக்குமாடி மனைகள் உருவாகத் தொடங்கியுள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாக 905 - Area Code ஐக் கொண்ட பகுதியைக் கொள்ளலாம். மேலே குறிப்பிட்ட காலப்பகுதியில் 905 பகுதியில் (2016 இன் முதல் காலப்பகுதி) விற்கப்பட்ட அடுக்கு மாடி மனைகளின் எண்ணிக்கை இரண்டு



மடங்காக அதிகரித்துள்ளது.

அண்மைக்காலங்களில், கனேடிய மக்களின் கடன்பழு அதிகரித்து வருவதனை சகல பொருளாதார ஆய்வாளர்களும் குறிப்பிடத் தவறுவதில்லை. எதிர்காலத்தின் அபாயகரத்தை தெரியப்படுத்துவதுபோல தோன்றுகின்றது. குறிப்பாக கடந்த வருடத்தில் (2015), அல்பேட்டாவில் ஏற்பட்டிருந்த குறூட் ஒயிலின் விலை இறக்கம் பொருளாதாரத்தில் அங்குள்ள மக்களை பின்னடைய செய்துள்ளது.

அத்துடன் இந்த வருடத்தில் (2016 ஏப்பிரல்) ஏற்பட்ட காட்டுத்தீயும் அவர்களை மேலும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. அதீத கடன் அதிகரிப்பு பொதுவாக சிறந்தது அல்ல. அத்துடன் கடன் பெறுபவர்களின் கடன் சரித்திரம் (credit report), சிறந்ததாக இல்லாத சந்தர்ப்பங்களில் மக்கள் பெறும் பொதுவான கடன், அடமானக்கடன் போன்றவற்றின் வட்டிவீதம் அதிகமாகவே காணப்படும். அத்துடன் மாதாந்த கட்டணமும் அதிகரித்தே காணப்படும். இது ஒரு நல்ல சகுனம் எனக்கூற முடியாது.

அண்மைக்காலங்களில் வாங்கப்படும் வீடுகள், மனைகள் போன்றவற்றின் குறிப்பிடக்கூடிய அடமானக்கடன்கள், இரண்டாந் தர நிதி நிறுவனங்களில் இருந்து பெறுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. அல்லது 80% / 75% ஆன அடமானக் கடனை முதல்தர நிதிநிறுவனங்களிலும் மீதியை 2ஆம் தர அல்லது 3ஆம் தர நிதி நிறுவனங்களில் அடமானக்கடனை பெறுகின்றார்கள். இவ்வாறான சந்தர்ப்பம் வீடு, மனை வாங்குபவர்களின் மாதாந்த கொடுப்பனவை எதிர்பார்த்ததை விட அதிகரிக்கின்றது. இவ்வாறான நிலைமை சிறந்தது எனக் கூறமுடியாது.

இந்நிலைமை 1988/1989 இல் ஆதன வியாபாரத்தில் ஏற்பட்ட நிலைமையை எனக்கு ஞாபகப்படுத்துகின்றது. எனது கட்டுரையை தொடர்ந்து வாசிப்பவர்கள், இந்நிலைமை தங்களிற்கு ஏற்படுவதனை தடுப்பதுடன், மற்றவர்களிற்கும் இந் நிலைமையை தெரியப்படுத்துவது நன்மையை ஏற்படுத்தலாம். வாழ்வில் முக்கியமான பாடம், எது மேலே செல்கின்றதோ அவை கீழே வரவேண்டும் என்பது தவிர்க்க முடியாது. ஆனால் எப்போது? இதுவே மிகப்பெரிய வினா?

எம்மால் எடுக்கப்படும் ஒரு பிழையான முடிவு, எமது பொருளாதார நிலைமையை பல ஆண்டுகள் பின்தள்ளும் என்பது கனேடிய அனுபவத்தில் பலரிடம் கண்டுள்ளோம். நேர்மையான அனுபவமிக்கவர்களுடன், உங்கள் ஆதனவியாபார தொடர்பை வைத்துக் கொள்ளவும். எதிர்காலம் பிரகாசமாகலாம்.

நாளையும் நமதே!




**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995+HST**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports of the following: Legal Land Survey, Topographical Survey, Arborist Report, Tree Protection Plan, Geotechnical Report, Soil Test for Soil Bearing Capacity, Soil Percolation Test for Stormwater Management, Site Plan, Site Grading & Erosion Control Plan, Stormwater Management Report, Functional Servicing Report, Site Servicing Plan, Architectural Drawings, Floor Plans, Elevations, Cross Sections, Structural Drawings, Plumbing Drawings, Heat Loss / Heat Gain Calculations, HVAC Drawings, Duct Design, Ventilation Design / Calculations, and Landscape Architect Plan.

**We also offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975+HST**



**சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்**

**M.பாஸ்கரசிங்கம்**, P.Eng.

**Periyathamby Kuruparan** M Sc (Eng) **Meghal Raval** M Sc (Eng)

(416) **332 1743** www.**buildingexpertscanada**.com

# வெற்றிக் கனி...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

கிடைத்த ஆதரவும் வெளிச்சமிட்டுக்



காட்டியது. இந்நிலையில், 'என்னதான் பலமான கூட்டணி அமைத்தாலும், எதிர்ப்பு ஓட்டுகள் ஒன்றாகத் திரண்டால் ஆட்சி மாற்றம் உறுதியாகிவிடும். எனவே, பலமான கூட்டணி அமைப்பதற்குப் பதிலாக எதிரணியில் பலமான கூட்டணி அமையாமல் பார்த்துக்கொள்வது மற்றும் பலமுனைப் போட்டியை ஏற்படுத்துவதன் மூலம், எதிர்ப்பு வாக்குகள் சிதறி தனிப்பெரும் கட்சியாக உள்ள அதிமுக சுலபமாக வெற்றிபெற முடியும்' என நினைத்தார் ஜெயலலிதா. அவர் கனவை நிர்மூலமாக்கும் ஆளாக வலம் வந்தார் விஜயகாந்த். திமுக பக்கம் தேமுதிக சாய்ந்தால் அதுவே ஒரு பிரமாண்ட கூட்டணியை அமைக்க திமுகவுக்கு வாய்ப்பாக அமைந்திருக்கும். எனவே, தேமுதிக – திமுக கூட்டணி உருவாகாமல் இருக்க வேண்டும் என விரும்பினார். அதற்கு அவர் நம்பியது பாஜக.

ஜெயலலிதா நினைத்திருந்தால், பா.ஜ.க. மேல்மட்ட தலைவர்களுடன் அவருக்கு இருக்கும் இணக்கத்திற்கு, போயஸ் கார்டனிலேயே அதிமுக - பாஜக கூட்டணியை முடிவு செய்துவிட்டிருக்க முடியும். ஆனால், அது திமுக – தேமுதிக கூட்டணிக்கு இவரே வழி ஏற்படுத்திக் கொடுத்தது போலாகிவிடும். அதனால் எதிர்ப்பு ஓட்டுகள் மொத்தமும் ஒரே பக்கம் சாயும். மாறாக, எதிர்ப்பு ஓட்டுகளில் ஒரு பகுதியைக் கவரும் வகையில் ஒரு மாற்று அணி உருவாக வாய்ப்பாக, பாஜகவை சேர்க்காமலே வைத்திருந்தார். பிரதமர் நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் அருண் ஜேட்லி, வெங்கையா நாயுடு என முக்கியப் பாஜக தலைவர்கள் எல்லாம் வீடு தேடிச் சென்று பேசியும் பிடிகொடுக்காமல் இருந்தார்.

கைகொடுத்த மக்கள் நலக் கூட்டணி

"பழம் நழுவி பாலில் விழும்" என்ற திமுக தலைவர் கருணாநிதி கமெண்ட், பாஜக கைகளில் இருந்து தேமுதிக நழுவிக் கொண்டிருக்கிறது எனச் சொன்னது. இந் நிலையில்தான் ஆபத்பாந்தவனாக வந்தது மக்கள் நலக் கூட்டணி. மநகூ - தேமுதிக கூட்டணி உருவானபோது அதிகம் மகிழ்ந்தவர் ஜெயலலிதாவாகத்தான் இருக்கும்.

ஒரு பக்கம் சொத்துக் குவிப்பு வழக்கு, இன்னொரு பக்கம் 2ஜி வழக்கு – இந்த இரண்டு வழக்குகளிலும் வரவிருக்கும் தீர்ப்புகளால், இரண்டு திராவிட கட்சிகளும் தங்கள் அஸ்தமனம் நோக்கிச் செல்கின்றன. அவை வலுவிழக்கும் நிலையில் ஒரு மாற்று சக்தியாக உருவாக வேண்டும் என்ற எண்ணத்தோடு உருவாக்கப்பட்டது மக்கள் நலக் கூட்டணி. "இந்த தேர்தலில் மக்கள் நலக் கூட்டணி மகத்தான வெற்றிபெறும் என்று மனப்பால் குடிக்கவில்லை மநகூ. இந்தத் தேர்தல் அல்ல 2021தான் எங்கள் இலக்கு" என்றுதான் அவர்கள் சொன்னார்கள். ஆனாலும் தேர்தலை எதிர்கொள்ள அவர்களுக்கு ஒரு பிரபல முகம் தேவைப்பட்டது. இதனால் அவர்கள் கவனம் விஜயகாந்தை நோக்கித் திரும்பியது. அதில் அவர்கள் வெற்றியும் பெற்றார்கள். மநகூ – தேமுதிக இணைய ஜெயலலிதா எதிர்பார்த்த பலமுனை போட்டி சுலபமாக உருவானது.

பலமுனைப் போட்டியில் எதிர்ப்பு ஓட்டுகள் சிதற, தேர்தல் நெருக்கத்தில் வெளிவந்த இலவசங்கள் நிறைந்த அதிமுக தேர்தல் அறிக்கை மக்களைக் கவர, இதோ 32 வருடங்கள் சரித்திரத்தை மாற்றி எழுதிவிட்டார் ஜெயலலிதா. ஆறாவது முறையாக தமிழகத்தின் முதல்வராகி விட்டார்.

இந்த தேர்தல் மூலம் பல சரித்திர சாதனைகளை நிகழ்த்தியுள்ள ஜெயலலிதாவுக்கும் 2021 தேர்தல் முக்கியமானது. ஜெயலலிதா இன்னும் முறியடிக்காமல் இருப்பது, தொடர்ந்து 3 முறை தொடர்ந்து வென்றவர் என்ற தன் குருநாதர் எம்.ஜி.ஆர். சாதனையை மட்டும்தான். 2021 தேர்தலில் வெல்வதன் மூலம் அந்த சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு ஜெயலலிதாவுக்கு உள்ளது. இதற்காக அவர் செய்ய வேண்டியதெல்லாம் வரும் ஐந்தாண்டில் மக்கள் போற்றும் ஒரு நல்லாட்சியை தருவது மட்டும்தான்.

ஜெயலலிதா செய்வாரா?

# முரண்பாடுகளால்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

திட்டங்கள் உள்ளன. இதனை யார் செய்வது என்ற போட்டியாலும், அநாவசிய முரண்பாடுகளாலும் அவை தள்ளிப் போகவோ, இல்லாமலாகவோ எவரும் இடமளிக்கக் கூடாது.

ஒவ்வொரு தரப்பினரும் தூர நின்று முரண்பட்டுக்கொள்வதை தவிர்த்து கூடிப் பேசி பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும். வடக்கில் எந்தவொரு அபிவிருத்தி பணிகளையும், மக்களுக்கான நலத் திட்டங்களையும் மேற்கொள்ளும் போது, வட மாகாணசபையின் பங்களிப்பினை நிராகரிக்க முடியாது. அவர்களின் ஆலோசனைகளையும் பங்குபற்றலையும் மத்தியிலுள்ளவர்கள் பெற வேண்டும். புதிய ஆட்சியில் பங்காளிகளாக தமிழர் தரப்பினரும் இருப்பதால், தற்போதைய முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகள் மூலமாக தீர்த்துக் கொள்ளலாம். வட மாகாணசபைக்கும் மத்திய அரசின் பிரதிநிதிகளுக்கும் தற்போது ஏற்பட்டுள்ள முரண்பாட்டை நீக்கும் வகையிலான பேச்சுவார்த்தைகளை அரசாங்கத்துடன் நல்லுறவைப் பேணும் தலைவர் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் போன்றவர்கள் நினைத்தால் எளிதாக மேற்கொள்ள முடியும்.

எங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு அமைப்புக்கான நிதி, இந்த வருடம் 1 பில்லியன் டொலருக்கும் அதிகமான தொகையால் அதிகரிக்கும்.

ஒன்ராறியோ மக்கள் அனைவரும் அவர்களுக்குத் தேவையான பராமரிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக, புதிய மற்றும் சிறப்பான வழிகளில் முதலீடு செய்தல் என்பதன் கருத்து இதுதான்:

- 700 புதிய மருத்துவர்கள் மற்றும் சிறப்பு வல்லுநர்கள்
- 35 மருத்துவமனைகள் தற்போது, புதுப்பிக்கப்படுகின்றன, நவீனமயமாக்கப்படுகின்றன அல்லது விரிவாக்கப்படுகின்றன
- வீட்டில் பராமரிப்பதற்காக அல்லது சமூகத்தில் பராமரிப்பதற்காக, 250 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்படுகின்றது
- காத்திருக்கும் நேரத்தைக் குறைப்பதற்காகவும், பராமரிப்பு அணுகலை மேம்படுத்துவதற்காகவும், 345 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்படுகின்றது

இக்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமான வலுவான சுகாதார அமைப்பொன்றை இந்த முதலீடுகள் உறுதி செய்கின்றன.

ontario.ca/bettercare

ஒன்ராறியோ அரசாங்கத்தினால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# நம்பிக்கையுடன் 2021 தேர்தலுக்கு தயாராகும் திமுக

## தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள்

தமிழ்நாடு சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று, இப்போது ஆட்சியைக் கைப்பற்றியிருக்க வேண்டிய திமுக, தன் வாய்ப்பை தவற விட்டுள்ளது. ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பலையை தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்வதில் தோல்வியை தழுவியுள்ளது. என்றாலும், கடந்த சட்டசபையில் 23 உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சி அந்தஸ்து கூட இல்லாமல் இருந்த திமுக, 89 உறுப்பினர்கள் என்ற அசுர பலம்கொண்ட எதிர்கட்சியாக இந்த சட்டசபையில் அமருகிறது. இத்தனைக்கும் இரண்டாம் இடத்துக்கு திமுக வருவதே சந்தேகம் என சொல்லிக்கொண்டு, தேர்தல் களத்தில் திமுகவுக்கு சிம்ம சொப்பனமாக இருந்த தேமுதிக, மதிமுக, தாமக, விசிக, இரு கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆகிய ஆறு கட்சிகள் இணைந்த கூட்டணியை ஒரு இடங்களில்கூட வெற்றிபெற முடியாமல் செய்துவிட்டு, இந்த வெற்றியைப் பறித்திருக்கிறது திமுக. எப்படி நிகழ்ந்தது இது?

**- சிவதாணு -**

### திமுகவின் சறுக்கல்கள்


அதிமுகவுக்கு சாதகமான ஒரு விஷயம் திமுகவுக்கு சாதகமற்றதாகத்தானே இருக்க முடியும். பலமுனைப் போட்டி தனக்கு சாதகமானதில்லை என்பதை 2014 மக்களவை தேர்தலின்போது கண்கூடாகவே பார்த்து விட்டது திமுக. தேசிய ஜனநாயகக் கூட்டணி எதிர்ப்பு வாக்குகளைப் பிரித்ததால் தமிழகம், புதுச்சேரியில் திமுகவால் 40 தொகுதிகளில் ஒன்றில்கூட வெல்ல முடியவில்லை. எனவேதான், எப்படியாவது விஜயகாந்தை தங்கள் அணிக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என பல பிரயத்தனங்களைச் செய்தது திமுக. இந்நிலையில் மநகூ – தேமுதிக கூட்டணி



அமைந்துவிட காங்கிரஸ், புதிய தமிழகம் மற்றும் சில சிறிய கட்சிகளை மட்டும் இணைத்துக்கொண்டு தேர்தலைச் சந்தித்தது திமுக. இந்நிலை திமுகவுக்கு பெரும் பாதிப்புகளை உருவாக்கும் என்று அப்போதே அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்தார்கள். இந்த சட்டசபைத் தேர்தலில் அதிமுக அமோக வெற்றுபெறும் என்று சாமானிய மக்கள்கூட பேசினார்கள்.

இன்னொரு பக்கம், யாரை முன்னிலைப் படுத்துவது கலைஞரையா ஸ்டாலினையா என்பதில் ஊசலாட்டம் இருந்தது கட்சிக்கு. அது மக்களையும் குழப்பமடையச் செய்தது. மதுவிலக்கு விவகாரத்திலும் கிட்டத்தட்ட இதுபோன்ற ஒரு தடுமாற்றமான நிலைப்பாட்டை எடுத்தது திமுக. கடந்த ஐந்து ஆண்டுகளாக மதுவிலக்கு பற்றிப் பேசாத கட்சிகளே தமிழகத்தில் இல்லை. பரம வைரியான அதிமுகவுக்கு நிகராக திமுகவும் இந்த விஷயத்தில் மௌனம் சாதித்தது. ஆனால், மக்கள் மத்தியில் மதுவிலக்குக்கு பெரும் வரவேற்பு உள்ளது என்று தெரிந்த நிலையில், தேர்தல் வாக்குறுதியாக மதுவிலக்கை அறிவித்தது. இதனால், இது வாக்கு வாங்குவதற்கான முயற்சி மட்டுமே என்று மக்கள் முடிவு செய்து விட்டார்கள். 'உங்களது கட்சிக் காரர்கள்தானே மதுபான ஆலைகள் வைத்திருக்கிறார்கள்' என்ற கேள்விக்கு, 'அப்படி இருந்தால் அதை மூட நடவடிக்கை

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...



# அத்தனைக்கும் ஆசைப்படு!

வாழ்க்கையின் வெவ்வேறு தளங்களில், நீங்கள் வெவ்வேறு விடயங்களையும் வெவ்வேறு ஆட்களையும் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். எதற்கெல்லாம் பொறுப் பேற்றுக்கொள்வது என்ற கேள்வி எப்போதும் உங்களை அரித்துக்கொண்டே இருக்கும்.

இயற்கையின் சீற்றத்தால் பல வீடுகள் தரைமட்டமாயின. தமிழகக் கடலோரம் பல வீடுகள் அடித்துச்செல்லப்பட்டன. அப்போ தெல்லாம் யாருக்கோ, என்னவோ நடக்கிறது என்று அலட்சியமாக இருப்பீர்களா? தேசமே பொறுப்பேற்றுக் கொண்டு செயலாற்ற வேண்டிய தருணங்கள் அல்லவா அவை?

அடிபட்டு யாரோ சாகக் கிடப்பதைப் பார்க்கிறீர்கள். நீங்கள் பொறுப்புள்ளவராக என்ன செய்யமுடியும்? மருத்துவம் தெரிந்திருந்தால், அவருக்கான முதலுதவி அளிப்பீர்கள். இல்லையென்றால், உடனடி யாக அவருக்கு மருத்துவ உதவி கிடைக்க ஏற்பாடு செய்வீர்கள். மாறாக என்னுடன் தொடர்பு இல்லாதவருக்கெல்லாம் நான் எப்படிப் பொறுப்பேற்க முடியும் என்று அவரைக் கவனித்தும் கவனிக்காததும் போல் கடந்து சென்றால், உங்களுக்கும் பாதையோரம் கிடக்கும் கல்லுக்கும் என்ன வித்தியாசம்?

பொறுப்பு என்றால், செயலாக எதையாவது செய்தே ஆகவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உங்களைப் பற்றிய பொறுப்பு உணர்வு முழுமையாக இருந்தால் சூழ்நிலைக்குத் தக்கவாறுதான் நீங்கள் நடந்துகொள்ள முடியும்.

சிலசமயம் சூழ்நிலைக்குத் தக்கவாறு உங்களால் கையாள முடியாத எதையும் செய்யாமல் இருப்பது கூடப் பொறுப்பான செயல்தான். ஆனால், பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில் கூட, அவற்றைத் தட்டிக்கழிப்பது உங்கள் வெற்றிகளுக்கு ஒருபோதும் உதவாது.

உங்களுடைய சொந்தத் தொழிலாக இல்லாமல் இருக்கலாம். நீங்கள் உழைத்தால், யாரோ ஒரு முதலாளிதானே லாபமடைகிறான் என்று பொறுப்பற்று, கடனே என்று வேலை செய்யத் தோன்றலாம்.


உண்மையில், அந்தத் தொழிலைச் செய்ய உங்களுக்கு முழுத்திறமை இருக்கிறதா என்று இன்னொருவரின் முதலீட்டில் கற்றுக் கொள்ளக் கிடைத்திருக்கும் அற்புதமான வாய்ப்பல்லவா அது?

உங்களுடைய சொந்தத் தொழிலாகவே அதை நினைத்து, அதை வெற்றி பெறச் செய்ய என்னென்ன பொறுப்புகளை ஏற்றுக் கொள்ள முடியும் என்று பார்க்க வேண்டாமா?

இங்கே நீங்கள் முழுமையான ஈடுபாட்டு டன் செயலாற்றினால், மேம்படப்போவது உங்கள் முதலாளியின் தொழில் மட்டு மல்ல... உங்களுடைய திறமையும் தான்.

மாறாக அடுத்தவர் தொழில்தானே என்று சம்பளத்துக்கு வேலை செய்யும் அலட்சிய மனப்பாங்குடன் செயலாற்றினால், அந்தத் தொழில் விரைவிலேயே நசிந்து போகும். உங்களுக்குக் கிடைத்த வாய்ப்பு பறிபோகும்.

பொறுப்புடன் முழுமையாக வேலை செய்த தொழிலாளர்கள், பின்னாளில் பெரிய முதலாளிகளாக வளர்ந்திருக்கிறார்கள்



## சத்குரு வாசுதேவ்

என்று வெற்றி பெற்றவர்களின் சரித்திரங்கள் சொல்கின்றன.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

## குருவிடம் ஒரு குறுக்கு விசாரணை!

'கடவுளுக்கு நெருக்கமாக இருக்க வேண்டுமென்றால், அற்பமான அன்றாடக் காரியங்களையெல்லாம் உங்களைப்போல் துறந்து விட வேண்டுமா?' 'என் துணிகளை நானே துவைத்துக் கொள்கிறேனே. அது அன்றாடக் காரியமில்லையா? தென்னை மரங்களுக்குத் தண்ணீர் ஊற்றிக் கவனித்துக் கொள்கிறேன். எனக்கான உணவைத் தயாரித்துக் கொள்கிறேன்.... இவையெல்லாம் அற்ப காரியங்களா? இதையெல்லாம் தவிர்த்து விட்டு இந்த உலகத்தில் எப்படி வாழப் போகிறீர்கள்?

நீங்கள் அரசியலில் இருக்கலாம். கணக்கெழுதுபவராக இருக்கலாம். பெரிய நிர்வாகியாக இருக்கலாம். தெருவைச் சுத்தம் செய்பவராகக் கூட இருக்கலாம். இந்த உலகில் வாழ்ந்திருக்க சில காரியங்களைச் செய்துதான் ஆக வேண்டும். அவற்றை அற்பமென்று நினைத்துக் கொள்வதால் தான் வருகிறது ஆபத்து!

உங்களுக்குப் பிரியமான காரியம் எதுவோ, அதை முழுமையாகச் செய்தால், கடவுளுக்கு நெருக்கமாக இருக்கிறீர்கள் என்றுதான் அர்த்தம்.

இன்னொருவரைப் போல் வாழ வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு வீணாக வேதனைகளை வளர்த்துக் கொள்ளாதீர்கள்!'


## *4 day Inner Engineering Program*

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – June 9 - 12, 2016*

*TIMINGS:* Thursday June 9 : 6:30pm – 9:45pm
Friday June 10 : 6:30pm – 9:45pm
Saturday June 11: 8:30am – 7:00pm

*VENUE -* ***MISSISSAUGA***
Moonlight Convention Centre,
6835 Professional Ct, Mississauga, ON L4V 1X6,

***TORONTO***
Noor Cultural Centre,
123 Wynford Dr, Toronto, ON M3C 1K1

*Email: toronto@ishafoundation.org /Phone: 416 300 3010*
*Online registrations: www.innerengineering.com/live/toronto*






**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
**Commercial**
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383





OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# ஜெயலலிதாவுக்கு வடமாகாண முதலமைச்சர் பாராட்டு

"தமிழக முதல்வர் ஜெயலலிதா இலங்கைத் தமிழர்கள் சுமுகமான ஒரு தீர்வைப் பெற உந்து சக்தியாக நிற்பார் என்பது எமது கணிப்பும் எதிர்பார்ப்பும் ஆகும். இதன் பொருட்டு வடக்கு மாகாணசபையானது செல்வி ஜெயலலிதாவின் வெற்றியை வரவேற்றுப் பாராட்டும் அதேநேரம் அவரின் அரசுடன் கிட்டிய தொடர்பாடல்களை வைத்துக்கொள்வதற்கும் விரும்புகின்றது."

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சிவி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு மாகாண சபையின் 53ஆவது அமர்வு பேரவைச் செயலக சபா மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது தமிழகத்தின் முதலமைச்சராக மீண்டும் பதவியேற்றுள்ள செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு பாராட்டு தல்களைத் தெரிவித்து உரையாற்றிய போதே வடக்கு மாகாண முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

"செல்வி ஜெயலலிதா ஜெயராம் தமிழகத் தில் முதலமைச்சராக 6வது முறையாகப் பதவியேற்றுள்ளார். இது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. அதையொட்டி எமது மனமார்ந்த பாராட்டுதல்களை எம் யாவர் சார்பிலும் முதற்கண் தெரிவித்துக் கொள்கின்றேன். தமிழ் நாட்டின் வளர்ச்சிக் கும் பெருமைக்கும் அவர் இதுவரை காலமும் ஆற்றிய சேவை அங்குள்ள மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்க ளால் அங்கீகரிக்கப்பட்டமையே அவரின் இந்த வெற்றி.



எமது நாட்டின் தமிழ் மக்களும் அம்மையாரின் இந்த வெற்றியால் மன மகிழ்ச்சியும், நம்பிக்கையும், தைரியமும் அடைந்துள்ளார்கள். எமது மக்களின் சுய நிர்ணய உரிமைக்காகவும் அவர்களின் பாது காப்புக்காகவும் யுத்தம் நடைபெற்ற காலங் களிலும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் கொள்கை பிறழாமல் துணிச்சலாகக் குரல் கொடுத்து வந்தவர் செல்வி ஜெயலலிதா. 'அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு' என்ற வள்ளுவன் கூற்றுக்கமைய இந்நான்கு பண்புகளும் செல்வி ஜெய லலிதாவின் ஆட்சியில் குறைவுபடாமல் இருந்து வருவதை நாம் அவதானித்திருக்கின்றோம்.

இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் தற்போது வெற்றி யீட்டியிருக்கும் தமிழக முதலமைச்சர் எமது அரசியல், சமூக, பொருளாதார அபிலா ஷைகளை நாங்கள் வென்றெடுக்க உறுதியான துணையாக இருப்பார் என்பது எமது எதிர்பார்ப்பு. போரில் கணவன்மாரை இழந்த 89 ஆயிரத்துக்கும் அதிகமான பெண்களினதும், காணாமல்போன பல்லாயிர க்கணக்கானவர்களின் உறவினர்களதும், போரினால் உடல் ஊறினையும் மன உளைச்சலையும் எதிர்கொண்ட எம் பாதிக்கப்பட்ட மக்களதும், தம் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் உள்நாட்டுப் புலம்பெயர் மக்களினதும், பல்லாயிரக் கணக்கான பாதிக்கப்பட்ட சிறார்களினதும் மற்றையோர்களினதும் துயர்களைத் துடைத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றக் கூடிய மனிதாபிமான தேவைகளை நிறை வேற்ற வேண்டிய அவசியம் எமக்குண்டு.

பலகாரணங்களினால் எமது மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலையே இங்கு இதுகாறும் இருந்து வந்துள்ளது. இந்நிலை மாற வேண்டும். செல்வி ஜெயலலிதா போன்ற மனிதாபிமானமுள்ள தலைவர்கள் எமது மக்களின் விமோசனத்திற்காகப் பாடுபடும் எமக்கு உறுதுணையாக இருப்பர் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

சரித்திர ரீதியாகப் பார்த்தால் 1983ஆம் ஆண்டின் கலவரத்தின் பின் இலட்சத்திற் கும் மேலான புலம்பெயர் தமிழர்கள் தமிழ் நாட்டில் சரணடைந்தனர். அன்று தொடக்கம் இன்றுவரையில் மனங் கோணாமல் எம் மக்களை அங்குவைத்துப் பார்த்துப் பரா மரித்து வருவது சாதாரண ஒரு விடயமன்று. தம் மக்களைப் பார்க்க வேண்டிய கடப்பாடுடையவர்கள் எம் மக்களையும் 33 வருடகாலமாகப் பார்த்துப் பராமரித்து வருவது எமது மனப்பூர்வமான நன்றி யறிதல்களுக்குரியது.

இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டபோது இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் இந்திய அரசே முகவராக நின்று அதை முன்னேற்றியது. இந்திய அரசாலும் தமிழ் மக்களாலும் எதிர்பார்க்கப் பட்டவை 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தராதுவிடப்பட்டதை விடத் தரப்பட்ட உரித்துக்களும் எமது ஒற்றையாட்சியாளர் களால் பின்னர் பறித்தெடுக்கப்பட்டன. போருக்குப் பின்னர் நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது. இலட்சத்துக்கும் அதிகமான இராணுவத்தினர் இன்றும் எம்மிடையே வடக்கு, கிழக்கு மாகாணங் களில் முகாம் இட்டுள்ளார்கள். எம் காணிக- ளில் பயிரிடுகின்றார்கள். வருமானத்தைத் தாம் எடுக்கின்றார்கள். எம்மக்களின் தொழில்களுள் உள்ளீடு செய்கின்றார்கள். பல இடர்களுக்கு எம்மக்கள் முகங் கொடுத்து வருகின்றனர். சிதைந்த 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்து சிறந்த சமஷ்டி முறையொன்றுக்கு இந்நாடு

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


NO MEDICAL INSURANCE

No Questions Asked! No Medical Exams! 100% Guaranteed Approval!

Recently got cancer, heart attack, any heart conditions, stroke, high blood pressure, diabetes, or any medical conditions.

• 18 முதல் 85 வயதானவர்கள் எவரும் எந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களாயினும், எந்தக் குறைபாடு உள்ளவர்களாயினும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தாலும் இந்தக் காப்புறுதியைப் பெறலாம்.

• விசா இல்லாதவர்களும் சுப்பர் விசாவில் உள்ளவர்களும் 78 வயதுவரை பெறலாம்

KABIS
KABIS & ASSOCIATES INC.

உங்கள் தற்போதைய காப்புறுதி பற்றிய சகல சந்தேகங்களுக்கும் உடன் அழையுங்கள்.

Does your current life insurance policy need a tune up please call me.



Nimal Subramaniam

Cell: 416.816.7994 Email:neel900@hotmail.com

La Capitale Financial Group
IA INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC.
Assumption Life

•Life Insurance • Critical Illness Insurance • Disability Insurance • Mortgage Insurance • RRSP • RESP
•Non-Medical Insurance •Travel Insurance •Super Visa Medical Coverage •Drug and Dental Plan •TFSA

# நம்பிக்கையுடன்...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

எடுக்கப்படும்' என்று சொன்னார் கருணா நிதி. மக்களை எளிதாக எடைபோட்டு விட்டார் அவர். "மூடிவிட்டு மதுவிலக்கை தேர்தல் அறிக்கையில் சேர்த்திருக்கலாமே" என்பது மக்கள் எதிர்பார்ப்பு. எனவே, வழக்கம்போல் இதுவும் கருணாநிதியின் ஒரு தேர்தல் நேர நாடகமாக இருக்கும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.



மேலும், இந்தத் தேர்தலில் திமுகவின் அணுகு முறையிலும் செயல் தந்திரத்திலும் கார்பரேட்தனம் மிளிர்ந்தது. அத்துடன் திமுக கையிலெடுத்த ஒவ்வொரு பிரச்சி னைக்குப் பின்னாலும் அவர்களது முந்தைய தவறுகள் பின்னோக்கி இழுத்தன. உதாரணமாக மீத்தேன் திட்டம். அதனால், திமுகவைக் கையாள்வது ஜெயலலிதா வுக்கு எளிதாக இருந்தது. அந்த வகையில் இந்த தேர்தல் திமுகவின் முந்தைய ஐந்தாண்டு கால ஆட்சியையும் பிரதிபலித்த தேர்தலாக மாறிப்போனது.

## எதிர்நீச்சல் போட்ட ஸ்டாலின்

ஒரு பக்கம் பலமுனைப் போட்டியால் ஆட்சிக்கு எதிரான வாக்குகளை அப்படியே அள்ள முடியாத நிலை, இன்னொரு பக்கம் 2006 – 2011 திமுக ஆட்சிக் காலத்தை மறக்காமல் வைத்திருந்த மக்கள் என திமுகவுக்கு எதிரான அலையும் தேர்தல் களத்தில் பலமாக வீசியது.

இந்நிலையில்தான் 'நமக்கு நாமே' பயணத்தைத் தொடங்கினார் ஸ்டாலின். கிட்டத்தட்ட தமிழகம் முழுக்க சுற்றி வந்த ஸ்டாலின் இரண்டாவது சுற்றாக 234 தொகுதிகளிலும் சூறாவளிப் பிரச்சாரம் செய்தார். இன்னொரு பக்கம் அவரது மருமகன் சபரீசன் டீம் 'முடியட்டும் விடியட்டும்' என்று சமூக வலைத்தளங்கள், தொலைக்காட்சி மற்றும் பத்திரிகை விளம்பரங்கள் என நாலா பக்கமும் பலமான பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஆளுங்கட்சிக்கு எதிராக பெரிதாக எதிர்ப்பலை இல்லை என்ற நிலையை மாற்றி, ஜெயலலிதாவே அஞ்சிய ஓர் எதிர்ப் பலையை உருவாக்கியது ஸ்டாலினின் பிரச்சாரத்துக்கு கிடைத்த வெற்றிதான். செம்பரம்பாக்கம் ஏரியை நள்ளிரவில் திறந்துவிட்டு மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தியதாக ஜெயலலிதா அரசுக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்த ஸ்டாலின் வியூக பிரச்சாரங் களுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. சென்னையிலுள்ள 16 தொகுதிகளில் பெரும்பான்மை தொகுதிகளை திமுக கைப்பற்றியுள்ளது. அமைச்சர்கள் கோகுல இந்திரா, வளர்மதி போன்றோரே தோல்வி யடைந்துள்ளனர். ஆர்.கே.நகரில் முதல்வர் ஜெயலலிதா வெற்றிபெற்றாலும் வாக்கு வித்தியாசம் மிகப்பெரிய அளவில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் இழந்த தன் பழைய கோட்டையை திரும்ப வும் கைப்பற்றியுள்ளது திமுக. சென்னை மட்டுமல்லாமல் ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுக்க இந்தத் தேர்தலில் திமுக வாக்கு சதவிகிதம் மிகக் கணிசமாக உயர்ந்திருக் கிறது. வெற்றிபெற்றுள்ள அதிமுகவைவிட 2க்கும் குறைவான சதவிகித வாக்குகளே திமுக கூட்டணி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

வெற்றி என்பது அதிகாரத்தை அடைவது என்பதாகவே அரசியலில் பொருள் கொள்ள ப்படும். அதனால், தேர்தல் முடிவுகள், 'நாளை நமதே' என்ற நம்பிக்கையுடன் இருந்த திமுகவினருக்கு பெரும் சோர்வை ஏற்படுத்தியுள்ளதை புரிந்துகொள்ள முடியும். ஆயினும், 89 தொகுதிகளில் வெற்றிபெற்று ள்ளதும், வாக்கு சதவிகிதம் அதிமுகவை நெருங்கி வந்துள்ளதும் அவர்களுக்கு பெரும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள் ளது.

விஜயகாந்தின் தேமுதிக கட்சியை கூட்டணிக்குள் கொண்டுவர முடியாமல் போனது, திமுகவுடன் இருந்த திருமாவளவ னின் விடுதலை சிறுத்தைகள் கட்சியை வெளியேற்றியது போன்ற பல காரணங்க ளால், ஆட்சியைக் கைப்பற்றியிருக்க வேண்டிய திமுக, அதில் தவறியதற்கு எப்படி ஸ்டாலின் காரணமோ அப்படி, தற்போது 89 தொகுதிகளில் வெற்றிபெற்று, பலமான எதிர்கட்சியாக திமுக அமர்வதற் கும் முழுக்க முழுக்க ஸ்டாலினே காரணம். அடுத்த 2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் நிச்சயம் ஸ்டாலின் பெரும் சக்தியாக இருப்பார் என்பதற்கு நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளே கட்டியம் கூறுகின்றன. மக்களோடு இருப்பதென்பது அதிகாரத்தில் இல்லாதபோதுதான் நிறைய சாத்தியம். தற்போது ஸ்டாலின் முன் அந்த வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. புதிய வாய்ப்புகளுக்கு ஜெயலலிதாவும் குறை வைக்கமாட்டார். ஜெயலலிதா பதவியேற்பு விழாவில் பதினைந்தாவது வரிசையில் எளிமையாக அமர்ந்திருந்த ஸ்டாலின் முந்தைய வரிசைகளைக் கடந்து அடுத்த ஐந்தாண்டுகளில் மேடையை அடைந்து விடவும் முடியும். அதற்கு அவர் செய்ய வேண்டியதெல்லாம், நல்லதொரு எதிர் கட்சியாக செயல்படுவது மட்டும்தான்.

ஸ்டாலின் செய்வாரா?

# ஜெயலலிதாவுக்கு...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

மாறவேண்டிய அவசியம் உண்டு. அதற்கு இந்திய அரசின் ஒத்துழைப்பும் பங்கும் மிக முக்கியமானது. புலம் பெயர் எம்மக்கள் இன்னமும் இந்திய மண்ணில் அவர்கள் பராமரிப்பில் இருக்கின்றார்கள். அவர்களின் திரும்பல் முக்கியமானது என்பதைவிட இலங்கைத் தமிழ் மக்கள் சார்பில் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட இந்திய அரசுக்கு எமது தற்போதைய நிலைமையும் எமது வருங்காலமும் தார்மீகப் பொறுப்புக்களாக அமைந்துள்ளன என்பதை இந்திய அரசுக்கு எடுத்துக் கூறக்கூடிய ஒரே தலைவர் செல்வி ஜெயலலிதா மட்டுமே. அவர் அதைச் செய்து சுமுகமான ஒரு தீர்வை நாம் பெற உந்துசக்தியாக இருப்பார் என்பது எமது கணிப்பும் எதிர்பார்ப்பும். கலை, கலாச்சாரம் மேலும் அரசியலால் எம் இரு நாடுகளின் தமிழ்பேசும் மக்களின் நெருக்கமான ஒத்துழைப்பை நாம் யாவரும் வேண்டி நிற்கின்றோம். மேற்படி எமது பாராட்டுதல்களை எமது அவைத் தலைவர் செல்வி ஜெயலலிதாவுக்கு உத்தியோகபூர்வமாக உரிய முறையில் சேர்ப்பிப்பார் என நம்புகின்றேன்" - என்றார்.







# "நீதன் சான் தகுதியான வேட்பாளர்" - அன்றியா கோவத்

"திரு. நீதன் சான் எதனையும் சிறப்பாக ஏற்பாடு செய்யும் திறமை கொண்டவர். அத்துடன் கல்விச் சபை உறுப்பினராகவும், அரசியல்வாதியாகவும் திகழ்கின்றார். ஸ்காபுறோ றூஜ் றிவர் தொகுதியில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தலில் என்.டி.பி.கட்சி வேட்பாளராக திரு. நீதன் சானை இன்று அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். அத்தொகுதியில் வாழும் மக்களுக்கு சாதகமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசியல் மாற்றம் அத்தியாவசியமாகும். தற்போது பதவியிலுள்ள லிபரல் அரசாங்கம் சுகாதார வசதிகள் உட்பட சகல வசதிகளையும் குறைத்துக் கொண்டு வருகின்றது. மின்சாரக் கட்டணத்தை அதிகரித்துள்ளது. எனவே நாம் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும். அதனால் றூஜ் றிவர் தொகுதி வாழ் மக்கள் நமது என்.டி.பி. கட்சியின் சிறந்த வேட்பாளரான திரு. நீதன் சானுக்கு நீங்கள் வாக்களித்து அவரை வெற்றியீட்டச் செய்ய வேண்டும்."

**- வீரகேசரி மூர்த்தி -**

ஸ்காபுறோ என்.டி.பி.கட்சியின் அலுவலக கட்டிடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய என்.டி.பி.கட்சியின் ஒன்ராறியோ மாகாணத் தலைவி திருமதி அன்றியா கோவத் இவ்வாறு கூறினார். செயற்திறன் மிக்க இளம் வேட்பாளரான திரு. நீதன் சானின் கையைப்பற்றி உயரத் தூக்கியவாறு அவர் இதனை அறிவித்தார்.

திருமதி அன்றியா கோவத் தொடர்ந்து உரையாற்றிய போது "ஸ்காபுறோ தொகுதி நீண்ட காலமாகக் மாகாண அரசால் கைவிடப்பட்ட நிலையில் இருந்து வருகின்றது. லிபரல் அரசாங்கம் சுகாதார சேவை வசதிகளை வெகுவாகக் குறைத்துள்ளது. ஸ்காபுறோ சென்ரனறி வைத்தியசாலைகளில் போதிய இட வசதி இல்லாது நோயாளர்களின் தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. ஆகையினால் அங்கு வாழும் சமூகத்தை சேர்ந்த ஒருவர் எம்.பி.பி.யாக தெரிவு செய்யப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். திரு. நீதன் சானை பற்றி நான் நன்றாக அறிந்து வைத்துள்ளேன். அவர் கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக றூஜ் றிவர் தொகுதியில் வாழும் பல்லின மக்களின் நலன் கருதி அர்ப்பணிப்புடன் செயலாற்றி வருகின்றார். கல்விச்சபை, உணவு வங்கி போன்ற பவ்வேறு துறைகளிலும் ஆர்வத்துடன் செயலாற்றி வருகின்றார். அவரை இத்தேர்தலில் வெற்றி ஈட்டச் செய்வதற்கு நீங்கள் அனைவரும் உங்கள் ஆதரவினையும், ஒத்துழைப்பினையும் வழங்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்" என்றார்.

வேட்பாளரான திரு. நீதன் சான் உரையாற்றிய போது "றூஜ் றிவர்" தொகுதி வேட்பாளராக என்னை தெரிவு செய்ததற்கும், அத்துடன் இன்றைய கூட்டத்தில் கலந்து கொண்டு எனக்கு ஆதரவாக உரையாற்றியமைக்காகவும் திருமதி. அன்றியா கோவத்துக்கு முதற் கண் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஸ்காபுறோ தொகுதியின் முன்னேற்றத்துக்காக இதுவரையில் எந்தவொரு மாகாணசபை உறுப்பினர்களும் திருப்தியாக உழைக்கவில்லை.




ஆனால் நாம் அதற்காக உழைப்போம் என்பதனை உறுதிப்படுத்த விரும்புகின்றேன். சிறந்த கொள்கையின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டால் அதனை சாதிக்க முடியும் என்பதில் நான் அசையாத நம்பிக்கை கொண்டுள்ளேன். பதினாறு வயதில் கனடாவுக்கு வந்த நான் இங்குள்ள கல்விப் போதனை முறை பற்றி நன்கு அறிவேன். இளம் சந்ததியினருக்கு கல்வி அத்தியாவசியமாகும். அதனால் கல்விச் சேவை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்" எனக் கூறினார்.

மேற்சபை உறுப்பினராகப் பணியாற்றிய திருமதி. பற்றி நாஷ் உரையாற்றிய போது "ஆட்சி முறையில் வெகுவிரைவில் நாம் மாற்றத்தினை ஏற்படுத்துவோம். பாக்டேல் தொகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்டு என்.டி.பி.கட்சித் தலைவராகத் திகழ்ந்தவர் அமரர் ஜக் லேட்டன். அவர் எமது கட்சியின் வளர்ச்சிக்காக கடுமையாகப் பாடுபட்டு உழைத் தவர். திரு. நீதன் சானும் கடுமையாக உழைப்பார். அவரது குரல் மாகாண நாடாளுமன்றத்தில் ஒலிக்க வேண்டும். அதற்காக தேர்தல் பணிகளுக்காக நீங்கள் நிதி உதவி செய்து அவரை வெற்றி ஈட்டச் செய்யவேண்டும்" எனக் கேட்டுக் கொண்டார்.

நயாகரா தொகுதி எம்.பி.பியான திரு. வெயின் கேற்ஸ் உரையாற்றிய போது "நீங்கள் தேர்தல் செலவுக்கு நிதியுதவி செய்தால் அதில் கணிசமான தொகையினை மீளப் பெறலாம். ஆயிரம் டொலர் அன்பளிப்புச் செய்தீர்களானால் அதில் அறுநூறு டொலாரை மீளப் பெறலாம்" எனக் கூறினார். கூட்டத்தில் கலந்து கொண்டிருந்த பலர் நிதியுதவி செய்ய முன்வந்தனர். அத்துடன் அதற்கான விண்ணப்பப் படிவத்தினையும் பூர்த்தி செய்து கொடுத்தனர்.

MARKHAM & KINGSTON
TOWN HOMES



* Close access to TTC stops and Eglinton GO Station
* 12 minutes away from U of T Scarborough and Centennial College
* Close to shops and restaurants
* Nearby Parks include South Marine Park, Bellamy Road Park, and Cedargrove Park



Price Starting From: $299,000
A. Anton Jeeva, FRI
(Broker)
Remax Dynasty Realty Inc., Brokerage*
Dir: 415.575.5055
Office: (905)471-0002 Fax: (905)471-7441
Email: anton.jeeva@gmail.com
Web: www.antonjeeva.com
8 Shadlock St, Unit 7, Markham, ON L3S 3K9
RE/MAX Dynasty Realty Inc. Real Estate Brokerage

# வங்கியோடு ஏமாற்றம் வருமா? வந்தால் அணுகும் வழி என்ன?

## கனடிய தகவல் தொடர் 250

பல வருடங்களுக்கு முன்பு ரொறொன்ரோவில் எதிர்கொண்ட சம்பவம். வங்கி ஊழியர் ஒருவர் தனது அதிகாரத்தினை வங்கிக்கு வெளியே இரகசிய வர்த்தகமாக நடத்தி வந்தார். சில தமிழர் அவரை நம்பி அவருடன் தொடர்புவைத்து பணத்தை இழந்திருந்தனர்.

பங்குகள் வாங்கி விற்பனை செய்யும் அந்த தொழிலில் பணம் முழுவதனையும் அந்த ஊழியரின் (Bank Stock Trader) வழிகாட்டலில் முதலிட்டு அவர்கள் இழந்ததுதான் இறுதியாக கண்ட மிச்சம். அதே வங்கியின் மேலதிகாரிகளின் அலுவலகத்திற்கு முறைப்பாடுகள் எடுத்து செல்லப்பட்ட போதும் அசட்டையுடன் அவர்களும் அவற்றை சமாளித்து அனுப்பி விட்டனர்.

அவர்களிடமிருந்து நியாயமான தீர்வு ஏமாற்றப்பட்டவர்களுக்கு வரவுமில்லை. ஏமாற்றிய ஊழியருக்கும் தண்டனையும் வழங்கியதாகவும் தெரியவில்லை. பிரச்சினை அடுத்த கட்டத்திற்கு நகர்ந்தது. அங்கு நியாயமான முறையில் தீர்வு ஒன்று தேடி வந்தது. அடுத்த கட்டத்தில் தங்கள் பிரச்சினைகளுக்கு அதிகார பூர்வமாக நியாயம் வழங்குபவர்கள் யார்? அதுவே இங்கு குறிப்பிடப்போகும் விடயமாகும். இனி விடயத்திற்கு வருவோம்.

கனடாவில் இயங்கும்:

- வங்கிகள் (Banks)
- நிதியியல் கம்பனிகள் (Credit Companies)
- முதலீட்டு நிறுவனங்கள் (Investment Firms & Mutal Fund Dealers)போன்ற

எவையோடும் பிரச்சினைகள், ஏமாற்றங்கள், முரண்பாடுகள் ஏற்படுமாக இருந்தால் அதனை பின்வரும் வழிமூலம் அணுகி ஒரு தீர்வினை காணுங்கள் என இவற்றினை நடத்துவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கி, கண்காணிக்கும் கனேடிய மத்திய மற்றும் மாகாண நிதி அமைச்சு ஆலோசனை வழங்குகின்றது.

முதலில் அந்தப் பிரிவு தலைமை நிர்வாகியோடு அணுகி தீர்வினை காண முயலுங்கள். அங்கும் தீர்வு இல்லையேல்; அந்த வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் தலைமை பிரிவுடன் (Bank Head offiece - Customer Service) அணுகி இரண்டாவது கட்ட நிலைமையில் தீர்வினை காண முயலுங்கள். அங்கும் நியாயமான தீர்வு கிடைக்காவிட்டால்? மூன்றாவது கட்டம்; அதாவது ஒவ்வொரு வங்கிக்கும் என இயங்கும் நியாயமன்றத்திற்கு மனு செய்து தீர்வு காண முயலுங்கள்.

ஒவ்வொரு வங்கிக்கும் ஒவ்வொரு நியாய மன்றம் உள்ளது. அதனை ஆங்கிலத்தில் 'Ombudsman Office' என குறிப்பிடப்படும். அவை தொடர்பான விபரங் களை அந்தந்த வங்கிகளில் கேட்டால் தந்து உதவுவார்கள். ஒவ்வொரு வங்கி, நிதியியல் கம்பனி முதலீட்டு நிறுவனத்தி னுள் உள்ள நியாய மன்றத்தில் சாதகமான தீர்வு தங்களுக்கு கிடைக்கவில்லையானால் இறுதியாக அதாவது நாலாவது கட்டமாக மறுபரிசீலனை செய்ய வேண்டிய இடம் சகல நிதி நிறுவனங்களுக்கும் பொதுவாக உள்ள ஒரு உச்ச நியாயமன்றம் போன்றது ஆகும். அதன் விபரம் பின்வருமாறு :

***OBSI - Ombudsman for Banking Services & Investments***
401, Bay St, Suite # 1505
P.O.Box 5
Toronto, ON M5H 2Y4
Phone - 1-888-451-4519
(416)-287-2877/Fax - 1-888-422-2865
(416)-225-4722
E.mail - ombudsman@obsi.ca
web- www.obsi.ca

1996ஆம் ஆண்டிலிருந்து அரச நிர்வாகத்தில் இயங்கி வரும் இவ் உச்ச நியாய மன்றம் பாரபட்சமற்ற முறையில் இலவசமாக பிரச்சினைகளை தீர்த்து வைக்கும். எதுவிதமான சட்டத்தரணிகள் செலவுப் பிரச்சினைகள் இல்லாது தாங்களாகவே மனுச் செய்யலாம்.

2015ஆம் ஆண்டில் மட்டும் உச்ச நியாய மன்றம் எனக்கருதப்படும் இவ் அலுவலகத்திற்கு 5,300 பிரச்சினைகள், முறைப்பாடுகள் மறுபரிசீலனை செய்யப்பட்டதாகவும், இவற்றில் 571 முறைப்பாடுகளை விசேட புலன் விசாரணைகளுக்காக உத்தரவிட்டதாகவும் இந்நிறுவனம் அறிவித்துள்ளது. இவ் உச்ச நியாய மன்றத்தின் விசாரணைக்கு வந்த பலமுறைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளை இக்கட்டுரைக்காக ஆய்வு செய்து பார்த்தபோது நிராகரிக்கப்பட்டவையும் ஏராளம் இருந்தன.

பாதிக்கப்பட்டவர்கள் பக்கம் நியாயம் உள்ளது என்பது உண்மையாகத் தெரிந்தால் அவற்றிற்குரிய நட்டஈடுகள் வழங்க வேண்டும் எனவும் தீர்ப்புகள் வழங்கப்பட்டிருந்தன. வங்கிகளோடு ஏமாற்றங்கள் வருமா? என்ற கேள்விக்கு பதிலாக, இவ் உச்ச நீதிமன்றத்திற்கு வந்து தீர்வு காணப்பட்ட பல முறைப்பாடுகளில் மூன்று பிரச்சினைகளை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

### "காசோலையூடாக பணத்தை திருட முயன்ற ஊழியர்"

அவரது வங்கியிலிருந்து அந்த சிறு வர்த்தகருக்கு ஒரு தொலைபேசி அழைப்பு அன்று வந்திருந்தது. 'உங்களின் $90,000 காசோலைக்கு பணம் கணக்கில் குறைவாக இருப்பதால் மேலதிக கொடுப்பனவிலிருந்து (Bank Overdraft) கொடுக்கப்படும். அதற்கு சம்மதமா?' இப்படித்தான் கேட்டிருந்தார்கள். அந்த வர்த்தகர் திடுக்கிட்டுப் போனார். ஏனெனில் அவர் அப்படியொரு காசோலையினை அந்த தொகைக்கு எவர் பெயரிலும் எழுதவேயில்லை.

அவரது சிறு வர்த்தகத்தில் பணி புரிந்த ஒரு ஊழியர் அவரது காசோலையினை திருட்டுத்தனமாக எடுத்து அதேமாதிரி கையொப்பம் வைத்து, அவரின் வங்கிக் கணக்கில் இருந்து பணத்தை திருட முயற்சித்த விடயம் இறுதியில் இலகுவாக பிடிபட்டு விட்டது.

என்ன ஆச்சரியம்! அதே ஊழியர் இதற்கு முதல் இதே பாணியில் காசோலையினை திருடி மோசடி கையொப்பம் இட்டு $21,500 டொலர் ஏற்கனவே எடுத்திருந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்தது. மாதிரி கையொப்பத்தினை (Specimen Signature) துல்லியமாக பரிசோதனை செய்யாது மோசடிகாரனின் கைகளுக்கு பணத்தினை கைமாற விட்டது. வங்கியின் குற்றமா? இப்படி ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டபோது வங்கி அந்த குற்றசாட்டினை ஏற்க மறுத்து விட்டது.

தங்களின் காசோலைகள், கணக்கு இலக்கங்கள் யாவற்றினையும் பாதுகாப்பாகவும், இரகசியமாகவும் வைத்திருப்பதோடு அவற்றை என்றும் மோசடிகளுக்கு உட்படாது பாதுகாக்க வேண்டியது வங்கிக் கணக்கு வைத்திருப்பவரின் பாரிய பொறுப்பு என்பது வங்கிகளின் சட்ட விதிகள் உடன் படிக்கைகளில் உள்ள விடயமாகும். அந்த அடிப்படையில், வங்கி அந்தப் பொறுப்பினை ஏற்க மறுத்தது. இந்தப் பிரச்சினை இறுதியாக கனேடிய அரசினால் நியமிக்கப்பட்ட வங்கிகளின் நியாயமன்றத்தின் (Ombudsman for Banking Services & Investments) விசாரணைக்கு வந்தது. பிரச்சினை வங்கிகளின் சட்ட நுணுக்கங்களின் அடிப்படையில் ஆராயப்பட்டது.


'ஊழியர் ஒருவரின் மோசடியில் நட்டஈடு வழங்கக் கூடாது என்பது வங்கிக் கணக்கு உடன்படிக்கையில் குறிப்பிடப்படவில்லை' என்ற வாதம் அங்கு வைக்கப்பட்டபோது நியாயமன்றம் அதனை ஏற்றுக்கொண்டது. அந்த மோசடியில் பறிகொடுத்த $21,500 டொலர் பணம் அந்த வங்கி கொடுத்தே ஆக வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது. மோசடிக்காரனுக்கு வழங்கப்பட்ட தண்டனை என்ன? அது வேறு கதை.

### "வங்கியில் வைப்பு செய்வதில் ஏற்பட்ட தவறு"

திருமணப் பதிவுகள் என எவையுமில்லாது ஒன்றாக பல காலம் வாழ்ந்த ஒரு வயதான தம்பதியினர் (Common law couple) சிறுகச்சிறுக வங்கி முதலீட்டு திட்டத்தில் (Mutual fund) பணம் சேமித்து அது $120,000க்கு வளர்ச்சியடைந்த போது, அந்தப் பணத்தினை வெளியே எடுத்தனர். கூட்டான முதலீடு என்பதால் இருவர் பெயரிலும் $120,000 டொலர் பெறுமதியான காசோலை வழங்கப்பட்டது. அந்தக் காசோலையினை இருவரும் சேர்ந்து தங்களின் கூட்டான வங்கிக் கணக்கில் வைப்பு செய்திருந்தனர். ஒரு சில வருடங்களின் பின்பு கணவன் மரணமாகிவிட்டார். மனைவி அப்பணத்தினை எடுக்க வங்கிக்கு போனபோது அவருக்கு ஆச்சரியம் ஏற்பட்டது.

இருவரின் பெயரிலும் கூட்டாக இருந்த காசோலையினை கூட்டாக வைத்திருக்கும் வங்கிக் கணக்கில் வைப்பில் இட்டதாகவே அவர் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால் அது அவரது கணவருக்கும், அவரது முதல் மனைவியின் மகளுக்கும் கூட்டாக இருந்த கணக்கில் தவறுதலாக வைப்பு செய்யப்பட மகள் பணத்தினை வெளியே எடுத்து விட்டார். வங்கியும் கை விரித்துவிட அது நியாய மன்றத்தின் விசாரணைக்கு வந்தது. அங்கு வங்கியின் தவறு நியாயமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

• தம்பதி இருவரினது பெயரிலும் உள்ள காசோலையினை அவர்கள் இருவரின் பெயரிலும் உள்ள கூட்டுக் கணக்கில் சரியாக வைப்பு செய்யப்படுகின்றதா? என்பதனை வங்கி உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் அது இங்கு நடைபெறவில்லை.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 19ஆம் பக்கம்...



# இருதயநோய் - மாரடைப்பு ஓர் எச்சரிக்கை அறிக்கை!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### *Warning report for heart disease, attack*

இக்காலகட்டத்தில் இளம் மற்றும் நடுத்தர வயதினரிடையே ஏற்பட்டுக் கொண்டிருக்கும் மரணங்களை எடுத்துக் கொண்டால் அதில் 80%க்கு அதிகமானவை இருதய நோய் மற்றும் அதுசார்ந்த மாரடைப்பு போன்ற வற்றால் நிகழ்ந்து வருவதை நாம் அறிய முடிகிறது. எனவே இந்த துயரமான நிலையிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்ள, சில வழிமுறைகளை பின்பற்றுவது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

**இதயநோயின் அறிகுறிகளை எப்படி கண்டறிவது?**

இதய நோயின் ஆரம்பத்தில் கீழ்க்கண்ட அறிகுறிகள் தோன்றலாம். அதற்கு பொருத்தமான சிகிச்சை முறைகளை விரைவாக எடுப்பது சிறந்தது.

1. நெஞ்சுவலி
2. நடக்கும்போது மேல்மூச்சு வாங்குதல்
3. உடலெங்கும் நீலநிறம் உண்டாதல்
4. அடிக்கடி உண்டாகும் மயக்கம்
5. மார்பு படபடப்பு
6. இருமும் போது இரத்தம் வருதல்
7. விடாது வரட்டு இருமல்

இவற்றில் சிலவோ அல்லது அனைத்துமே இதயநோயின் அறிகுறிகளாகலாம்.

இதய வலியைத் தூண்டும் சூழல்கள் எவை?

1. அதிகமான, உடலுழைப்பு, உறக்கமின்மை அதிக அலைச்சல், அதிகமான உடற்பயிற்சி.
2. அளவுக்கு மீறிய உணவு.
3. மிகவும் குளிர்ந்த காலநிலையால் திடீரென தாக்கப்படுதல்.
4. உயரமான இடங்களுக்குச் செல்லுதல், மாடிப்படி ஏறுதல்.
5. கோபம், அதிகமாக உணர்ச்சி வசப்படுதல், கவலை, பயம், பீதி, விரக்தி.
6. அதிக நேரம் தூங்குதல்.
7. பயங்கரமான கெட்டகனவுகள்.

இப்படியான நிலைமைகளில் எவ்வித தூண்டுதலும் இல்லாமல் இதயத்தின்



இரத்த நாளம் தானாகவே சுருங்கும்போது இதயவலி வரலாம். மேலும் நெஞ்சுவலி வருவதற்கு இதயவலி தவிர வேறு காரணங்களும் உண்டு. ஆகையால் ஒருவருக்கு நெஞ்சுவலி வந்தால் அது எந்த வகையான நெஞ்சுவலி என்பதை மருத்துவரிடம் பரிசோதித்து தெரிந்து கொண்டு அதற்குரிய சிகிச்சை எடுக்க வேண்டும்.

மாரடைப்பிற்குக் காரணம் என்ன?

இதயத்துடன் தொடர்புடைய வலது இடது இரத்த நாளங் கள் பல கிளைகளாகப் பிரிந்து இதயத்திசுக்களுக்குத் தேவையான இரத்தத்தை தருகின்றன. இந்த நாளங்களின் உட்சுவரில் இரத்த உறைவுக்கட்டி, அல்லது கொழுப்புப் பொருள் மிகுதியாகப் படிந்து முழுவதுமாக அடைத்து விட்டால் இதயத்தின் ஒரு பகுதி திசுக்களுக்குத் தேவையான இரத்தம் கிடைக்காமல் போகும். இந்த நிலை தொடர்ந்திருந்தால் இதயத் திசுக்களுக்குத் தேவையான பிராணவாயுவும் உணவுச் சத்துகளும் முற்றிலும் கிடைக்காது போய்விடும். அப்போது இதயத்திசு அணுக்கள் இறந்து செயலற்றதாகி விடும். இதனால் நெஞ்சு வலி ஏற்படும். இதுதான் மாரடைப்பு (Heart attack) என்று அழைக்கப்படுகிறது. பொதுவாக முழுமையாக இதயத்திசு அணுக்கள் அழிவதற்கு எட்டு மணிநேரம் ஆகும். அதற்குள் மாரடைப்பிற்குத் தகுந்த சிகிச்சை பெற்றுவிட்டால் மரண ஆபத்திலிருந்து தப்புவதற்கு வாய்ப்புண்டு.

இதய செயலிழப்பை மோசமாக்கும் காரணங்கள்?

1. முறையற்ற மருத்துவ சிகிச்சை
2. ஒழுங்கற்ற இதயத்துடிப்பு
3. கருவுறல் (Pregnancy)
4. இரத்த சோகை
5. நுரையீரல் இரத்தக்கட்டி
6. இரத்த அழுத்தம் அளவு மீறுதல்

**மாரடைப்பின் பின் மரணம் வருவதன் காரணங்கள்**

உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் இரத்தத்தை செலுத்து வதுதான் இருதயத்தின் வேலை. இந்த வேலையில் 3 இரத்தக் குழாய்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த இரத்தக் குழாய்களில் கொழுப்புகள் படிந்து கட்டி ஏற்பட்டால் அந்தக் குழாயின் இரத்த ஓட்டம் தடைப்படும். இதனால் இதயத்தின் ஒரு புறத்திலுள்ள தசைகளுக்கு இரத்தம் செல்வது தடுக்கப்பட்டு அவை செயலிழந்து விடும். இதுவே மரணத்திற்கு அடிப்படையான காரணமாகும்.

மாரடைப்பு வருவதை முன்கூட்டியே உணரமுடியாதா?

இரத்தக் குழாயின் பாதி அளவிற்கு அடைப்பு ஏற்படும்போதே சிறிது தூரம் நடந்தாலே நடு நெஞ்சுப் பகுதியில் வலி ஏற்படும். இதுதான் மாரடைப்பின் ஆரம்ப அறிகுறி. இதனை உணர்ந்து சிகிச்சை எடுக்க வேண்டும்.

சிகிச்சை முறைகள்

1. முதலில் இருதய நோய்க்கான தகுந்த வைத்தியரை அணுகி ஆலோசனை பெற வேண்டும்.
2. உடல் எடையை கட்டுப்பாட்டுக்குள் வைப்பதுடன் மலச்சிக்கல் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
3. மாமிச உணவுகளை முடிந்தவரை தவிர்த்து பச்சைக் காய்கறிகளை உட்கொள்ள வேண்டும்.
4. இரத்த அழுத்தத்தைக் கட்டுபாட்டுக்குள் வைத்துக் கொண்டு மன இறுக்கத்தை (Stress) இல்லாமல் செய்ய வேண்டும்.

இருதய ஆசனமும் நாடிசுத்தியும்

யோகாசனத்தில் இருதய ஆசனம் ஒன்று உள்ளது. இதனை ஒரு யோகா பயிற்சியாளரிடம் கேட்டுத் தெரிந்து தினமும் செய்வதுடன் நாடிசுத்தி என்னும் மூச்சுப் பயிற்சியையும் கூடவே பழகி வந்தால் எந்தவிதமான இதய நோய்களுமின்றி இனிதே மரண பயமின்றி வாழலாம்.



ஆரோக்கிய வாழ்வு
N. [illegible]
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# வங்கியோடு...

• இருவரின் கையொப்பத்தினையும் காசோலைக்கு பின்பக்கம் எடுத்திருக்க வேண்டும் (Endorsement). இது வங்கியின் தவறு என்பது நிரூபிக்கப்பட அதில் அந்தத் தம்பதிகளில் ஒருவருக்குரிய அரைவாசித் தொகையினை ($60,000) வங்கியே பொறுப்பு எடுத்து வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

**"கடன் பிணையில் சிக்குண்ட வயது முதிர்ந்த மூதாட்டி"**

இது பல வருடங்களுக்க முன்பு நடந்த ஒரு சம்பவம். 80 வயது மூதாட்டி ஒருவர் தனது குடியிருப்பு மனையினை தனது மருமகளுக்கு $100,000 க்கு விற்பனை செய்துவிட்டு, அதே வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார். வீட்டினை வாங்கிய மருமகளுக்கு $95,000 டொலர் வங்கி மோட்கேஜ் கடனுக்கு கூட்டான கையொப்பம் (Co-sign) வழங்கி அதற்கு உத்தரவாதமும் (Guarantor) வழங்கியிருந்தார். அவர் அந்த நேரம் ஓய்வூதியம் பெறுபவராக இருந்த போதிலும் அவரின் உத்தரவாதத்தினை வங்கியும் ஏற்றுக் கொண்டிருந்தது.

சிறிது நாட்களின் பின்பு மருமகள் வீட்டிலிருந்து அவர் இடம் பெயர்ந்து அரச புகலிட மனையில் வாழ வேண்டிய நிலைமை உருவாகிவிட்டது. வயது போன மூதாட்டியின் நிதியியல் தொடர்பான அதிகாரங்களை அவரது மகன் பொறுப்பு எடுத்தபோது அப்பாவித்தனமாக மருமகளோடு மோட்கேஜ் கடன்களிலும் சிக்கியிருந்தது தெரியவந்தது. வங்கியோடு தொடர்பு கொண்டு மோட்கேஜ் கடன்களுக்கு பிணை நின்ற பொறுப்பிலிருந்து அவரை விடுதலையாக்கி விடுங்கள் என கோரியபோது அதற்கு வங்கி மறுத்து விட்டது.

இறுதியில் இந்தப் பிரச்சினை நியாயமன்றத்திற்கு மனுசெய்யப்பட்டு விசாரணைக்கு வந்தது. இவரது வயது முதிர்ந்த நிலைமை, செயல்பட முடியாத தள்ளாட்டம், பிணைக்கு நிற்கும் கடன்கள் தொடர்பான அறிவு குன்றிய நிலை என்ற பல காரணங்களை அடிப்படையாக வைத்து மனிதாபிமான ரீதியில் அந்தப் பிணைக்கு நின்ற பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறு நியாயமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# எண்பதுகளில் யாழ்நகரில் அன்னையர் முன்னணி

எண்பதுகளில் யாழ்நகர் போர்ச்சூழலில் அகப்பட்டு அங்கு நாம் திண்டாடிக் கொண்டிருந்த காலம். ஆஜானபாகுவான இந்திய IPKF அமைதிப்டை இராணுவத்தினர், பெரிய லொறிகளில் யாழ்நகர் நுழைவாயிலாகிய அரியாலைக்குள் வந்த போது, இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் சமாதானம் அமைந்துவிடும் என நம்பினோம். ஆனால் நடந்ததோ வேறு. நண்பர்கள் என நம்பிய இந்திய இராணுவம் விரோதிகளாக மாறியது. சரமாரியாகச் சுட்டுக்கொண்டு இந்திய இராணுவம் முன்னேறி எம்மை சுற்றி வளைத்தபோது, பயத்தினால் உறைந்த நாம், கட்டில்களுக்கு அடியில் பதுங்கியிருந்தோம். அடுத்த நாள் காலை, இராணுவ ஒலிபெருக்கி கட்டளையின்படி, 10,000 அரியாலை மக்கள் கனகரத்தினம் மகாவித்தியாலயம் (Stanley College) இற்குள் சென்று அகதிகளாக ஒரு கிழமை தங்கினோம். அயலில் இருந்த தம் வீடுகளுக்குச் சென்ற பெண்கள் சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதையெல்லாம் நான் விபரமாக 'Peace With Justice' எனும் நூலில் எழுதியிருக்கிறேன்.

இலங்கை அரச அராஜகங்களை எதிர்ப்பதற்காக பெண்கள் சிலர் கிளர்ந்தெழுந்து 1985இல் யாழ். அன்னையர் முன்னணியை உருவாக்கினோம். யாழ்நகர் தலைவி தேம்பா குணநாயகம், காரியதரிசி நீனி யோகநாதன், வைத்திய கலாநிதி திருமதி கணேசமூர்த்தி, வைத்திய கலாநிதி திருமதி தெய்வேந்திரம், கணேஷ் பாலசிங்கம், சாந்தி சிவப்பிரகாசம், இந்திராணி முத்துலிங்கம், சுண்டிக்குளி தலைவி லலிதா புருடி ஆகிய நான் இன்னும் பலரும் ஒருங்கிணைந்து மிகவும் தீவிரமாகச் செயல்பட்டோம். மாட்டுச் சாணத்தின் உதவியுடன் Bio gas ஐ உற்பத்தி செய்து சமையலுக்கு வேண்டிய எரிவாயுவை கணவனை இழந்த பெண்களுக்கு வழங்கினோம். காளான் உற்பத்தி செய்ய ஆர்வமாயிருந்த நான் காளான் விதைகளை கொழும்பிலிருந்து வாங்கி வந்தேன். அப்போது கொழும்பில் மினிபஸ் விபத்தில் அகப்பட்டு தெய்வாதீனமாக உயிர் பிழைத்தேன். வீட்டில் காளான் வளர்த்தேன். ஆனால் அதை விரிவாகச் செய்து பெருக்க என்னால் முடியவில்லை.

எமது பெண்கள் ஆக்ரோஷ கோஷங்களுடன் நடைபவனி, கொளுத்தும் வெயிலில் யாழ். கச்சேரிக்கு முன்பு குடைகளின் கீழ் கவன ஈர்ப்பு சத்தியாக்கிரகம் செய்தனர். ஒரு நாள் எம்மில் சிலர் கச்சேரிக்குள் நுழைந்து, G.A, A.G.A போன்ற உயர் அதிகாரிகள் முன் உட்கார்ந்து அவர்கள் வேலை பார்ப்பதைத் தடுத்து நிறுத்தவும் செய்தோம். Peace With Justice எனும் நூலில் இது விபரிக்கப்பட்டுள்ளது.

IPKF உயர் அதிகாரி Rakesh Dube, தனது Stanley (Stanley College) இராணும் முகாமிலிருந்து வெளியேறி எனது வீட்டைத் தாண்டியே புருடி ஒழுங்கை வழியாக கண்டி வீதிக்குச் செல்லும் போது எங்களை சிநேகிதம் பிடித்து எம் வீட்டிற்கு வர ஆரம்பித்தார். என் கணவரை Pa என்றும் என்னை Ma என்றும் அழைத்து, 'இன்று அன்னையர் முன்னணி என்ன செய்யப் போகிறீர்கள்' எனக் கேட்பார். 'நான் பத்திரிகை களைப் பாருங்கள்' என்று பதிலளிப்பேன். நான் விபரமா கக்கூறி அவர் கைது செய்து வைத்திருந்த சில வாலிபர்களை விடுவிக்கச் செய்தேன். அவருடன் சிநேகமாயிருந்த இன்னொரு இளம்பெண் இளைஞர்களால் சுட்டுக் கொல்லப்பட்டாள். அதற்குப் பின் எனது வேண்டுகோளுக் கு இணங்க அவர் எம் வீட்டிற்கு வருவதை நிறுத்தினார்.

அன்னையர் முன்னணி, கொழும்பு Friend in Need Society சங்கத்தின் உதவியுடன் கண்ணி மிதிவெடியால் கால் இழந்தோர்க்கு ஒரு சங்கத்தை உருவாக்கி, அதிலிருந்து இருவரை இந்தியா ஜெய்ப்பூர் அனுப்பி செயற்கைக் கால் செய்யும் வழிமுறையை படிக்க வைத்தார்கள். சுண்டிக்குளி St. Johns கல்லூரிச் சந்தியில் பெரிய வீடொன்றிலிருந்த EPRLF முகாம் வெளியேறியதும் அவர்களின் தலைவரைப் போய் சந்தித்து, வீட்டுச் சாவியை வாங்கி வந்து அந்நிறுவனத்தை அங்கு நடத்தினோம். நான் முன்னின்று பால் காய்ச்சியது என் மனதில் இன்றும் பசுமையான ஞாபகம். கடந்த 25 ஆண்டுகளாக மிதிவெடி விபத்தில் கால் இழந்தோருக்கு இலவச செயற்கை கால்கள், கைகள் தொடர்ந்து வழங்கிவரும் அந்நிலையம் இப்போது Beacon of Hope எனும் புதிய பெயரில் வெற்றிகரமாகச் செயல்படுகிறது. இதன் வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் போது தொடர்ந்தும் அங்கு சேவை செய்யும் வைத்திய கலாநிதி கணேசமூர்த்தி, வைத்திய கலாநிதி தெய்வேந்திரம் தமது வாழ்த்துக்களையும் சேவைகளையும் சொல்லும் இறுவட்டு ஒன்று வெளியிடப் பட்டது. யாழ்நகர் செல்பவர்கள் கட்டாயம் அங்கு போகவேண்டும்.



1987இல் எனது கணவர் ராஜா புருடியுடன் நான் ஒருமுறை கொழும்பு சென்றிருந்த போது, ஞாயிறு பத்திரிகை ஒன்று பின்வருவதைப் பிரசுரித்திருந்தது. "யாழ்நகரிலிருந்து உதவி கோரி, இராணுவத்தினால் பாலியல் வல்லுறவுக்குட்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவியான ஒருவர் தான் தற்கொலை செய்ய முயன்றபோது அவரின் பெற்றோர் அதைத் தடுத்து நிறுத்தினர். அவர்கள் பின்னர் திருமணம் ஒன்றை ஒழுங்கு செய்து கல்யாணம் செய்யும்படி அவரை வற்புறுத்தினர். மனமுடைந்து போன அவர் இன்னொரு முறை தற் கொலை விளிம்பில் நிற்கிறார். அவருக்கு உதவுவீர்களா?" என்று இருந்தது. இதைப் பார்த்ததும் மிகவும் கவலை அடைந்த நான் அந்தப் பத்திரிகையுடன், கொழும்பு உளவளத்துணை நிலையத்துக்குச் (Sri Lanka Sumithrayo) சென்று, அதன் தலைவி ஆங்கிலேய பெண்மணி Joan Demel ஐச் சந்தித்து உதவி கோரினேன். அன்னையர் முன்னணியினர் யாழ். செயற்கைக்கால் நிறுவனத்தின் முதல் ஆண்டு விழாவை அடுத்தகிழமை நடத்துகிறோம். நீங்களும் யாழ்நகர் வந்து, எமக்கு அத்தியாவசியமான உளவளத் துணை நிலையம் ஒன்றை நிறுவ உதவுங்கள் என்று கோரினேன். அதற்கு அவர் "வயது போன நான் பஸ்ஸில் யாழ்நகர் வர முடியாது. ஆகாய விமானத்தில் என்றால் வருகிறேன்," என்றார். பிளேனில் அவரை அழைத்துச் செல்ல என்னிடம் வசதி இருக்கவில்லை. வேறு சிங்கள, முஸ்லீம் அதிகாரிகளுக்கு யாழ். வரப் பயம். ஒருவருக்குமே என்னுடன் வர விரும்பவில்லை. ஆகவே Joan ஆலோசனைப்படி லண்டன் Befrienders International, U.K விலாசத்திற்கு, யாழ்நகருக்கு உளவளத்துணை நிலையம் ஒன்றை அமைக்க உதவும்படி கோரி ஒரு கடிதம் எழுதினேன். உடனடியாக தடித்த கவரில் ஒரு பெரிய கடிதம் வந்தது. அதற்குள் உளவளத்துணை நிலையம் அமைக்கும் யாப்பு மற்றும் வழிமுறைகள் சகலதும் இருந்தன. அதை நான் அயல்வீட்டு நண்பர் Redcross President வைத்திய கலாநிதி தெய்வேந்திரத்திடம் கொடுத்தேன். யாழ்நகரில் உளவளத் துணை நிலையம் ஒன்றை உருவாக்க முயற்சித்துக் கொண்டிருந்த கரவையூர் செல்வம் எனும் அருட்தந்தை கலாநிதி F.M. செல்வரத்தினம், அருட்தந்தை டேமியன், மனோவைத்தியகலாநிதி தயா சோமசுந்தரம், வைத்தியர் நற்சினார்கினியர், வைத்தியர் கணேசமூர்த்தி போன்ற பலர் ஒன்றிணைந்து 'சாந்திகம்' எனும் மனோதத்துவ உளவளத்துணை நிலையத்தை ஸ்தாபித்தபோது, என்னையும் 12 ஸ்தாபர்கள் குழுவில் ஒருவராக இணைத்துக் கொண்டனர்.

அருட்தந்தை கலாநிதி செல்வரத்தினம், வைத்தியபீட மாணவர்கள், ஆசிரியர்கள், அருட்தந்தைகள், அருட்சகோதரிகளுடன், S.S.C. மட்டுமே படித்த என்னையும் சேர்த்து 21 நபர்களுக்கு உளவளத்துணை கற்பித்தனர். அவருடன் அருட்தந்தை டேமியன், மனோவைத்தியர் தயா சோம சுந்தரம், Anna Doney எமக்குத் யாழ். தொடர்பகத்தில் தீவிர பயிற்சியளித்தனர். அப்போது வைத்திய மாணவனாயிருந்த வைத்தியகலாநிதி லம்போதரனும், அவரது பாரியார் வைத்தியர் அருணாவும், அருட் சகோதரி Victorine James உம் எம்முடன் இந்த புதுமையான முறையான பேசுவதனால் குணமாகும் உளவளத் துணை பற்றிப் படித்தோம்.

யாழ்நகர் மக்கள் அன்று குண்டடி, ஷெல்லடியினாலும், மின்சாரத்தடை, எரி பொருள்தடை போன்ற 40 அத்தியாவசியத் தேவைகளின் தடையினாலும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர். பஸ், கார் ஒன்றுமே ஓடாத நிலையில் நான் வாடகை பைசிக்கிள் Bar ஒன்றில் ஏறியே தொடர்பகம் செல்வேன். வைத்திய கலாநிதி தயா சோமசுந்தரம், போதன வைத்தியசாலையில் எமக்கு ஒழுங்குசெய்த ஓர் அறையில் உளவளத்துணை செய்தோம். தற்கொலை முயற்சி செய்தோர், மனவிரக்தி அடைந்தோர்க்கு இவ் உளவளத்துளை உதவிதைப் பார்த்து மூக்கில் விரலை வைத்து வியந்தோம்.

தனது வெள்ளிவிழாவை சென்ற ஆண்டு கொண்டாடிய சாந்திகம் இப்போது கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்திருக்கிறது. யாழ்நகர் செல்பவர்கள் கட்டாயம் அங்கு போய் பாருங்கள். தளர்ந்த உடலுடன் நடப்பதற்குக் கூட கஷ்டப்படும் நான், இந்த 83 வருடங்கள் இறைவன் எனக்களித்த ஆசீர்வாதங்களுக்கு நன்றியுடன் இனி அமைதியாக இருப்போம் என நினைத்தேன். அருட்சகோதரி Victorine James இங்கு விடுமுறையில் வந்திருந்தார்.

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

YOGA - MEDITATION CLASSESS
ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்


மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்
GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது
தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033




# 'மின்வலையில் வந்தவை', *'Pearl Necklace'* நூல்களின் வெளியீட்டு விழா

திரு. சின்னையா சிவநேசன் அவர்கள் மின்வலையில் (Web Site) வாசித்து ரசித்த 'விளம்பரம்' இதழ்களில் பல மாதங்களாக வெளிவந்த சுக வாழ்விற்கான கட்டுரைகள் பல அடங்கிய "மின்வலையில் வந்தவை" என்ற பயனுள்ள கட்டுரை நூல், புலம் பெயர்ந்து பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வரும் எழுத்தாளர்களினால் தமிழில் எழுதப் பட்ட சிறுகதைகளின் ஆங்கில மொழி பெயர்ப்பு நூலான "Pearl Necklace" ஆகியவற்றின் வெளியீட்டு விழா கடந்த 21ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 'ஸ்காபுறோ சிவிக் சென்ரர்' மண்டபத்தில் நடைபெற்றது. இவர் ஓய்வு பெற்ற கல்வித் திணைக்கள அதிகாரியும், கல்லூரி அதிபரும், ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் எழுதவல்ல ஆற்றல் மிகு எழுத்தாளருமாவர். கனடா



தமிழ் எழுத்தா ளர் இணையமும், Monsoon Journal பத்திரிகை வெளியீட்டாளரும் இணைந்து இவ்விழாவினை நடத்தினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய கலாநிதி பாலசுந்தரம் உரையாற்றிய போது "எழுத்தாளர் இணையத்தின் புதிய தலை- வராகத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் நான் கலந்து கொள்ளும் முதலாவது நிகழ்ச்சி இது என்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். எழுத்தாளர் இணையத்து டன் Monsoon Journal பத்திரிகை வெளி யீட்டாளரும் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்துவது பெருமைக்கு உரியதாகும். Monsoon Journal எமது கலை, கலாச்சாரங்கள், இலங்கையில் நடைபெற்ற இன்னல்கள் போன்ற விடயங்கள் பற்றி ஆங்கிலத்தில் எழுதி வருவது இங்குள்ள நமது இளம் சந்ததியினர் அவற்றை வாசித்து அறிந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தி வருகின்றது" என்றார்.

கவிஞர் கந்தவனம் அவர்கள் நூல்களுக் கான விமர்சனஉரையாற்றிய போது

தொடர்ச்சி 39ஆம் பக்கம்




IP GOLD HOUSE
22K Gold Jewellery - Antique & Stone Jewellery
Wedding Season Sale
REPAIR FREE
உங்களது பழைய நகைகளை எங்களிடம் கொடுத்து மிகவும் சிறந்த விலையில் புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
IP
BRING YOUR OLD JEWELLERY AND GET NEW JEWELLERY FOR BEST PRICE
STONE JEWELLERY $ 48.00 PER GRAM.
NEW COLLECTION OF WEDDING JEWELLERY.
40 New Delhi DR. Unit 56, Markham, ON. L3S 0B5
905-554-5890

CANADIAN TAMILS' CHAMBER OF COMMERCE
25
CTCC
1991 - 2016

கனேடிய வர்த்தகத் துறையில்

# 25 ஆண்டுகால சாதனை

படைத்தவர்களில் சிகரம் தொட்ட ஒருவருக்கு மகுடம் சூட்டி கௌரவிக்கக் காத்திருக்கிறது.

# கனேடிய தமிழர் வர்த்தக சம்மேளனம்

ஆம் ! September 09 ஆம் 10 ஆம் திகதிகளில்
CTCC யின் வெள்ளிவிழா நிகழ்விலே
"Hall of Fame" விருதினை பெறுபவர்
நீங்களாகவும் இருக்கலாம்...

விண்ணப்பங்களுக்கு WWW.CTCC.CA

GOLD SPONSOR Lebara
GOLD SPONSOR NAVA LAW Professional Corporation www.nava.law
GOLD SPONSOR Kanish&Partners LLP
GOLD SPONSOR RBC Royal Bank
GOLD SPONSOR Scotiabank

விபரங்களுக்கு அழையுங்கள்
Roshan Thavaratnam (நிகழ்ச்சி இயக்குனர்)
416-561-5733




# மகாஜனன் விருது விழா

மகாஜனன் விருது விழா - 2016 தமிழ் கலை அரங்கத்தில் 2016 மே 28இல் நடைபெற்றது. வழமையாக மகாஜனா கல்லூரி பழையமாணவர் சங்கம் நடத்தும் விழாக்கள் போல் இவ்விழாவும் விளம்பரப்படுத்தியது போல் சரியாக மாலை 5:01 மணிக்கு பழையமாணவர் சங்க உபதலைவர் சி. ஸ்கந்தராஜாவின் உரையுடன் ஆரம்பமானது.

இவ்விழாவிற்கு பிரதமவிருந்தினராக மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவரான வைத்தியகலாநிதி சித்தகன் நந்தீஸ்வரரும் அவரின் பாரியாரான லதா சித்தகனும் வந்திருந்தனர். சிறப்பு விருந்தினராக மகாஜனன் பரீட்சைக்குழு உறுப்பினரான கோ. கலாஈஸ்வரனும் அவரின் பாரியாரான இரஞ்சினி கலாஈஸ்வரனும் வந்திருந்தனர். இவ்விழாவிற்கு பிரதான அனுசரணையாளர்களாக வைத்தியகலாநிதி சொ. செந்தில் மோகனும் அவரின் பாரியாரான வைத்தியகலாநிதி சுபாதினி செந்தில்மோகனும் இருந்தார்கள்.



மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தலைவர் சிவகௌரிபாலன் அவரின் பாரியார் தேவரஞ்சினி கௌரிபாலன் ஆகியோருடன் பிரதம விருந்தினர், சிறப்பு விருந்தினர், இவ்விழாவின் பிரதான அனுசரணையாளர் மற்றும் பழைய மாணவர் சங்க காப்பாளர் வே. நந்தீஸ்வரரும் அவரின் பாரியார் ஜெகரட்சனி நந்தீஸ்வரரும் மங்கல விளக்கேற்றல் உடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. இவ்விழாவிற்கு நிகழ்ச்சித் தொகுப்பாளர்களாக பொ. நமுனகுலனும் சறிக்கா சசிதரனும் இருந்தார்கள். கனேடிய தேசியகீதம், கல்லூரிக்கீதம் மற்றும் மறைந்தவர்களுக்கான மௌன அஞ்சலியை தொடர்ந்து பழையமாணவர் சங்க உபசெயலாளர் கி. பாலஸ்கந்தனின் வரவேற்புரை நடைபெற்றது.

இவற்றைத் தொடர்ந்து முதலாவது நிகழ்வாக இசைக்கலாமணி ஸ்ரீமதி தனபாலினி பரந்தாமன் மற்றும் ஸ்ரீமதி விஜயலட்சுமி சிவசோதிலிங்கம் அவர்களின் நெறியாள்கையில் அவர்களின் மாணவர்களின் வயலின், வீணையுடன் கூடிய இன்னிசை வாத்திய விருந்து நடைபெற்றது. மகாஜனக்கல்லூரி பழையமாணவர் சங்கம் 2016 மார்ச் 6இல் நடத்திய கணித, பொது அறிவுப்போட்டிகளில் கனடா முழுவதிலும் முதல் மூன்று இடத்தைப் பெற்றவர்களுக்கு பதக்கம் வழங்கி சான்றிதழ்கள் கொடுக்கும் நிகழ்வுகள் நான்கு தொகுதிகளாக கலை நிகழ்வுகளுக்கு இடையிடையே நடைபெற்றன. இவை முதலில் தரம் 1 இல் இருந்து 3வரை வெற்றிபெற்றவர்களுக்கும் பின்னர் தரம் 4 இல் இருந்து 6வரை வெற்றி பெற்றவர்களுக்கும் அதை தொடர்ந்து தரம் 7 மற்றும் 8 இல் வெற்றி பெற்றவர்களுக்கும் இறுதியாக தரம் 9,10,11 & 12 இல் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் நடைபெற்றன. விழாவின் இறுதியில் இவர்களுக்கு பணப் பரிசும் வழங்கப்பட்டன.

கணித, பொது அறிவுப்போட்டிகள் இரண்டிலும் பங்குபற்றி இரண்டிலுமே முதலாம்

**தொடர்ச்சி 32ஆம் பக்கம்**






# அறிவுக்கு விருந்து



மண்ணை மிதித்து நடப்பது தவறு இல்லை
அதை மதியாது நடந்தால் மதிப்பில்லை

பெண்ணை அடக்கி ஆழ்வது முறையில்லை
அவளை அணைத்து வாழ்தல் குறைவில்லை

மனிதனை மலிவாக நினைப்பது மதிப்பில்லை
அவரை மதித்து நடந்தால் பகை இல்லை

பசி இல்லாத போது நீ ருசிதனை பார்க்கின்றாய்
பசி வருத்தும் போது நீ பத்தும் மறக்கின்றாய்

ஊருக்காக மேடை ஏறி உபதேசம் செய்கின்றாய்
அதை வீட்டில் மனைவி மேற்கொண்டால் அது உனக்கு
இல்லை ஊருக்கடி என்கின்றாய்

காட்டில் ஓடும் ஆற்று நீரில் கழிவு நீரும்
கலந்திருக்கும் என்பது அறிவாய்


தாகம் தீர ஆற்று நீரை அள்ளிப் பருகும் போது
அதன் தூய்மையை நீயும் நினைப்பாயா

ஆறு கடக்கும் போது அண்ணன் தம்பி போல்
ஆறு கடந்த பின்னே அன்னியன் போலாகலாமா

கற்றவர்களது கருத்துக்களுக்கு மதிப்பு கொடு
மற்றவர்களது கருத்துக்களை மதித்து மற

வெண்ணைக்குள்ளே நெய் போலும்
விறகுக்குள்ளே தீயைப் போலும்

எள்ளுக்குள்ளே எண்ணை போலும்
எங்கும் நிறைந்திருப்பவன் இறைவன்



கவிநாதம் பரந்தாமன்

# எண்பதுகளில்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

எனக்கு திருமதி செல்வஜோதி ரவீந்திரன் பரிந்துரைத்ததனால் *Inspirational Mother 2016 Award* ஐ '*Mothers 2 Mothers*' எனக்கு அளித்ததை அவருக்கு கூறினேன். கௌரவிக்க ஒரு வாய்ப்பை ஏற்படுத்திய இறைவனுக்கு நன்றி. வன்னியில் வாழும் கணவனை இழந்த பெண்களுக்கும், ரொறொன்ரோவில் Autistic பிள்ளைகளின் அன்னையர்களுக்கு உதவ $51,000 சேர்த்த



47 வருடங்களாக தனது வாழ்வையே சேவையாக அர்ப்பணித்திருக்கும் 72 வயதான அருட்சகோதரி Victorine James இப்போ யாழ். நகர் தாதியர் கலாசாலை தலைவியாக தொண்டாற்றுகிறார். அவருடைய சேவையைப் பாராட்டி அவரையும் 07.05.2016 Mothers 2 Mothers fundraiser event இல் மேடையேற்றி இந்த விழா அமைப்பாளர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

லலிதாபுரூடி - ***905-270-1214, 416-907-6897***
***Email - lalith.brodie7hotmial.com***

# வாழ்க்கைப் பயணங்கள் - 18

அன்று சனிக்கிழமை காலை, கொழும்பில் நடாவும், ராணியும் வெள்ளவத்தையில் அமைந்துள்ள சாயி நிலையத்தில் நடைபெறவுள்ள சர்வமதக் கருத்தரங்கு ஒன்றிற்குப் போவதற்காக வெளிக்கிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அமலாவின் தொலைபேசி வந்தது.

தொலைபேசியை எடுத்த நடா "அமலா சொல்லம்மா எப்படி சுகமாய் இருக்கிறாயா?" என்றார். அமலாவும் "நான் சுகமாய் இருக்கிறேன் அப்பா. நீங்கள் எப்படி இருக்கிறீங்கள். அம்மா எப்படி" என்று கேட்டாள்.

அமலா தொடர்ந்து "நீங்கள் ஒரு இடமும் இன்று போகவில்லையா?" என்று கேட்டாள்.

3)The minimal distance between the line and the curve occurs when the tangent to the curve and the line y= 2x-1 are pallel,or when f′x=2 Therefore$4x^3+6x+2=2$ $2x^3+3x=0, x(2x^2+3)=0$ Since $x \in R, x = 0, 2x^2+3=0$ produces imaginary roots , the required point is (0 ,0) since f′(0)=0. Which will produce a minimal distance of$\frac{1}{\sqrt{5}}$ using the distance formula

Tutorial323(questions)

1)Prove that $x^4+4y^4+1 \geq 4xy$ x and y are real numbers+

2)The triangle PQR has vertices P(3,4) ,Q(3,1) .and R(8 ,1 ), find the eqation of the bisector of angle PQR? (FOR GR 12)

3)Three vectors $\bar{x}+\bar{y}+\bar{z}=\bar{0}$ Calculate the value of $\bar{x}.\bar{y}.+\bar{y}.\bar{z}+\bar{z}.\bar{x}$ if $|\bar{x}|=2$ ,$|\bar{y}|=3$ and $|\bar{z}|=4$ (gr12)

4)In a gambling game a player tosses a coin until a head is uppermost.He then receives $2n, n is the number of tosses, what is the prob. that the player receives $8 in one play ?

BY. MR Sf.Xavier(Teacher)
Tel6473409490/4167322228

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

வெளிச்சத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வருகையில் வேறுபல விடயங்களும் வெளிச்சத்துக்கு வருவதைப் பார்த்தீர்கள் அல்லவா. அவைபற்றியும் ஆங்காங்கே அறிந்து கொண்டே செல்வோம். ஏனெனில் இது யாவருக்குமான அறிவியற் பகுதி அல்லவா. சென்ற தடவையில் தோமஸ் யங் என்ற மருத்துவரின் இயற்பியலுக்கான மிகப் பெரிய பங்களிப்பினைப் பற்றித் தெரிந்து கொண்டோம் இயற்பியலில் அரிய மாற்றங்களைச் செய்தவர்கள் மருத்துவர்களாக இருக்கின்றார்கள். விஞ்ஞான முறையினை உலகிற்குப் புகுத்திய கலிலியோ கலிலியும் மருத்துவ மாணவர்தான். பல்கலைக்கழகத்தில் மருத்துவத் துறையின் இரண்டாம் ஆண்டில் படித்துக் கொண்டிருக்கையில் தற்செயல் விபத்துப் போலத்தான் கலிலியோ கலிலி இயற்பியலுள் வந்து சேர்ந்தார். ஆச்சரியமான அந்த அறிவியல் விபத்தினைப் பாருங்கள்.

கணிதத்துறையில் கல்வி கற்றுக் கொண்டிருந்த தனது நண்பரைச் சந்திப்பதற்குச் சென்ற கலிலியோ, அன்று நடந்த கணிதப் பாடத்தை அவதானித்தார். கணிதப் பாடத்தின் அழகில் மயங்கிய கலிலியோ தனது கல்வித்துறையினை மாற்றித் தரும் படி, பல்கலைக்கழகத்தினரைக் கேட்டார். அவர்கள் மறுத்து விட்டார்கள். விளைவாக, தன்னியல்பிலேயே கணிதத்தினையும், அதன் பெரும் பிரயோகப் பகுதியான இயற்பியலையும் கற்கத் தொடங்கினார். பயனும் கிடைத்தது, பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டம் ஏதும் பெறாமல் வெறும் கையுடன் வெளியேறினார்.

சோக்கிரடிசின் ஏன்? எதற்கு? எப்படி? என்ற தத்துவக் கேள்விகளை அரிஸ்ரோற்றலின் இயற்கையின் நடத்தைகளுக்கான தத்துவ விளக்கங்களைக் கேட்டு, அவற்றை ஆராய்ந்தவர் கலிலியோ. அருமையான பல எளிய பரிசோதனைகளை உலகினருக்கு அறிமுகப்படுத்தியவர். நியூட்டனுக்கு அடி எடுத்துக் கொடுத்தவரும் இவர்தான். கலிலியோ, தோமஸ் யங் போன்ற வைத்தியர்கள் இயற்பியற் பக்கமாகத் தமது பார்வையைத் திருப்பியிராதிருந்தால் உலகம் விஞ்ஞானப் பகுதியில் இன்னமும் பின் தங்கியே இருந்திருக்குமோ?.

சரி, இனி வெளிச்சத்திடம் வருவோம். யங்கின் இருதுளைப் பரிசோதனையின் முடிவு கனகச்சிதம்தான். ஆனால் நியூட்டனின் ஒளித்துகள் கருதுகோளும் சில இயல்புகளைத் தெளிவாகக் காட்டியிருந்ததே. அப்படியாயின் அவற்றிக்கான தெளிவுகள் என்ன? யங்கின் சோதனை முடிவுகள் அதனைத் தீர்த்து வைக்கவில்லை. ஆனாலும் அறிவியல் உலகம் யங்கின் பரிசோதனை முடிவின் பின்னராக, ஒளி அலைவடிவினது என்று முழுதாக ஏற்றுக் கொண்டது. யங்கின் ஆச்சரியமான முடிவில் அறிவியல் உலகமே திளைந்திருந்ததினால் ஒளியின் இம்மிக் கொள்கை அடிபட்டுப் போயிற்று என்றேதான் கூற வேண்டும். அது மாத்திரமல்லாது, 'பனையாலை விழுந்தவனை மாடேறி உழக்கியது' போன்று ஒளியின் துகள் கொள்கைக்கு யங்கின் பரிசோதனை முடிவுகள் வந்த சில காலத்தின் பின்னராக இன்னொரு இடியும் வந்தது. அந்த வில்லங்கத்தினைக் கொண்டு வந்தவர் மாக்ஸ்வெல் என்கிற அருமையான விஞ்ஞானி.

மாக்ஸ்வெல் நல்ல கணித நிபுணர். அத்துடன் நல்ல கவிஞனும் கூட. கற்பனை வளமும் அழகியல் உணர்வும் மிக்க மாக்ஸ்வெலினால் சிக்கல்களின் உள்ளே உள்ள பின்னல்களை இலகுவாகக் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. அவரது கணித மூளையோ அப்பின்னல்களை சாதுர்யமாய் அவிழ்த்துவிட, தீர்வுகள் வெளியாகின. மேலும் தான் காணுகின்ற, அறிகின்ற அறிவியல் விடயங்களை கவிதைகளாக வெளியிடுவார். அக்கவிதைகள் இலகுவில் மற்றவர்களிடம் சென்றுவிடும்.


இவ்விடத்தில் ஓரிடைச் செருகல். எனது மனதில் அடிக்கடி எழுகிற ஒரு விடயம். உங்களுடன் பகிர்ந்து கொள்ளவிழைகிறேன். மாக்ஸ்வெல் போன்றவர்களின் கவிதை உத்தியை நம்மவர்கள் பாவிப்பதில்லை என்றே கூறவேண்டும். கவிதை என்கிற கூரான ஊடகத்தை தமிழில் அறிவியல் உலகம் ஏனோ அதிகம் பாவிப்பதில்லை என்பது உண்மையிலேயே மனவருத்தத்திற்கு உரியதுதான். தமது மூளையின் வலுவினைச் சரியாகத் தெரியாத எங்கள் கவிஞர்களில் பலர் "விஞ்ஞானமா? நான் அதைப் படிக்கவில்லை, எனக்கது தெரியாதே" எனக் கூறிக் கொண்டு அறிவியற் பக்கம் திரும்பியே பார்ப்பதில்லை. மேலை நாட்டவர்களின் அறிவியல் வளர்ச்சிக்கு கவிதைகளின் ஊடாக, கவிஞர்களும் பெரும் பங்களிப்பினைச் செய்துள்ளார்கள். பல விஞ்ஞானிகள் இயற்கையை இரசித்துப் பல கவிதைகள் எழுதிய கவிஞர்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

நம்மவர்கள் துப்பரவாகவே கவிதைகளில் அறிவியலைத் தவிர்த்துவிட்டார்கள் என்று கூறவில்லை. அவர்களின் பங்களிப்புகள் போதாது என்கிறேன். மேலும் அறிவியற் கவிதைகள் கூட, அழகியற் தன்மையில் தான் பார்க்கப்படுகிறது என்றும் கருத இடமுண்டு. பெருஞ்சித்திரனாரின் 'உலகியல் நூறு' என்கிற மரபுக் கவிதை நூலில் (அத்தனையும் வெண்பாக்கள்) அழகான அறிவியற் கவிதைகள் உண்டு. பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு' என்ற கவிதைத் தொகுப்பில் பல கவிதைகளை அறிவியற் பார்வையிலேயே என்னால் பார்க்க முடிகிறது. எடுத்துக்காட்டாக, அக்கவிதைத் தொகுப்பில் உள்ள 'வானவில்' என்ற கவிதையில் வெள்ளொளியின் நிறப்பிரிக்கையை தெளிவாகக் கூறியிருக்கிறார். ஆனால், அதனை வாசிப்பவர்களின் சிந்தனையில் வெள்ளொளியும் நிறப்பிரிக்கையும் தென்படாது, இயற்கையின் அழகே தோன்றுவதாக கூறுவதைக் கேட்டிருக்கிறேன். கவிநாயகர் கந்தவனத்தின் சூழல் மாசடைதல் பற்றிய கவிதைகளில் அறிவியற் தெறிப்புகள் தெளிவாக உள்ளன. சில திரைப்படப் பாடல்களிலும் அறிவியற் கருத்துக்கள் பட்டும் படாமலும் வருவதைக் காணலாம். புதுக்கவிதைகள் கூட சில அறிவியல் விடயங்களைச் சிந்தியுள்ளன. குறிப்பாக 'பிரமிளி'ன் கவிதைகளைக் காட்டலாம். ஆனாலும் இவை போதுமா? எவ்வளவுக்கு அறிவியற் தாக்கத்தை அவை ஏற்படுத்தியுள்ளன? என்பவை கேள்விக்குரிய விடயம்தான். சரி, அவற்றை விடுத்து நாங்கள் வெளிச்சத்துள் வருவோம்.

மாக்ஸ்வெல் பற்றிக் கூறுவதெனில் மைக்கல் பரடேயை கூறாது கூறமுடியாது. ஒரு ஆய்வாளன் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு சரியான எடுத்துக்காட்டாகப் பரடேயைத்தான் கூறுவார்கள். இந்நாட்களின் ஆய்வாளர்கள் மூக்கின் மேல் விரலை வைத்து ஆச்சரியப்படும் பரடே (அதிகம்) படிக்காத மாமேதை. அச்சுக் கூடம் ஒன்றில் வேலை பார்த்த சிறுவனாக இருந்த பரடே, அச்சுக் கூடத்திற்கு வரும் விஞ்ஞானக் கட்டுரைகளை வாசித்து விஞ்ஞான அறிவினைப் பெற்றுப் பின்னர் பெரும் விஞ்ஞானியாகத் திகழ்ந்தவர். தளராத ஆய்வுகளின் பின்னர், காந்தப் புலம், மின்புலம் என்பவற்றினை இனம் கண்டுகொண்ட பரடே அதனை அறிவியல் உலகிற்குத் தெரியப்படுத்தினார்.

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புலம் என்கிற கருத்துத்தான் அயன்ஸ்ரைனையும் பிந்நாளில் கவர்ந்தது. மர்மமான காந்தவிசை, மின்விசை என்பவற்றிக்குக் காரணமாக அமைவது அவற்றின் புலங்களே என்று பரடே காட்டியது, இயல்பிலேயே சிந்தனை வலுக் கூடியவராக இருந்த அயன்ஸ்ரைனுக்கு இன்னொரு மர்மமான விசையான ஈர்ப்புவிசைக்கும் இந்தப் புலம் என்ற காரணியே காரணமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உதித்திருக்க வேண்டும். அந்த ஈர்ப்புப் புலம் என்ற கருவே அயன்ஸ்ரைன் கண்ட ஈர்ப்பிற்கான விளக்கத்தினைக் கொடுத்திருக்க வேண்டும் என்பவர்கள் உள்ளார்கள். ஈர்ப்புப் பற்றிய அலசலையும் பின்னராகப் பார்க்கப் போகின்றோம். பரடேயின் ஆய்வுகளின் முடிவுகளின் அழகினை கவித்துவ உணர்வுடைய விஞ்ஞானி மாக்ஸ்வெல் நன்கு விளங்கிக் கொண்டார். பரடேயின் புலக் கொள்கைகளிற் சொக்கிப்போன மாக்ஸ்வெல், தனது இயல்பின்படியே, அவற்றினை கணிதச் சமன்பாட்டில் கொண்டுவர முயன்று வெற்றியும் கண்டார். அச்சமன்பாடுகளின் தீர்வுகள், இயற்பியல் உலகினையே உலுக்கிப் போடும்படியான முடிவுகளைக் காட்டின. அத்தீர்வுகளினால் வெளிச்சம் பற்றிய பல இரகசியங்கள் மளமளவென வெளிச்சத்திற்கு வந்தன. அவற்றை அடுத்த தடவையில் பார்ப்போம்.



- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



# EDUCATION

## Review Questions16-11

### ADVANCED FUNCTIONS 12

Prove, $\frac{2\tan x}{1+\tan^2 x} = \sin 2x$

### CHEMISTRY 12

(i) The $K_{sp}$ of AgCl is $1.0 \times 10^{-10}$, and the Ksp of AgI is $8.3 \times 10^{-17}$. A solution is 0.100 M in $F^-$ and $Cl^-$. What is the concentration of iodide ions when AgCl just starts to precipitate?

(ii) $X + 2Y \rightarrow P + Q$

the rate of reaction = k [X][Y], Write two possible mechanisms that is consistent with the stochiometry of the overall reaction and with the rate law.

(iii) (a) Calculate the $K_b$ value $N_3^-$ at 25 °C


($pK_a$=4.72 at 25°C for $HN_3$)

(b) Write equation for the hydrolysis of $N_3^-$

(c) What is the pH of a 0.2 mol/L solution of sodium azide, $NaN_3$, at 25°C?

(iv) How many moles of NaOH must be added to 0.50 L of 0.18 mol/L $HC_3H_5O_3$(aq) to obtain a solution with pH=4.8? Assume the temperature is 25°C. (For $HC_3H_5O_3$, $pK_a$=3.86 at 25°C).

(v) How many stereoisomers are possible for the following structure.



### PHYSICS 11

(i) Explain why the output of an AC generator is stepped up when in transmitting electric power across long distances.

(ii) A high-resistance voltmeter connected across the battery reads 12 V when the switch is open. When the switch is closed the voltmeter reads 10.8 V. Suggest why this might be.

### PHYSICS 12

A bullet mass 0.010 kg is fired with a velocity of 330m/s into a pendulum bob of mass 0.990 kg, initially at rest. How high does the bob swing above its initial position?

### DATA MANAGEMENT –

A five member team is randomly chosen from four Gr 10 students, six Gr 11 students and 10 Gr. 12 students. What is the probability that the team has two Gr. 10 and three Gr 12 students

## Answer Key : 16-10

### PHYSICS 12

100km/h — 60km/h — 0 km/h

$\omega_1$ rad/s — $\omega_2$ — $\omega_3 = 0$

radius r = 0.6m

$$\omega_1 = \frac{v}{r} = \frac{100 \times \frac{1000}{3600} m/s}{0.6\ m}$$

$$\omega_2 = \frac{v}{r} = \frac{60 \times \frac{1000}{3600} m/s}{0.6\ m}$$

Angular displacement, $\theta = 72 \times 2\pi$ rad.

$\omega^2_{(2)} = \omega^2_{(1)} + 2\alpha\theta$

$\alpha$ = angular acceleration,

$27.8^2 = 46.3^2 + 2\alpha\ 72 \times 2\pi$

$\alpha = -1.52$ rad/s$^2$

$\omega_{(3)} = \omega_{(2)} + \alpha \Delta t$

$\Delta t = 18$ s ( 2 sgd)

### ADV. FUNCTIONS 12

$g(x)$ is horizontally stretched by a factor of 8

Answer key
16-11 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# ‘விடியலைத் தேடி’ ஊடாக, செங்கை ஆழியானை நினைவுகூர்தல்

‘போரில் நீ வென்றால், அதை நீ விபரிக்க வேண்டியதில்லை. தோற்றால், அதை விபரிக்க நீ அங்கிருக்கக்கூடாது!’ இரண்டாம் உலகப் போருக்குத் தீ மூட்டியவரும், ஜேர்மன் சர்வாதிகாரியுமான அடொல்.்.ப் ஹிற்லர்தான் இதைச் சொன்னவர். ‘2009 மே 18இல் முடிவுக்கு வந்த தமிழீழப் போரில் விடுதலைப் புலிகள் எப்படித் தோற்றுப் போயினர்?’ என்ற வினாவுக்கு விடையளிக்கக் கூடாது என்பதற்காகவே அவ்வமைப்பின் மூலவர்கள் பலரும் உயிரிழந்தார்களோ என இக்கூற்று எண்ணத் தூண்டுகின்றதல்லவா? இதேவேளை, விடுதலைப் புலிகளின் தோல்வி குறித்து, போரியல் வல்லுனர்களும், அரசியல் ஆய்வாளர்களும் புதிய புதிய எடுகோள்களையும் அனுமானங்களையும் ஊகங்களையும் முன்வைப்பதில் ஆளுக்காள் இதுவரைக்கும் சளைக்கவுமில்லை. இன்னமும் களைக்கவுமில்லை. எது எவ்வாறாயினும், நந்திக்கடலில் நடந்து முடிந்த அவலத்தின் காரணங்களை ஒரு சாமானியனின் நோக்கில், நறுக்கென்று சொல்லிவிடும் சாமர்த்தியம், நான்கே நான்கெழுத்து வார்த்தை ஒன்றிடம் உண்டு. அதுதான் ‘துரோகம்!’

துரோகத்தின் ஒட்டுமொத்த விளைச்சலான முள்ளிவாய்க்காலில் முற்றுப்பெற்ற ஈழப் போரினால், ஈழத்தில் வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களுக்கு இன்னல்களைத் தவிர இலாபமேதும் கிட்டியதில்லை. ஆயினும் இப்போரின் மூலமாக ஒருசில நல்ல இலக்கியங்களாவது வந்து



கிடைத்திருக்கின்றனவே என எண்ணி ஓரளவு மனதைச் சமாதானப் படுத்திக்கொள்ள முடிகிறது. குறிப்பிட்ட காலம்வரை இருபக்கச் சமச்சீர்க் கொடுக்குப் பிடிகளுக்கிடையிலிருந்து இலக்கியம் படைக்கவேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஈழத்தமிழ்ப் படைப்பாளிகள் பலருக்கும் இருந்து வந்தது. ஒருபக்கக் கெடுபிடிகள் ஓய்ந்து தளர்ந்துள்ள போதிலும், மறுபக்க அச்சுறுத்தல்கள் முற்றாக மறைந்தமைக்கான அறிகுறிகள் ஏதுமில்லை. இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில்தான், தமிழிலக்கிய வரலாற்றில் மிக நீண்ட காலத்தின் பின்னர், போரிலக்கியத்திற்குப் புதியதொரு பரிமாணம் ஈழப்போரினால் கொண்டுவந்து சேர்க்கப் பட்டிருக்கின்றது என்ற உண்மையைத் தமிழிலக்கியத் துறைசார் விற்பன்னர்கள், விமர்சகர்கள் பலரும் ஒப்புக்கொள்ளத் துவங்கியுள்ளனர்.

இத்தகையதொரு பின்னணியிலேயே சமகால ஈழத் தமிழிலக்கிய முன்னோடிகளுள் ஒருவராக மதிக்கப்படும் அமரர் செங்கை ஆழியான் அவர்களது போர்க்காலப் படைப்பான ‘விடியலைத் தேடி’ எனும் நாவலை அணுக விழைகிறேன். 2011இல் எழுதப்பட்ட, 67 பக்கங்களைக் கொண்ட இந்நாவல் குறித்து - ‘விடியலைத் தேடி’ என்ற இச்சிறு நாவல் தமிழரின் சம காலத்தைச் சித்தரிக்கும் ஓர் அரசியல் கதையாகும் - என்று தமது முன்னுரையை செங்கை ஆழியான் ஆரம்பிக்கிறார். அதனைத் தொடர்ந்து, சுதந்திரத்தின் பின்னரான பொன். இராமநாதன், பொன். அருணாசலம் போன்றோரது இணக்க அரசியலும், ஜி.ஜி. பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம் போன்றோரது இணக்கமும் பிணக்கமும் இணைந்து-பிணைந்த அரசியலும், எஸ்.ஜே.வி. செல்வநாயகம், அமிர்தலிங்கம் ஆகியோரது அஹிம்சை அரசியலும், ஆயுதம் ஏந்திய பிரபாகரன் குழுவினரின் ஆயுதப் போராட்ட அரசியலும் பேரினவாதத்திற்கெதிராகப் போராடிப் பூஜ்யமான கதையைச் சொல்லிச் செல்லும் அவர், ‘இன்று மீண்டும் அன்றைய ஆரம்ப கட்டத்திற்கு வந்துள்ளோம். இவற்றை இந்த நாவல் பேசுகின்றது’ என்றும், ‘நம்பி ஏமாந்த தமிழினத்தின் சோக வரலாற்றை இந்த நாவல் ஆவணப்படுத்துகின்றது’ என்றும் அந்த முன்னுரையில் குறிப்பிடுகிறார்.

மன்னார் மாவட்ட மாந்தைப் பட்டினத்தின் முண்டைப்பிட்டிக்கும் வெள்ளாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலுள்ள பாலியாற்றங் கரையில் அமைந்திருக்கும் சுங்கன்குழி கிராமத்திலிருந்தே இந்நாவல் சூல்கொள்ள ஆரம்பிக்கிறது. அமைதியும் அழகும் நிறைந்த சிறியதொரு கிராமம், அது. மொத்தம் சுமார் 56 பேரைக் கொண்ட, எட்டே எட்டுக் குடும்பங்கள்தான் அங்கு வாழ்கின்றன. கிராமத்தின் தலைமகனான அம்பலவாணரின் பிள்ளைகள், பேரப்பிள்ளைகளைக் கொண்ட நாலு குடும்பங்கள். மிகுதி நான்கும் அவரது உறவினர்களது குடும்பங்கள். தந்தைவழிச் சமூகத்தின் அச்சொட்டான உதாரணமாகத் திகழும் சுங்கன்குழியில், அம்பலவாணர் வைத்ததுதான் சட்டம். அவரது சம்மதமின்றி அயலிலுள்ள ஒரு சின்ன ஆட்டுக் குட்டியும் அங்கு சத்தமிட

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

# கற்பனை கலந்த உண்மைக்கதை

## சூழலும் ஊழலும்

## அலசல் அரங்கம் - 6

### கிருஷாந்தன் கூறுகிறான்....

கல்விச்சபை உத்தியோகத்தர் என்னை வந்து சந்தித்துப்போன இரு நாட்களின் பின் அவர் பாடசாலைக்கு வந்தார். என்னை அன்றும் காரியாலயத்துக்கு வரும் படி அழைத்திருந்தார்கள். அன்றைய கூட்டத்திற்கு ஒரு புதிய பெண்மணியும் என்னுடைய ஆசிரியரோடு வந்தமர்ந்திருந்தார். அவர் சிறுவர் உதவிச் சங்கத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரி என்றும் அவர் எனக்கு உதவுவதற்காக வந்திருப்பதாகவும் தமிழ் அதிகாரி கூறினார். அவர் ஓர் இந்தியப் பெண்மணி போல் இருந்தது. அவர் என்னிடம் பல கேள்விகளைக் கேட்டுக் குறிப்புகள் எழுதிக் கொண்டார். அவர் ஆங்கிலத்தில் கேட்டவற்றைத் தமிழ் அதிகாரி எனக்குத் தமிழில் சொன்னார். இவ்வாறு பல நிமிடங்களுக்கு உரையாடல் நடந்தது. எனக்கு என்ன நடைபெறுகின்றது என்பது பற்றி ஒன்றும் விளங்கவில்லை. சிறிது நேரத்தின் பின் அவர்கள் எல்லோரும் ஆங்கிலத்தில் உரையாடினர். இது ஏறக்குறைய பத்து நிமிடங்களுக்கு மேல் சென்றது. அப்பெண்மணி திரும்பவும் நாளை வருவதாகக் கூறி விட்டு எழுந்து சென்றார். தமிழ் அதிகாரி எனக்குச் சில விடயங்களை விளங்கப்படுத்தினார். இங்கு நடந்தவற்றை வீட்டிலுள்ளவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டாமென்றும் வேறு யாராவது எனக்குத் தெரிந்தவர்கள் ரொறொன்ரோவில் வாழ்கிறார்களா என என்னிடம் கேட்டார். எங்களுடைய தூரத்து உறவினர் ஒருவர் இங்கு வாழ்வதாகவும் அவர் சென்ற வருடம் இங்கு வந்தவர். இளைஞர் எங்கு வாழ்கிறார் என்று தெரியாது என்றும் கூறினேன். அவரது தகவல்களை சுவிசில் வாழும் எனது சித்தியிடமிருந்து பெற்றுத்தர முடியுமா எனக் கேட்டார். நான் கேட்டுச் சொல்வதாகக் கூறினேன். சில நிமிடங்களில் அவர் வகுப்பாசிரியரோடு ஏதோ கதைத்து விட்டுப் போனார்.

நான் அன்று வீட்டுக்குப் போய் ஒரே யோசனையோடிருந்தேன். மாமி என்னைப் பார்த்துக் கேட்டா. என்ன யோசித்துக் கொண்டிருக்கிறாய். பாடசாலையில் ஏதாவது பிரச்சினையா என்று. நான் படிப்பது கஷ்டமாக இருக்கிறது. அதுதான் என்ன செய்வது என்று யோசிக்கிறேன் எனச் சொன்னேன். அவ அதுக்கு யோசிக்காமல் ஆரிடமாவது உதவி கேட்டுப்படி என்று கூறினா. நான் பேசாமல் எனது அலுவல்களைப் பார்க்கச் சென்றேன். அன்று இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.

அடுத்த நாள் காலை பள்ளிக்குப் போவதற்கு முன் வாத்தியார் வீட்டுக்குப் போய் விடயத்தைக் கூறினேன். அவர் பயப்படத்தேவையில்லை உனக்கு உதவி செய்வதற்கு பாடசாலை ஒழுங்குகள் செய்கிறது. எதற்கும் மேற்கொண்டு நடப்பதை எனக்குச் சொல்லு என்று ஆறுதல் கூறனார். அன்று பேப்பர் போட்டபின் தான் வாத்தியார் வீட்டுக்குப் போனேன். அதன் பின் அவர் தந்த கோப்பியைக் குடித்து விட்டுப் பாடசாலை சென்றேன். அன்று பிற்பகல் சிறுவர் உதவிச் சங்கப் பெண்மணி வந்து தமிழ் உத்தியோகத்த ரோடு ஏதோ இருந்து கதைத்துக் கொண்டி ருந்தா. நான் பாடசாலைக் காரியாலயத் துக்கு அழைக்கப்பட்ட போது அவர்கள் இருவரும் கதைத்துக் கொண்டிருந்ததைக் கண்டேன். தமிழ் அதிகாரி என்னை வேறோரிடத்துக்கு மாற்றப் போவதாகவும், இந்த வீட்டிலிருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போவதாகவும், நகரின் வேறொரு பகுதியிலுள்ள ஒரு பாடசாலைக்கு என்னை அனுப்புவதற்கு ஆயத்தங்கள் செய்யப்பட்டிருப்பதாகவும் என்னை அதற்கு தயாராகு மாறும் சொன்னார். எனக்கு ஒரே அதிர்ச்சியாக இருந்தது. தற்போதுள்ள வீட்டில் எனக்கு எவ்வளவோ பிரச்சினைகள் இருந்தாலும் ஒரு மாதிரிச் சமாளித்துக் கொண்டிருக்கிறேன், இனிப் புதிய வீட்டுக்குப் போய் அங்கு என்ன மாதிரி இருக்குமோ எனப் பயந்தேன். அதற்கு அவர் இது ஒரு பாதுகாப்பான வீடு இங்கு ஒரு பெண்மணி, உன்னைப் போன்ற சிறுவர் சிறுமியரை வைத்துப் பார்க்கும் ஒரு வீடு. நீ அதிகம் பயப்படத்தேவையில்லை. இது உனக்குப் பாதுகாப்பான இடம். உனக்கு வேண்டிய வசதிகளை அந்தப் பெண்மணி செய்து தருவார். அவரது காரியாலயத்தில் தமிழ் தெரிந்தவர்கள் இருப்பார்கள். எனவே நீ பயப்படத் தேவையில்லை. இப்போது நீ அந்தப் பெண்மணியோடு வீட்டுக்குப் போய் உனது சூட்கேசையும் பிற பொருட்களையும் எடுத்துக்கொண்டு போ என்று கூறிப் புறப்பட்டார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவர் ஏதோ அப் பெண்மணியோடு கதைத்து விட்டு விடை பெற்றுச் சென்றார். நான் அப்படியே பேசாமல் அமர்ந்திருந்தேன்.


வீட்டுக்குப் போய் எனது பொருட்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். என்னோடு வந்த பெண் எனது வீட்டுக்கார அன்ரியோடு பேசினார். அவவுக்கு ஓரளவு ஆங்கிலம் விளங்கும். அவவுக்கும் ஒரே ஆச்சிரியமாக இருந்தது. நாங்கள் பிழை எதுவும் செய்யவில்லை என ஏதோ கூறினது போல் தெரிந்தது. மாமி ஒன்றுமே பேசாமல் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டிருந்தா. நான் அவர்களுக்குச் சொல்லிப் போட்டு அந்த பெண்மணியின் வானில் ஏறினேன். போவதற்கு முன் வாத்தியாரைப் பார்க்க நினைத்தேன். ஆனால் கேட்கப் பயந்து பேசாமல் இருந்து விட்டேன். எனது பாடசாலை நண்பனுக்கும் வருத்தத்தோடு கூறிவிட்டு வந்திருந்தேன். அவனுக்கும் ஒரே அதிர்ச்சியாக இருந்தது. இரண்டு மூன்று கிழமைகள் அவனோடு பழகியிருந்தாலும் ஏதோ நீண்ட நாள் பழகியவரை விட்டுப் பிரிவது போன்ற மனவருத்தம் எனக்கு ஏற்பட்டது. வான் ஓடிக் கொண்டிருந்தது. என் மனமும் பல விடயங்களை நினைத்தது வேகமாக வேலை செய்து கொண்டிருந்தது. வீட்டில் இருந்து நான் கிளம்பிய பின்னர் ஒரேயொரு கடிதம் தான் அம்மாவிடமிருந்து வந்திருந்தது. இரண்டு தடவை சித்தியோடு ரெலிபோனில் கதைத்தேன். ஆனால் எல்லாவற்றையும் மனம் விட்டுக் கூற முடியவில்லை. இப்போது திடீரென ஒரு புதிய இடத்துக்குப் போகிறேன். அங்கு எப்படி இருக்குமோ எனப் பயந்து கொண்டிருந்தேன். என்னோடு வந்த பெண்மணி தனது பெயர் சாரிகா என்று சொன்னது ஞாபகமாக இருந்தது. முதல் நாள் அவ எனக்குத் தந்த அவரது பிசினஸ் காட்டும் என்னிடமிருந்தது. எனக்கு ஆங்கிலம் அதிகம் தெரியாது என்பதால் அவ என்னோடு பேசும் போது ஆறுதலாக வும் விட்டு விட்டும் பேசினா. இதனால் எனக்கு ஓரளவு விளங்கக் கூடியதாக இருந் தது. நாங்கள் மிசிசாகா என்ற இடத்து க்குப் போகிறோமென்றும் இங்கு வசதிகள் உள்ள வீட்டில் எனக்கு ஓர் அறை ஒழுங்கு செய்திருப்பதாகவும், அடுத்த நாள் காலையில் வந்து பள்ளிக் கூடத்துக்கு கூட்டிச் செல்வதாகவும் சொன்னா.

ஏறக்குறைய முப்பது, முப்பத்தைந்து நிமிடங்களின் பின்வான் ஒரு வீட்டின் முன் நின்றது. நானும் சாரிகாவும் இறங்கினோம். வான் சாரதி இறங்கி வந்து எனது சூட்கேசையும் பிற பொருட்களுள்ள ஒரு பையையும் இறக்கி வைத்தான். அந்த வீடு, பல அடுக்கு வீடுகளுக்கு நடுவில் இருந்தது. கதவைத் திறந்து கொண்டு ஒரு நடுத்தர வயதுள்ள வெள்ளைப் பெண்மணி வந்தார். சாரிகா என்னையும் அவவையும் அறிமுகஞ் செய்து வைத்தா. அவவின் பெயர் ஜுலியா எனது ஆங்கிலப் பேச்சின் குறைவைச் சொல்லி வீட்டுக்காரப் பெண் மணிக்கு விளங்கப்படுத்தினா. அவ விளங்கிக் கொண்டு என்னுடன் ஆறுதலாகப் பேசினா. எனக்கு ஒதுக்கப்பட்ட அறைக்கு எங்களைக் கூட்டிச் சென்றா. எனது அறையின் இரண்டு படுக்கைகளும் இரண்டு மேசைகளும் இருந்தன. ஒரு படுக்கை மேல் விரிப்புகள் எல்லாம் குவிந்து கிடந்தன. அறையிலிருந்து சிகரெட் வாசனை வந்தது. அதில் ஏற்கனவே ஒரு பையன் இருப்பதாகவும் அவனோடு தான் நான் அறையில் தங்க வேண்டுமென வும் ஜுலியா சொன்னார். எனக்கு ஒரு மாதிரி இருந்தது. சாரிகா சொன்னார் சிறிது காலத்திற்குச் சமாளிக்கும்படியும் வேறு அறை, காலியாக வந்தால் தனி அறை தருவதாகவும் புதிய இடம், புதிய மனிதர்கள், புதிய மொழி. எல்லாமே புதிதாக இருந்தது. பேசாமல் நின்று கொண்டிருந்தேன். என்னோடு இருப்பவன் பள்ளிக்கூடத்திலிருந்து வரவில்லை என்றும், அவன் படிக்கும் பள்ளிக்கூடத்தில் தான் நானும் நாளை சேரப்போவதாகவும் அவன் உதவியாக இருப்பான் என்றும் ஜுலியா சொன்னார். நான் அரைமனதோடு சூட்கேசையும் பையையும் அறைக்குள் தூக்கிக் கொண்டு போனேன். சாரிகா அடுத்த நாள் காலையில் வருவதாகக் கூறி விடை பெற்றார். நானும் நன்றி சொல்லி விட்டு அங்கிருந்த கதிரையில் இருந்தேன். ஜுலியா 'நீ ரீ குடிப்பாயா என்று என்னைக் கேட்டார். நான் ஓம் என்றேன்' எமது அறையோடு குளிப்பறையிலும் இணைக்கப் பட்டிருந்தது. அது ஒரு வசதியென எண்ணினேன். ஸ்காபரோவிலிருந்த மாடிக் கட்டிடத்தில் குளிப்பறை வெளியே இருந்தது. அது எல்லோருக்கும் பொதுவானது. எனவே நினைத்த நேரத்தில் அதற்குள் போகமுடியாது. காலையில் நான் விடிவதற்கு முன் எழும்பிப் பேப்பர் போடப் போவதால், மாலையில் தான் குளிப்பது வழக்கம். எனவே நான் குளிக்கப் போவதாகச் சொன்னேன். அவவும் அதற்குப்பின் தேநீர் தருவதாகக் கூறிச் சென்றா. அந்த வீட்டின் கீழே ஓரறையும் மேலே மூன்று அறைகளும் இருப்பதை உணர்ந்தேன். நாங்கள் இருந்த அறைக் குப் பக்கத்தில் குசினி இருந்தது. அதனால் நன்மையும் இருந்தது. பின்னால் தீமையும் இருந்ததைப் பல நாட்களுக்குப் பின் உணர்ந்தேன். குளிப்பறை அசுத்தமாக இருந்தது. பார்ப்பதற்கு அருவருப்பாகவும் இருந்தது. வாளியிலிருந்த நீரை குவளையில் எடுத்து எல்லா இடத்துக்கும் அடித்துக் கழுவினேன். இதிலிருப்பவன் இதை கழுவாமல் இருக்கிறான் என்பதை உணர்ந்தேன். அறைக்குள்ளும் புத்தகங்கள், பேப்பர், உடுப்புகள் யாவும் எல்லாவிடத்திலும் சிதறிக் கிடந்தன. அவன் வருவதற்கு முன்னரே அவனைப் பற்றிய ஒரு படம் என் மனதில் உருவாகியது. அவன் சிகரெட் பிடிப்பவன் என்பதை அறையிலிருந்த வாசனையும் அவனது மேசை மேலிருந்த சாம்பல் தட்டும் எனக்கு எடுத்துக் கூறின. இதைப்பற்றி வீட்டுக்காரியும் கவலைப்படவில்லை என்பதும் பின்னால் தெரிந்து கொண்டேன்.

**- துறையூரான் -**

வாழ்க்கையின் ஆரம்பமே இவ்வாறு அமையுமென்றால் கனடாவுக்கு நான் வந்திருக்கவே மாட்டேன். அங்கிருந்த போரின் காரணமாக என்னைப் புலிகள் வந்து பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள் என்ற பயத்தாலும், மூத்த பிள்ளையைக் கனடாவுக்கு அனுப்பிவிட்டால் எங்கள் குடும்பமே நல்ல நிலைக்கு வந்து விடும் என்ற எனது அம்மாவின் ஆசையாலும் நான் இங்கு வந்தேன். எனவே என்ன பிரச்சினை வந்தாலும் கஷ்டங்கள் வந்தாலும் சமாளிக்கப் பழகிக்கொள்ள வேண்டுமென அம்மா கூறிய வார்த்தைகள் என் மனதில் நன்கு பதிந்திருந்தன.

தொடரும்....


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

நகைச்சுவைத் தொடர் 334

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



தமிழ் நாட்டில் தேர்தல் புயல் ஓய்ந்துவிட்டது. வேட்பாளர்கள் வீட்டுக்கு வீடு சென்றார்களோ இல்லையோ மகாத்மா காந்தியின் படம் வீட்டுக்கு வீடு கிடைத்திருக்கிறது. அதாவது மகாத்மா காந்தியின் படம் அச்சிடப்பட்ட பணம் வாக்கு வேட்டைக்காக வீட்டுக்கு வீடு வழங்கப்பட்டுள்ளது.




காற்று என்று சாதாரணமாக சொல்லி விடுகிறோம். தொழில்நுட்பம் கிராமங்களில் வளராத காலத்தில் தகப்பன் பேரன் விவசாயிகள். எப்படி குறிப்பாக காற்றைப்பற்றி தெளிவாகச் சொன்னார்கள்.



கிழக்கிலிருந்து வீசினால் - கொண்டல்
மேற்கிலிருந்து வீசினால் - கச்சான் காற்று
வடக்கிலிருந்து வீசினால் - வாடைக்காற்று
தெற்கிலிருந்த வீசினால் - சோழகம்



தொலைக்காட்சி இல்லை, வானொலி இல்லை, வானிலை அறிவிப்பு இல்லை எப்படித்தான் கணித்து சொன்னார்கள்?
தென்னல் இளம் கீற்றினினை தாலாட்டும் தென்றலது மரத்தினையே சாய்த்துவிடும் புயலாக வரும்பொழுது.



காட்டுத்தீ.. காற்றோடு சேர்த்து எத்தனை அழிவு! அரபு நாடுகளில் மணல் காற்று. நீரோடு சேர்ந்து புயல் சூறாவழி, கடலோடு சேர்ந்து சுனாமி. பனியோடு சேர்ந்தால் பனிப்புயல். உலகரின் மனதுள் காற்று பற்றி ஒரு புயலே வீசிக்கொண்டிருந்தது. என்றுமில்லாதவாறு கொழும்பில் மழை வெள்ளம். பல கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

சர்வதேச ரீதியில் பலவித இயற்கை அழிவுகள். சீனாவில் என்றுமில்லாத மழை வெள்ளம். 4 அடுக்கு மாடிக்கட்டிடமே சரிந்து வீழ்ந்துள்ளது. இலங்கையில் மலைநாட்டுப்பகுதிகளில் மண்சரிவு. மண்சரிவை தடுக்க மரம் நடுதல். மரங்கள் பேணப்படுவது குறைவு. வீடுகள் கட்ட மரம் வெட்டுபவர்கள் தான் கூட.



குப்பைகளை கண்டநிண்டபடி எறிதல் மூலம் வெள்ளம் வெளியேறும் பகுதிகள் அடைபடுவதனால் வெள்ளம் வரும் காலங்களில் இழப்பும் நடைமுறை வாழ்க்கையும் பாதிக்கப்படுகிறது.


'வெள்ளம் வருமுன் அணைகட்டு' என்பார்கள். ஆனால் சுற்றுச்சூழலை துப்புரவு செய்யவும் சொன்னார்கள்... யார் கவனிக்கிறார்கள்.

வெளிநாடுகளுக்கு ரூர் எனச்சொல்லி கொழும்பில் மழை வெள்ளத்தால் ஓரிடமும் போகாமல் நிற்கும் ஐ பொட் அகிலாண்டேஸ்வரி படங்கள் அனுப்பியதை ரூபி, செக்கண்ட் புளோர் செல்லம்மாவிற்கும், ஆட்டிலறி அன்னம்மாவிற்கும் காட்ட இப்ப சொந்த ஊருக்கு போவது கூட வெளிநாட்டு சுற்றுப்பயணம் ஆகிவிட்டது என முணுமுணுத்தா செக்கண்ட் புளோர் செல்லம்மா.



பிறப்பது ஒரு நாடு, வாழ்வது ஒரு நாடு என கலைஞர் கருணாநிதி பராசக்தியில் சிவாஜி கணேசனுக்கு எழுதிய வசனம்.

சொந்த நாட்டுப்பிரச்சினையால் உலகில் எங்காவது சென்று உயிர் வாழலாம் என அன்றுதொட்டு இன்றுவரை இடம் விட்டு இடம், நாடு விட்டு நாடு பெயர்ந்தோர் எத்தனை? ஆனால் தரை மார்க்கத்தில் வாகன விபத்து, நீரில் கப்பல், படகு பிரயாணத்தில் படகு, கப்பல் கவிழ்ந்து தத்தளித்து இறந்தோர் எத்தனை பேர். இன்று விமானம் அதிபயங்கரம். எத்தனை விபத்துக்கள்.. விமான விபத்துக்கள் வருடக்கணக்கில் காரணம் கண்டுபிடிக்க முடியாமல் மர்மமாகவே உள்ளது. விமானத்தில் பிரயாணம் செய்த தமது உறவினர்கள் உயிரோடுள்ளனரா இல்லையா என தெரியாமல் பல குடும்பங்கள் ஏக்கத்துடன் வாழ்கின்றனர்.



வாழ்வே மாயம்!
அங்கை பாருங்கோ ஜி 7 மாநாட்டிலை எல்லா உலகத்தலைவர்களும் ஆளையாள் மாறி கை குலுக்கிக்கொண்டு சிரிச்சுக் கதைக்கினம்.. மற்றப்பக்கம் குண்டுகள் போடினம், ஆளையாள் கட்டித்தழுவி கலகலப்பாக படத்துக்கு போஸ் குடுக்கினம். நாடாளுமன்றத்திலை முழங்கையாலை இடிக்கினம் என ரி.வி.யைப்பார்த்தபடி சிரித்துக்கொண்டு சொன்னா செக்கண்ட்புளோர் செல்லம்மா.

# நியோகா

## 34ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒரு செய்தியும் இதன் மூலம் காவப் பட்டுள்ளது. ஆனால், தாய்–பிள்ளை உற வொன்றை ஏக்கத்துடன் பார்த்து, ஒரு பிள்ளைக்காகத் தவிக்கும் ஒரு பெண்ணாக மலர் இதில் சித்தரிக்கப்படவில்லை.

அதாவது, விரகதாபத்தினால் துடிக்கும், நீண்ட பாவாடை சட்டை அணிந்த ஒரு பத்தாம்பசலிப் பெண்ணாக அறிமுகமாகும் மலர், முடிவில் நியோகம் மூலம் பெற்ற பிள்ளையுடன் பூங்கா ஒன்றில் பான்ற்ஸ் போட்டுக் கொண்டு விளையாடுகின்றார். அது மலரின் மாற்றமாக காட்டப்படுகின்றது.

பிள்ளையின் அப்பா யார் எனச் சொல்ல வேண்டிய கட்டாயமில்லை. ஆனால், அனுபவிப்புக்காகவோ, மகிழ்வுக்காகவோ இன்றி, பிள்ளை வேண்டும் என்பதற்காக மட்டுமே நியோகம் மூலம் பிள்ளை பெற்றதாக இதில் காட்டப்பட்டிருக்கின்றது. நியோகம் என்பது வராமல் இருந்திருந்தால், மலருக்கும் அந்த அப்பா பாத்திரத்துக்குமான உறவைப் பற்றிய கதை திறந்த கதையாக இருந்திருக்கும். நாங்களும் எங்களுடைய கற்பனைக் குதிரைகளை ஓடவிட்டிருந்திருக்கலாம்.

வயதுவந்தவர்கள் தங்களுக்குச் சரி எனக் கருதுபவற்றைச் செய்து கொள்ளலாம். அவர்களிடையே ஏற்படுத்தும் உறவுகளும் அதன் சுமைகளும் வேதனைகளும் மகிழ்வுகளும் அவர்களைப் பொறுத்தவை. ஆனால் ஒரு குழந்தையை அதில் சம்பந்தப்படுத்தியது பல கேள்விகளை என் மனதில் எழுப்பியது, அன்றைய நியோக கலாசாரத்தில் பிறந்த பிள்ளைக்கு, பெயருக்கு அப்பாவும் சமூக ஆதரவும் இருந்தது, ஆனால் இந்தப் பிள்ளையின் உளவியல் சிக்கல்களுக்கு எது மருந்தாகும்? அது சமூகத்தில் எதிர் கொள்ளும் சவால்களுக்கு என்ன தீர்வு கிடைக்கும்?



இது படம் தானே எனச் சிலர் சொல்லலாம். ஆனால், சமூகத்தில் குறிப்பிடத்தக்களவு தாக்கத்தை உருவாக்கக்கூடிய திறன் திரைப்படங்களுக்கு அதிகமாகவுள்ளது. உதாரணத்துக்கு, "திரைப் படங்களில் விதவை என்றால் வெள்ளை ஆடை என்ற வகையில் எடுத்துக்காட்டி சினிமா விதவை மறுமணத்தை கொச்சைப்படுத்தியது. 80களுக்கு பிற்பாடு சினிமாவினால் மறுமணம் அரிதாகியே விட்டது. விதை-வயானால் காதலிக்கக் கூடாது, திருமணம் செய்யக்கூடாது என்பதை சினிமா ஊறவைத்துவிட்டது என, 'வைகறை' பத்திரிகைக்காக 2008ல், நான் பேட்டி கண்ட போது சமூக செயற்பாட்டாளர் மாலதி மைதிரி சொன்னதைச் சொல்லலாம். இந்திய தமிழ் சினிமாக்களில் இவ்வகையில் பேசாப் பொருள் பற்றிப் பேசிய சில இயக்குநர்களும் முடிவை மசாலா ஆக்கி இருந்தது போல இதுவும் ஆகிவிட்டதே என்பதில் எனக்கு விசனமாக இருக்கின்றது.

எங்களுடைய தமிழ் சமூகம் துரதிஷ்டவசமாக இளம் விதவைகளை அதிகமாகக் கொண்ட ஒரு சமூகமாக இருக்கின்றது. அப்படியான ஒரு பெண்ணுக்கு 2 பிள்ளைகள் இருந்தால், அவளுக்கு மறுமணமோ அல்லது ஆண் துணையோ தேவையில்லை என்ற கருத்தல்லவா இங்கு தொனிக்கின்றது. மேலும், விந்து அன்பளிப்பு மூலம் கர்ப்பம் தரிக்கப் போகிறேன் என்று சொன்ன அந்தப் பெண் அனு (மலரின் தம்பியின் மனைவிய-ின் தங்கை) எதற்காக அந்த முடிவுக்கு வந்தார் என்பதும் பார்வையாளர்களின் ஊகத்துக்கு விடப்பட்டிருக்கின்றது. அவர் ஓரினச் சேர்க்கைப் பெண் அல்லது ஆண் துணையைக் குறித்த காரணத்துக்காக வெறுப்பவர் என அப்படி ஏதாவது ஒரு காரணம் காட்டியிருந்தால் அவரின் அந்த முடிவுக்கு அது வலு சேர்த்திருக்கும் என்பது என் கருத்து.

தாலி ஏறிவிட்டால் அது தான் வேலி. அதன் பிறகு என்ன நடந்தாலும் அந்த வேலியைத் தாண்டக்கூடாது என்பதே எமது சித்தாந்தம். அது இன்னும் கொஞ்சம் இந்தத் திரைப்படத்தில் மிகைப்படுத்தப்பட்டுள்ளது போல் எனக்குத் தோன்றுகின்றது. இயற்கை யாக இருக்கும் உடலின் ஒரு தேவையான காமத்தை மட்டுமல்ல, ஆண் பெண் உறவால் வரும் தோழமை, அந்நியோன்யம், மகிழ்ச்சி யாவற்றையும் கலாசாரம் என்ற போர்வைக்குள் அமிழ்த்திவிடும் இன்னொரு குடும்பத்தின் கதையாக இது முடிந்திருக்கின்றது.

திரைக்கதை விறுவிறுப்பையோ அல்லது அதிர்வுகளையோ என்னில் உருவாக்கவில்லை ஆயினும் ஒரு பெண் இயக்குநரின் படம் இது, அதுவும் இங்கு கனடாவில் வாழும் இலங்கைத் தமிழ் பெண்ணின் இயக்கம் என்பதில் எனக்கு மிகுந்த மகிழ்வாகவுள்ளது. இலங்கைத் திரைப்பட வரலாற்றில் இது மைல் கல். அதற்காக சுமதிக்கு எங்கள் மனம்நிறைந்த பாராட்டுகள். சுமதியிடமிருந்து இன்னும் பல திரைப்படங்களை ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

# காதலிக்க வேண்டிய படங்கள்




**- வானரன் -**

***Under the moonlight*** - ஈரான் தீவிர இஸ்லாமிய மத கல்லூரியில் முல்லாவாக வருவதற்காக செயிட் ஹெசெய்ன் படித்து வருகின்றார். கட்டுப்பாடுகள் மிக அதிகமானது இக்கல்லூரி. முல்லாவிற்கான உடைகளுக்கான துணிகளை வாங்கிக்கொண்டு வேக புகையிரத வண்டியில் வரும்பொழுது ஒரு சிறுவன்



செயிட்டின் துணிகளை களவாடி விடுகின்றான். மீண்டும் மீண்டும் சிறுவனைச் சந்திக்கும் செயிட்டிடம் சிறுவன் "நான் உன்னிடமிருந்து களவெடுக்கவில்லை. நீ துணிகளை மிக இறுக்கமாக கட்டிப் பிடித்துக் கொண்டிருந்தாய். நான் நினைத்தேன் மிக உயர்ந்த பொருட்களை நீ வைத்துள்ளாய் என. அதனால் தான் எடுத்துச் சென்றேன். உனது கவலையீனம் தான் இதற்கு காரணம் எனக் கூறுகின்றான். நாளை சுரங்க ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள பாலத்திற்கு கீழ் வா. உனது பொருட்களை பெற்றுக் கொள்ளலாம்" என்கின்றான்.

மறுநாள் பாலத்திற்கு கீழ் செயிட் செல்கின்றான். அங்கு சமூகத்தால் ஒதுக்கப்பட்ட மனிதர்களை சந்திக்கின்றான். அவர்களது வாழ்விடமே அது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு பிரச்சினைகளுடன் வாழ்கின்றனர். ஒருவர் கூறினார் "the sea of poverty has no shore" என. ஒரு சில நாட்களுக்கு முன்னர் வாங்கிய புதிய மத நூல்களை விற்று இவர்களுக்கு சாப்பாடு வாங்கிச் செல்கின்றான். அவர்கள் அனைவரும் ஒன்றாக பகிர்ந்து உண்கின்றார்கள். மதக் கல்வியில் காண முடியாத கடவுளை இங்கு காண்கின்றான் செயிட். இது இவனை புதிய மனிதனாக்குகின்றது.

வெகு இயல்பாக 90 நிமிடங்களுக்குள் இப்படத்தை இயக்கியுள்ளார். Seyyed Reza Mir-Karimi தெஹரானில் பிறந்து திரைப் படத் துறையில் ஈடுபட்டுள்ள இவருக்கு இது இரண்டாவது படம். ஈரானிய நியு வேவ் அலையில் எழுந்துள்ள மற்றொரு படமே இது. தீவர மதக் கொள்கைகளை கொண்டுள்ள ஈரானில் கடவுளைத் தேடும் மாணவர்கள் ஊடாக கடவுள் கோயில் களிலும் மத நூல்களிலும் இல்லை. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மனிதர் களிடமே உள்ளார் என துணிச்சலாக கூறியுள்ளார் இயக்குனர்.

## *Paraiso Travel*

தாவரமில்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி – குதம்பைச் சித்தர்

வியட்நாம் போரின் பின்னர் அமெரிக்க இராணுவத்தினர் பலர் கொலை, கொள்ளை போன்றவற்றில் ஈடுபட்டமைக்காக நீதிமன்றங்கள் கடுமையான தண்டனைகளை வழங்கின. குறிப்பாக இதில் ஈடுபட்டோரில் பலர் கால், கைகளை இழந்தோர். இவர்களுக்கு எந்த மறு வாழ்வுத் திட்டங்களும் இல்லாமல் வெறும் தண்டனைகளே இவர்களின் வாழ்வாகிவிட்டது. இப்படத்தில் சிறுவனின் களவைக் கூட அதன் சமூகப் பின்னணியுடன் காட்டுகின்றார்கள். இதனால் பார்வையாளர்கள் சிறுவனை விமர்சிப்பதற்கு பதிலாக சமூகத்தை விமர்சிப்பார்கள்.

கடவுளுடன் காதலைத் தேடினார்கள் லிஸ். காதல் எங்குள்ளது? கொலம்பியாவில் இருந்து நவீன சொர்க்கம் அமெரிக்காவை நோக்கி புறப்படுகின்றது ஒரு குழு. இக்குழுவில் ஒரு காதல் ஜோடியும் உள்ளது. காதலன் மேல் மத்திய வர்க்கம். கொலம்பியாவில் இருந்து கௌதமாலா வந்து பின்னர் அங்கிருந்து மெக்சிக்கோ வந்து, அதன் பின்னர் ரெக்சாஸ் வரவேண்டும். இதுவே இவர்களது பயணப் பாதை. முகவருக்கு கொடுக்கப்பட்ட முன் பணத்திற்கும் அதிகமாக சில இடங்களில் பணம் கொடுக்கப்படுகின்றது. ஒரு இடத்தில் பேரூந்து ஓட்டிக்கு தன் உடலையே ஒரு பெண் கொடுக்கின்றாள். இப்பயணத்தின் இறுதியில் மரக்குத்தி போல் உள்ள ஒரு பொம்மையுள் மெக்சிக்கோவில் இருந்து ரெக்சாசுக்கு வருகின்றார்கள். மூச்சுத் திணறி ஒருவர் இறந்து விடுகின்றார்.

நியு யோக்கின் குயின்ஸ் பகுதிக்கு வருகின்றனர் காதலர்கள். காதலன் மார்லன் வீதிக்குச் செல்ல அங்கு வரும் பொலிஸ் விசாரிக்க முற்பட ஓடி ஒளிக்கின்றான். குயின்ஸ் பகுதியில் உள்ள கொலம்பியாவைச் சேர்ந்த உணவு விடுதியினர் மார்லனுக்கு உதவி புரிகின்றனர். மார்லன் தொடர்ந்து தனது காதலியை



தேடுகின்றான். இதற்கிடையில் மார்லனுக்கும் மற்றொரு பெண்ணுக்கும் காதல் ஏற்படுகின்றது. அவளது வீட்டில் அவன் வாழ்கின்றான். கொலம்பிய உணவு விடுதியில் வேலை. புதிய காதலி என மார்லனின் வாழ்வு நிரந்தரமாகின்றது. ஒரு இரவு விடுதியில் ஒரு நாள் மார்லனுடன் பயணித்த பெண்ணை பாலியல் தொழில-ாளியாக சந்திக்கின்றான். அவளிடம் தனது காதலியைப் பற்றி விசாரிக்கின்றான். மறுநாள் இவனது உணவு விடுதிக்கு வந்து காதலி பற்றி விபரங்களை தெரிவிக்கின்றாள்.

மார்லன் காதலியை நோக்கி பயணமாகின்றான். புதிய காதலி மறித்தும் கேளாமல் வெளியே செல்கின்றான். அங்கு காதலி புதிய வாழ்வு ஒன்று வாழ்கின்றாள். வேண்டா வெறுப்பாக இவனுடன் கதைக்கின்றாள். மார்லன் இப்போ அதுவும் இல்லாமல் இதுவும் இல்லாமல்?

Paraiso Travel என்ற இப்படம் காதலுக்கான தேடலாய் இல்லாமல் புதிய அகதிகளின் கடின வாழ்வை பதிவாக்கியுள்ளது. இந்த புதிய அகதிகளை அமெரிக்கா மிக மோசமாக நடத்துகின்றது. வேலை செய்தால், வரி கட்டினால் தான் நிரந்தரமாக தங்க முடியும். கள்ளமாக வேலை செய்தால் தண்டனை என மிக இக் கட்டான நிலையில் வாழ்கின்றனர். அமெரிக்கர்கள் செய்ய மறுக்கும் விரும்பாத வேலைகளை இவர்கள் செய்கின்றனர். அமெரிக்கா வரும் அகதிகளுக்கும் படம் உறுதியாக ஒரு விடயத்தைக் கூறுகின்றது அமெரிக்காவில் எதுவும் இல்லை என்பதே அது. யதார்த்தத்திற்கு எதிராக அமெரிக்கா இயங்குகின்றது என இயக்குனர் உரத்த குரலில் கூறியுள்ளார்.

# 'மின்வலை...

21ஆம் பக்கத்தொடர்ச்சி

"பல்வேறு துறை சார்ந்த புலம் பெயர் எழுத்தாளர்களின் பதினான்கு கட்டுரைகள் 'Pearl Necklace' என்ற நூலில் அடங்கி உள்ளன. ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள அக்கதைகளை வாசித்து நமது இளம் சந்ததியினர் நமது நாட்டில் நடந்த விபரங்களை நன்கு அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. மற்றும் "மின்வலையில் வந்தவை" என்ற நூலும் மருத்துவ, விஞ்ஞானக் கருத்துக்களை கொண்ட பயனுள்ள நூலாகவும் அமைந்துள்ளன என்றார்.

இவ்வைபவத்தில் கணக்காளர் திரு. சிவன் இளங்கோ பிரதம விருந்தனராக கலந்து கொண்டார். அவரும் Monsoon Journal வெளியீட்டாளர் திரு. வேலும்மயிலும், அதன் ஆசிரியர் திரு. சிவப்பிரகாசம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.



பல இளைஞர்கள், யுவதிகள் ஆகியோரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு தமிழிலும், ஆங்கிலத்திலும் உரையாற்றியமை ஒரு முன்மாதிரியாக இருந்தது. நூலாசிரியர் திரு. சிவா சின்னையாவின் பேரனான செல்வன் சிந்து ஜெயபாலன், டாக்டர் போல் ஜோசெப்பின் புதல்வி செல்வி மேரி கியூரி மற்றும் செல்விகள் அபிரா நடராசா, விசாலி ரட்னம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

"Pearl Necklace" நூலின் முதற் பிரதியை திரு. சிவன் இளங்கோவும், மறு நூலின் முதற் பிரதியினை நூலாசிரியர் திரு. சிவா சின்னையாவின் முன்னாள் மாணவனும் அவரது நூல்களை அழகுற அச்சிட்டு வழங்கிய Bright Sun Printer உரிமை யாளர் திரு. ரவீந்திரனும் பெற்றுக் கொண்ட னர். எழுத்தாளர் இணைய உறுப்பினர்கள், மற்றும் எழுத்தாளர்கள், வாசகர்கள் ஆகியோருட்பட பலர் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

**- வீரகேசரி மூர்த்தி -**

# 'விடியலைத்...


36ஆம் பக்கத்தொடர்ச்சி

முடியாது!

இராணுவத்தின் ஆக்குரோஷம் மிக்க பன்முனைத் தாக்குதல்களுக்கு முகம்கொடுக்க முடியாமல் விடுதலைப்புலிகள் பின்வாங்க ஆரம்பித்தபோது, 'பொடியள் செப்பமாக அடிச்சு விரட்டிவிடுவான்கள்' என்ற அம்பலவாணரின் உறுதியான நம்பிக்கை சிதைந்து போகிறது. முழுச் சுங்கன்குழி கிராமமும் அவரது முன்நடத்தலுடன் பூநகரியை நோக்கி இடம்பெயர்கிறது. பின்னர் முரசுமோட்டைக்கும் அங்கிருந்து புதுக்குடியிருப்புக்கும், ஈற்றில் நந்திக்கடல் பகுதியின் கெப்பப்புலவுக்கும் போய்ச் சேர்ந்தபோது, அம்பலவாணர் தமது உறவினர்களில் 22 பேரைப் போருக்குப் பறிகொடுத்திருந்தார். பொடியளின் சாகசம் பொய்யாய்க் கனவாய்ப் போன தருணம், அவரது குடும்பத்தவர் 56 பேரில் 20 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர். இடையில் நடந்து முடிந்த மனிதப் பேரவலத்தை, ஆறாத கவலையுடனும் தீராத வெஞ்சினத்துடனும் இந்த நாவல் விபரிக்கிறது! போரில் பொங்கிப் பெருகிய குருதியாற்றின் பாய்ச்சலுடன் கலந்திணைந்து, அம்பாலவாணரின் குடும்பக் கதையொன்றையும் நாவல் கூட்டியள்ளிச் செல்கிறது!

அம்பலவாணரின் பேரன் சசிதரன், விடுதலைப் புலிகளுடன் இணைந்து, கோண்டாவில் முகாமில் பத்திரிகை வெளியீட்டுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் சந்தித்த மரகதத்திடம் மனதைப் பறிகொடுக்கிறான். யாழ். குடா நாட்டின் மீதான ஆக்கிரமிப்பை இலங்கை இராணுவம் தீவிரப்படுத்தவே, வலிகாமம் முழுவதும் வன்னியை நோக்கி இடம்பெயர ஆரம்பிக்கிறது. மரகதமும் குடும்பத்தவர்களும் மூட்டை முடிச்சுக்களுடன், நாவற்குழிப் பாலம் கடந்து, கிளாலி ஊடாகக் கிளிநொச்சி சென்று, அங்கிருந்து திருவையாறு போய்ச்சேரும் அச்சம் மலிந்த பயணத்தைக் கிளைக் கதையாக இந்நாவல் கூறிச் செல்கிறது.

இயக்கத்தினரால் பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்ட மரகதம், ஒரு கட்டத்தில் இன விடுதலைக்காகத் தன்னைப் பூரணமாக அர்ப்பணிக்க முடிவெடுத்ததன் மூலம், சசிதரனின் சபலத்துக்கு முற்றுப் புள்ளி இடுகிறாள். கலா என்ற மாற்றுப் பெயருடன் இயக்கத்தில் உயர்பதவி பெறுகிறாள். 'இன்றைக்கு நாங்கள் எல்லாத்திலும் இருக்கிறம். எதுவும் செய்யமுடியும். பெண்களின் மகத்தான சக்தியை நீங்க அறியவில்லை. எங்களால ஆக்கவும் அழிக்கவும் முடியும்... இலேசாக எண்ணிவிடாதையுங்கோ..' (பக். 17) எனும் வார்த்தைகள் மூலம் புதிய தலைமுறைப் பெண்களின் துணிச்சலையும் பரந்துபட்ட பார்வையையும் அவள் துல்லியமாக வெளிப்படுத்துகிறாள். சசிதரனை அவனது மாமி மகள் வசந்தியுடன் இணைத்து வைப்பதற்கென அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு உதவிய கலா, யுத்தத்தில் மடிந்து போகிறாள். ஓங்கி முழங்கிய விடுதலை யுத்தம், தற்காப்பு யுத்தமாகிப் பின்னர் உக்கிரமிழந்து ஒருபக்க இனவழிப்பாக உருவெடுக்கிறது. சரணாகதி வேண்டி வெள்ளைக் கொடியேந்தி வந்த விடுதலைப்புலி வீரர்களோடு சசிதரனும் சுட்டு வீழ்த்தப்படுகிறான். வரலாறு காணாத துன்பங்களையும் துரோகங்களையும் அழியாத கறைகளாகக் கொண்ட அத்தியாயம் ஒன்று,




வன்னி மண்ணில் வரையப்படுகிறது. எஞ்சியிருந்த குடும்பத்தவர், உறவினருடன் மெனிக் ஃபார்ம் இடைத் தங்கல் முகாமில் சிலகாலம் தங்கியிருந்து, கடைசியில் மீண்டும் சுங்கன்குழி போய்ச் சேரும் அம்பலவாணரின் குடும்பத்துக்கு, அங்கொரு அதிர்ச்சி காத்துக்கிடப்பதாகக் கூறி, 'விடியலை நோக்கி' என்ற இந்த நாவல் முடிவுக்கு வருகிறது!

செங்கை ஆழியான் ஒரு புவியியலாளர். மேலும், அவர் ஓர் அரச நிர்வாகத்துறை அலுவலர். அந்தவகையில் வட இலங்கையின் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர். அவ்வப்பிரதேசங்களில் வதியும் மக்களது கிராமிய மொழி வழக்குகளும், வாழ்க்கை முறைகளும், உற்பத்தி உறவு முறைகளும், உணவு-உடை உள்ளடங்கலான பண்பாட்டு அம்சங்களும், புவியியல் சார்ந்த விபரணைகளும் அவரது நாவல்களில் மிக எளிமையாகவும் நுணுக்கமாகவும் அழகாகவும் சித்திரிக்கப்படுவதற்கு இவை பிரதான காரணங்கள். அம்பலவாணரது மூன்றாவது மகள் பாக்கியலட்சுமியின் கணவன் மருதநாயகம், சுங்கன்குழி கிராமத்திற்குப் பின்னாலுள்ள பாலியாற்றங்கரையை அண்டியிருக்கும் அடர்ந்த காட்டுக்குள் வேட்டை நாயுடன் உடும்பு வேட்டைக்குச் செல்கின்ற காட்சி - வன்னிக் காட்டுப்புற ஆன்மாவைக் கையோடு காவிச் செல்கின்ற காட்சி - செங்கை ஆழியானுக்கே வாலாயமான நேரடி அனுபவ வார்ப்பு! இதுபோன்ற அனுகூலங்களுடன் கூடிய, அவரது ஆற்றலின் பலாபலன்களை வாசகர்கள் இந்நாவலின் பல இடங்களில் அனுபவிக்கலாம்.

சுமார் 50 நாவல்களை ஈழத்தமிழ் வாசகர்களுக்குத் தந்த பெருமைக்குரிய எழுத்தாளரான செங்கை ஆழியான், அன்றாட வாழ்வில் தாம் கண்டவற்றை உடனடியாகக் கதையாக்கும் வல்லபம் கொண்டவர். இது எல்லா எழுத்தாளர்களுக்கும் கைவராத கலை. ஆனால் இந்த வலிமை இவரை மேலோட்டமான மெல்லுணர்வுகளுக்கும் இலட்சியங்களுக்கும் முன்னுரிமை கொடுக்கும் ஒரு படைப்பாளி என்ற வகைக்குள் மட்டுப்படுத்தி வைத்திருந்தது. பங்காளராக இல்லாமல் பார்வையாளராக இருந்து இலக்கியம் படைக்கும் அவரது பல ஆக்கங்களில் சமூக முக்கியத்துவும் சமரசம் செய்யப்பட்டிருப்பதான ஓர் அபிப்பிராயம் பல விமர்சகர்கள் மத்தியில் நிலவி வந்துள்ளது.

மேலும், செங்கை ஆழியான் தனது பல்கலைக்கழக நாட்களில் பேராசிரியர் கைலாசபதியிடம் கல்விகற்றதன் பயனாக, தனது எழுத்தூழியத்தின் ஆரம்ப காலத்தில் இடதுசாரிச் சிந்தனையால் கவரப்பட்டிருந்தார். ஆயினும், கடந்த நூற்றாண்டின் அறுபதுகளுக்குப் பின்னரான சுமார் 3 தசாப்தகாலமாக ஈழத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த முற்போக்கு அணியுடன் அவர் தன்னை இணைத்துக் கொண்டவரல்ல. அதேவேளை அவர் ஒரு தீவிரத் தமிழ்த் தேசியவாதியுமல்ல. பதிலாக, தனது சகோதரர் புதுமைலோலனின் பாதிப்புகள் காரணமாக, ஒரு மிதவாதத் தமிழ்த் தேசியவாதியாகவும் தமிழ்ப் பற்றாளனாகவும் தம்மை இனங்காட்டிக்கொண்ட அவர், பெரும்பாலும் யாழ். இலக்கிய வட்டத்தினருடனேயே தனது ஊடாட்டங்களை வைத்திருந்தார்.

இவ்வகையில் ஒரு சித்தாந்தச் சார்புநிலைப்பட்ட படைப்பாளியாக அவர் தன்னை மாற்றிக்கொள்ளாத போதிலும், தான் வாழ்ந்த சமூகத்தில் கண்டவற்றை, கேட்ட வற்றை, உணர்ந்தவற்றை யதார்த்தப் பண்புடன் கூடிய படைப்புக்களாக உருவாக் கினார். மிக நீண்ட காலமாகக் கதை சொல்லும் மரபாக இருந்துவரும் யதார்த்த வாத அடிப்படையிலேயே தனது இலக்கியப் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொண்டார். யதார்த்தவாதத்தின் தொடர்ச்சியாக மேற்கிளம்பிய இயல்புவாத அல்லது நவீனத்துவ அல்லது பின்நவீனத்துவப் பண்புகள் எவற்றையும் தமது படைப்புகளில் அவர் ஒருபோதும் பரீட்சித்துப் பார்த்தவரல்ல.


கல்கி, சாண்டில்யன், அகிலன், நா. பார்த்தசாரதி போன்ற தமிழக எழுத்தாளர்கள் எவ்வாறு மெல்லுணர்வுகளைத் தீண்டி, இலட்சிய வேட்கைகளை விதைத்து, ஒரு புதிய தலைமுறை வாசகர்களைத் தம்வசப் படுத்தினர்களோ, அவ்வாறே ஈழத்தில் ஒரு வாசகர் பரம்பரையைச் செங்கை ஆழியான் தனதாக்கி வைத்திருந்தார். காட்டாறு, வாடைக்காற்று, கிடுகுவேலி, இரவின் முடிவு போன்ற அவரது நாவல்கள் பல பரந்துபட்ட வாசகர்களிடையே வரவேற்பைப் பெற்றிருந்தமைக்கு இதுவும் ஒரு பிரதான காரணம். அந்தவகையில், போர்க்கால வரலாற்றைப் பின்புலமாகக் கொண்டு, அக்கால வாழ்க்கையை யதார்த்தப் பண்புகளுடன்கூடிய ஒரு படைப்பாக்கும் பணியினை 'விடியலைத் தேடி' நாவலூடாக அவர் வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார்.

தான் வாழும் சமூகத்து மக்களுக்குத் தேவை என்று ஒரு படைப்பாளி கருதும் செய்தியைத் தனது படைப்பில் சொல்வதற்கு, அப்படைப்பாளிக்குப் பூரண சுதந்திரமும் உரிமையும் உண்டு. ஆயினும் இந்த உரிமையும் சுதந்திரமும் ஈழத்தமிழ் எழுத்தாளர்களுக்கு 2009 மே 18 வரை கிடைக்கவில்லை. அதன் பின்னர் கிடைத்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொண்ட படைப்பாளிகளுள் செங்கை ஆழியானும் ஒருவராவார். விடுதலைப் புலிகளின் தோல்வியை 'ருத்திரதாண்டவம்' என்னும் நாவலில் 2012இல் அவர் எழுதியிருக்கின்றார். அதற்கு முன்னதாக 2011இல் விடுதலைப் புலிகளை விமர்சித்து எழுதப்பட்டதுதான் 'விடியலைத் தேடி.' எனும் இந்த நாவல். பேரினவாத்திற்கு எதிராக மேற்கொண்ட போராட்டங்கள் யாவும் இறுதியில் பூச்சியமாயின என்றும், அவ்வாறான நிலைமைக்கு புலிகளின் தீர்க்கதரிசனமற்ற பல முன்னெடுப்புகள் காரணங்களாக இருந்துள்ளன என்றும் எழுதிச் செல்லும் செங்கை ஆழியான், தனது கண்டனங்களையும் அவற்றிற்கான காரணங்களையும் இந்நாவலில் அடுக்கிக்கொண்டே போகிறார். 'எத்தனை சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அத்தனை பேச்சுவார்த்தைச் சந்தர்ப்பங்களும் வீணடிக்கப்பட்டன' (பக். 56) எனப் பொருள்படும் வகையில் கூறும் அவர், ஈழத்தில் தமிழ்பேசும் மக்களது ஒரு குறிப்பிட்டகால வாழ்வினை உண்மைத் தன்மையுடனும் நம்பகத் தன்மையுடனும் நாவலாக்கித் தர வேண்டும் என்ற வேட்கையுடன் இந்த நாவலை எழுதியிருப்பதாகத் தெரிகிறது.

Novellus என்ற இலத்தீன் சொல்லே ஆங்கிலத்தில் Novel ஆகியது. அதனைத் தமிழில் நாம் நாவல் என அழைக்கிறோம். Novellus என்பது இலத்தீன் மொழியில் 'இளமையும் புதுமையும்' எனப் பொருள்படும் ஒரு சொற்பதமாகும். செங்கை ஆழியானின் 'விடியலைத் தேடி' எனும் நாவலில் இப்பொருண்மை பெரிதும் எய்தப்பட்டதாகச் சொல்லமுடியாது. புதுமையான உருவகங்களோ படிமங்களோ இன்றி, ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக - நேர்கோட்டுத் தன்மை கொண்டதாக இந்நாவல் படைக்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழ் இலக்கிய உலகில் இடம்பெறும் மிகச் சிறிய நாவல்களுள் ஒன்றான 'விடியலைத் தேடி,' சுங்கன்குழி கிராம மக்களது வாழ்வில் வீசிய காலச் சூறாவளியைச் சுருக்கமாகவும் உருக்கமாகவும் சொல்லும் ஒரு புனைவு. இலங்கைவாழ் தமிழினத்தின் ஒரு குறிப்பிட்ட கால அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற உண்மைச் சம்பவங்களின் முக்கியமான ஒரு பதிவு. தமிழர்தம் உரிமைகளை வென்றெடுக்கவென மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகள் பலவும் கைகூடாத நிலையில், ஆயுதப் பலத்தினைப் பிரயோகித்து அவ்வுரிமைகளைப் பறித்தெடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியும் தோல்வியில் முடிந்தமைக்கான காரண காரியங்களைச் சொல்லும் கதை. அவ்வகையில், ஈழத் தமிழர்மீது திணிக்கப்பட்டு வந்த வாழ்வின் குரூரங்களை எதிர்த்துக் குரலெழுப்புவதற்குத் தேவையான ஆத்ம பலத்தையும் எழுத்தாற்றலையும் கொண்ட அமரர் செங்கை ஆழியானின் 'விடியலைத் தேடி' நாவலுக்கென்று, ஒரு வரலாற்றுப் பெறுமதியும் முக்கியத்துவமும் உண்டு என்பதையும், அவரது படைப்பிலக்கிய முயற்சியில் இந்நாவல் ஒரு முன்னோக்கிய பாய்ச்சல் என்பதையும் வாசகர்களால் எளிதில் இனங்கண்டுகொள்ள முடியும்!

---

நன்றி: மே 2016, ஜீவநதி



- க. நவம் -

தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com


தாய் வீடு - சுயாதீன கலைத் திரைப்பட மையம்
இணைந்து நடத்தும்
INDEPENDENT ART FILM SOCIETY
தாய்வீடு
THAIVEEDU HOME & LIVING
12வது
சர்வதேச தமிழ்த் திரைப்பட விழா
12th
ITaFF - 2016
சிறப்பு விருந்தினர்: அ. யேசுராசா
JUNE
11
SATURDAY
Scarborough Civic Centre
150 Borough Drive
Toronto ON M1P 4N7 Canada
(McCowan Road and Ellesmere Road)

# JRS AUTO TECH

**OPEN 24 HOURS
7 DAYS A WEEK**

MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS

VISA



- Free Inspection & Diagnostics
- Complete Car & Truck Care
- Licensed Mechanics
- Insurance Work Done
- All Fluid Top Ups & A/C Repairs
- Fuel Injection Service & Muffler/ Turbos
- Courtesy Drop Off & Pick Up Available
- Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash

**SENIOR'S SPECIAL**
Free Shuttle Available for Seniors

## TIRE SPECIALS
NEW TIRES FROM **$75**
USED TIRES FROM **$35**

## FREE OIL CHANGE WITH RUST PROOFING
**$99** Car
**$120** SUV

## BRAKE JOB
STARTING FROM
**$159**

## WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
**$450** Most Cars
**$550** Most Vans

Castrol
REGULAR OIL CHANGE **$29.95**
CASTROL OIL CHANGE **$39.95**
SYNTHETIC OIL CHANGE **$49.95**
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR **$149.95**

## TRANSMISSION FLUSH
*Starting From...*
*Imports $74.95*
*Radiator Flush $79.95*
*Domestic $149.95*

## ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
BMW
LEXUS
FREE DTC Code Run and Inspection

# 2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)

**CALL SUBAS DIRECT → 416-206-9489**


**Tel: 416-628-4399**

**Email: jrsautotech@hotmail.ca**

Like, Share & Follow us at **www.facebook.com/jrsautotech**

*Prices subject to change. Valid with flyer. Cannot be combined with any other offers.

designed by: panchaldesigns.com 647.294.2963


NAVA LAW
PROFESSIONAL CORPORATION
Your trusted partner for decisions that matter
10 Milner Business Court,
Unit 210, Scarborough, ON M1B 3C6
416.321.1100
416 321 1107
info@nava.law
clientservice@nava.law




















**Free Real Estate Class -** Call: **416.321.6969**










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

